தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வளர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009

# தமிழ்நாடு இபேப்பர்.காம்
www. tamilnaduepaper.com




CHENNAI | Volume- 3 | Issue:260 | 05-04-2026 | ஞாயிற்றுக்கிழமை | Free E- Paper | ●சென்னை ●மதுரை ●கோவை ●திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

05.04.2026 பங்குனி 22
ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் 6.09

திதி:
இன்று காலை 11.51 வரை
திரிதியை பின்பு சதுர்த்தி.

நட்சத்திரம்:
இன்று இரவு 11.49 வரை
விசாகம் பின்பு அனுஷம்.

யோகம் :
இன்று பிற்பகல் 2.25 வரை
வஜ்ரம் பின்பு சித்தி .

கரணம்
இன்று காலை 11.51 வரை
பத்திரை பின்பு பவம்.

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.08 வரை
சித்த யோகம் பின்பு
யோகம் சரியில்லை

சந்திராஷ்டமம் :
இன்று இரவு 11.49 வரை
ரேவதி பின்பு அசுவினி.

நல்ல நேரம்
காலை 7.30 – 8.30.
மாலை 3.30 – 4.30

இராகு காலம்
மாலை 4.30 – 6.00.

எமகண்டம்
பிற்பகல் 12.00 –1.30.

குளிகை
பிற்பகல் 3.00 – 4.30.

இன்று சங்கடஹர
சதுர்த்தி நாள்.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# இந்தித் திணிப்பை ஏற்கிறதா அதிமுக, என்டிஏ கூட்டணிக் கட்சிகள்?

**சென்னை, ஏப்.5:**

திமுக தலைவரும் முதல்வருமான மு.க. ஸ்டாலின் அவர் 'எக்ஸ்' பக்க பதிவில், தேசியக் கல்விக் கொள்கை 2020-ஐச் சார்ந்து, அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சி.பி.எஸ்.இ. பாடத்திட்டம் என்பது சாதாரண கல்விச் சீர்திருத்தம் அல்ல; அது மொழித் திணிப்பை நோக்கிய, நாம் நீண்டகாலமாக வெளிப்படுத்தி வந்த அச்சங்களை உறுதிப்படுத்தும் வகையிலான, நன்கு திட்டமிடப்பட்ட ஆழ்ந்த கவலைக்குரிய முயற்சியாகும்.

"இந்திய மொழிகளை ஊக்குவிக்கிறோம்" என்ற போர்வையில், இந்தியாவின் செழுமையான மற்றும் பன்மைத்துவம் நிறைந்த மொழிப் பாரம்பரியத்தைத் திட்டமிட்டு ஒதுக்கி, இந்திக்கு முன்னுரிமை அளித்து மையப்படுத்தும் செயலை அரசியல் நோக்கத்துடன் பா.ஜ.க. தலைமையிலான என்டிஏ அரசு தீவிரமாக முன்னெடுத்து வருகிறது. "மும்மொழிக் கொள்கை" என்பது, உண்மையில் இந்தி பேசாத மாநிலங்களில் இந்தியை விரிவுபடுத்தும் முயற்சியாகும்.

தென் மாநில மாணவர்களைப் பொறுத்தவரையில், இந்தத் திட்டம், கட்டாய இந்தி என்பதைக் கடந்து வேறேதுமில்லை. இருப்பினும், இதில் ஒருவருக்கொருவர் இடையிலான பரிமாற்றம் எங்கே இருக்கிறது? இந்தி பேசும் மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்கள், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் அல்லது வங்கம், மராத்தி



உள்ளிட்ட மொழிகளைக் கட்டாயமாகப் படிப்பார்களா? இதுகுறித்த தெளிவின்மை, இதிலுள்ள ஒருசார்பையும் - பாகுபாட்டையும் வெளிப்படுத்துகிறது.

இந்த முரண் வெளிப்படையானது, இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் தமிழைக் கட்டாயமாக்க முடியாத - தொடர்ச்சியாகப் போதிய தமிழாசிரியர்களை நியமிக்கத் தவறிய இதே ஒன்றிய அரசு, இந்திய மொழிகளை ஊக்குவிக்கிறோம் என்று மாநிலங்களுக்குப் பாடம் எடுக்க நினைக்கிறது. இது பொறுப்புணர்வல்ல; கபட நாடகத்தின் உச்சம்!

ஆசிரியர்களின் எண்ணிக்கை, போதிய பயிற்சிக்கான திறன் மற்றும் உட்கட்டமைப்பு ஆகியவை குறித்த உண்மைக் களநிலவரத்தை ஒன்றிய அரசு உணர்ந்திருக்கிறதா? இந்தச் செயல்திட்டத்தை அமல்படுத்த தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் எங்கே இருக்கிறார்கள்? கல்வித் துறையில் மிகப்பெரிய சுமையை ஏற்படுத்தும் இந்த நகர்வுக்கான நிதி ஆதாரம் எங்குள்ளது? எவ்விதத் திட்டமிடலும், வளங்களும், பொறுப்பும் இல்லாத உள்நோக்கம் கொண்ட மற்றுமோர் திட்டமாகவே இது தோன்றுகிறது.

இது மொழி குறித்த கேள்வி மட்டுமல்ல; நியாயம், கூட்டாட்சி மற்றும் சமவாய்ப்புகள் குறித்த கேள்விகளுமாகும். இந்தி பேசும் மாணவர்களைக் கட்டமைப்புரீதியான சலுகைகளை அளித்து, உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் அவர்களுக்கு ஆதாயம் ஏற்படுத்துவதோடு, மாநிலங்களுக்கிடையே மேலும் ஏற்றத்தாழ்வுகளையே இது உண்டாக்கும்.

முன்னெப்போதும் இல்லாத வேகத்தில் உலகம் முன்னோக்கி நகரும் வேளையில், நம் குழந்தைகள் எதிர்காலத்திற்காகத் தயாராக இருக்க வேண்டும். செயற்கை நுண்ணறிவு, அனிமேஷன் - விஷுவல் எஃபக்ட்ஸ் - கேமிங் - காமிக்ஸ் உள்ளிட்ட துறைகளில் அவர்களது திறனை மேம்படுத்தி, அவர்களது அறிவியல் பார்வையையும் திறனாய்வுச் சிந்தனையையும் ஊக்குவிக்க வேண்டும். மாறாக, இத்தகையபிற்போக்குத்தனமான, இறுக்கமான மொழிச் சுமை அவர்களது முன்னேற்றத்தைத் தடுப்பதாக உள்ளது.

தமிழ்நாடுஉள்ளிட்டபல்வேறு மாநிலங்கள் தொடர்ச்சியாக எழுப்பிய நியாயமான - ஜனநாயகப்பூர்வமான கவலைகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு, இந்தியைத் திணிப்பதில் மத்திய அரசு மும்முரமாக இருப்பது தெரிகிறது. இந்தச் செயல், கூட்டுறவுக் கூட்டாட்சியியலுக்கு எதிரானது, கோடிக்கணக்கான இந்தியர்களின் மொழி அடையாளங்களை நேரடியாக அவமதிக்கும் செயல்.

இந்தியாவின் வலிமை என்பது, பன்முகத்தன்மையில்தான் இருக்கிறதே தவிர, திணிக்கப்படும் ஒற்றைத்தன்மையில் இல்லை. இந்தச் சமநிலையைக் குலைக்கும் எத்தகைய முயற்சிகளும் தவறானவை மட்டுமல்ல, ஆபத்தானதுமாகும். நம் நாட்டின் அடிப்படையான பன்மைத்துவத்தையே தாக்கும் இத்தகைய கொள்கைகள் கடுமையாக எதிர்க்கப்பட வேண்டியவையாகும். எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அதிமுகவும், அதன் என்டிஏ கூட்டணிக் கட்சிகளும் இந்தத் திணிப்பை ஏற்றுக்கொள்கின்றனரா? அல்லது நமது மாணவர்களின் எதிர்காலம், அடையாளம் மற்றும் உரிமைகளுக்காக ஒரே ஒரு முறையாவது முதுகெலும்போடு எதிர்ப்பார்களா?

மொழித் திணிப்பை நோக்கிய, நாம் நீண்டகாலமாக வெளிப்படுத்தி வந்த அச்சங்களை உறுதிப்படுத்தும் நடவடிக்கை என அவர் கூறியுள்ளார்.

# "எல்டிஎஃப் அரசை அகற்ற கவுண்டவுன் தொடங்கிவிட்டது" கேரளாவில் பிரதமர் மோடி பேச்சு



**திருவல்லா, ஏப்.5:**

கேரளாவில் இடது ஜனநாயக முன்னணி (எல்டிஎஃப்) அரசாங்கத்தை அகற்றுவதற்கான கவுன்டவுன் தொடங்கிவிட்டது என்றும், பாஜக தலைமையிலான என்டிஏ கூட்டணி மாநிலத்தில் ஆட்சியை அமைக்கும் என்றும் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பத்தினம்திட்டா மாவட்டத்தின் திருவல்லா நகரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் உரை நிகழ்த்திய பாஜக மூத்த தலைவரும், பிரதமருமான நரேந்திர மோடி, "கேரளா மிகுந்த திறனைக் கொண்டுள்ள போதிலும் வளர்ச்சிக்கான போட்டியில் அது மற்ற மாநிலங்களைவிட பின்தங்கியே இருக்கிறது.

கேரளாவின் கிராமப்புறங்களில் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் குறைவாகவே உள்ளன. சிபிஎம் தலைமையிலான எல்டிஎஃப் கூட்டணியும், காங்கிரஸ் தலைமையிலான யுடிஎஃப் கூட்டணியும் போதிய கவனம் செலுத்தாததே இதற்குக் காரணம்.

கிறிஸ்தவ மக்கள் கணிசமான எண்ணிக்கையில் வசிக்கும் வட கிழக்கு மாநிலங்களிலும் கோவாவிலும் எத்தகைய வளர்ச்சித் திட்டங்களை என்டிஏ மேற்கொண்டதோ அதேபோல, கேரளாவிலும் என்டிஏ வளர்ச்சியை உறுதி செய்யும்.

கேரளாவில் பாஜக ஆட்சியில் இல்லாவிட்டாலும் மாநிலத்தின் வளர்ச்சிக்காக மத்தியில் உள்ள என்டிஏ அரசாங்கம் எந்த ஒரு முயற்சியையும் விட்டுவைக்கவில்லை. காங்கிரஸ் தலைமையிலான யுபிஏ ஆட்சிக் காலங்களைவிட கேரளாவின் வளர்ச்சிக்காக என்டிஏ அரசாங்கம் ஐந்து மடங்கு அதிக நிதியை செலவிட்டுள்ளது.

மாநிலத்தில் உள்ள இடதுசாரி அரசாங்கம் சபரி ரயில் திட்டத்தை வேண்டுமென்றே தாமதப்படுத்துகிறது. இதனால் திருவல்லா மக்களுக்கு மிகப் பெரிய இழப்பு ஏற்பட்டுள்ளது. கேரளாவில் பாஜகவின் இரட்டை என்ஜின் அரசாங்கம் ஆட்சிக்கு வரும்போது அனைத்து தடைகளும் அகற்றப்படும்.

எல்டிஎஃப் அரசாங்கத்துக்கு விடைகொடுக்க வேண்டும் என்ற வலுவான மனநிலை கேரளாவில் நிலவுவதை பாஜக தொண்டர்கள் உணர்த்துகின்றனர். எல்டிஎப் அரசாங்கத்தை அகற்றுவதற்கான கவுண்டவுன் தொடங்கிவிட்டது. பாஜக தலைமையிலான என்டிஏ கூட்டணி கேரளாவில் ஆட்சி அமைக்கும்" என தெரிவித்தார்.

# சென்னையில் பிரதமர் மோடி தலைமையில் பாஜக நிர்வாகிகளுடன் ஆலோசனைக் கூட்டம்

**சென்னை, ஏப்.5:**

சென்னையில் பா.ஜ.க. நிர்வாகிகளுடன் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் பா.ஜ.க.வின் மையக்குழு கூட்டம் நடைபெற்றது.

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி கட்சிகள் தீவிர பிரசாரம் மேற்கொண்டு வருகின்றன. அண்ணா திமுக தலைமையிலான கூட்டணியில் பாஜக போட்டியிடும் 27 தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் பட்டியல் நேற்று வெளியானது. மயிலாப்பூரில் தமிழிசை சௌந்தரராஜன், அவினாசியில் எல். முருகன், கோவை வடக்கில் வானதி சீனிவாசன், சாத்தூரில் நயினார் நாகேந்திரன், விளவங்கோடு தொகுதியில் எஸ். விஜயதாரணி ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

புதுச்சேரியில் பிரசாரம் செய்வதற்காக நேற்று பிற்பகல் சென்னை வந்த பிரதமர், புதுச்சேரிக்கு சென்று அங்கு தேர்தல் பிரச்சாரம் செய்தார். திறந்த வேனில் பிரச்சாரம் செய்த அவர் பா.ஜ.க. கூட்டணி கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்தார். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு சென்னை வந்த பிரதமர் சென்னையில்



உள்ள நட்சத்திர ஓட்டலில் தங்கினார்.

தொடர்ந்து இன்று காலை சென்னையில் பிரதமர் மோடி தலைமையில் பாஜகவின் மையக்குழு கூட்டம் நடைபெற்றது. மையக்குழுவைச் சேர்ந்த 18 பேரும் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர். மேலும் மத்திய அமைச்சர் பியூஷ் கோயல், எல். முருகன், நயினார் நாகேந்திரன், அண்ணாமலை, தமிழிசை சௌந்தரராஜன், வானதி ஸ்ரீனிவாசன் ஆகியோர் பங்கேற்றனர். தேர்தல் வியூகத்தில் குறிப்பாக பாஜகவினுடைய வியூகம் எப்படி இருக்க வேண்டும், தேர்தல் பணிகளை விரைவுப்படுத்துவது குறித்து ஆலோசனை செய்யப்பட உள்ளது. தேர்தல் பிரசாரம், பொதுக்கூட்டங்கள் உள்ளிட்ட பணிகள் தொடர்பாகவும் ஆலோசிக்கப் பட்டதாகக் கூறப்படுகிறது.

# சாத்தான்குளம் வழக்கில் 9 போலீஸாருக்கும் அதிகபட்ச தண்டனை: மத்திய அரசு மனுவில் தகவல்

**மதுரை, ஏப்.5:**

சாத்தான்குளத்தைச் சேர்ந்தவர் ஜெயராஜ். இவர் மகன் பென்னிக்ஸ். இவர்கள் சாத்தான்குளத்தில் செல்போன் கடை நடத்தி வந்தனர்.

கடந்த 2020 ஜூன் 19-ல் கரோனா ஊரடங்கு கட்டுப்பாட்டு நேரம் தாண்டி கடையை திறந்து வைத்திருந்ததாகக் கூறி ஜெயராஜ், பென்னிக்ஸ் இருவரையும் சாத்தான்குளம் போலீஸார் விசாரணைக்காக காவல் நிலையம் அழைத்துச் சென்றனர்.

பின்னர் காவல் நிலையத்தில் வைத்து இரவு முழுவதும் போலீஸார் தாக்கியதில் முதலில் பென்னிக்ஸ், அடுத்து ஜெயராஜ் உயிரிழந்தனர். இது தொடர்பாக காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், சார்பு ஆய்வாளர்கள் பாலகிருஷ்ணன், ரகுகணேஷ், காவலர்கள் முருகன், சாமதுரை, முத்துராஜா, செல்லத்துரை, தாமஸ் பிரான்சிஸ், வெயிலுமுத்து ஆகியோரை சிபிஐ கைது செய்தது.

இந்த வழக்கை மதுரை மாவட்ட முதலாவது கூடுதல் நீதிமன்ற நீதிபதி முத்துக்குமரன் விசாரித்து 9 பேரும் குற்றவாளிகள் என அறிவித்தார்.

பின்னர் இவர்களுக்கான தண்டனை தொடர்பாக



மத்திய, மாநில அரசுகள் பதிலளிக்கவும், 9 பேரின் உடல் நிலை, மனநிலை குறித்து மருத்துவர்கள் அறிக்கை தாக்கல் செய்யவும் நீதிபதி உத்தரவிட்டார்.

அதன்படி மாநில அரசு சார்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது. மருத்துவ அறிக்கைகளும் தாக்கல் செய்யப்பட்டன.

பின்னர் நடைபெற்ற விசாரணையில் சிபிஐ தரப்பிலும், ஜெயராஜ், பென்னிக்ஸ் தரப்பிலும், 'அரிதினும் அரிதான வழக்காக கருதி 9 பேருக்கும்தூக்கு தண்டனை வழங்க வேண்டும்' என வாதிடப்பட்டது.

மனுதாரர் சார்பில் 'தந்தை, மகன் இருவரும் திட்டமிட்டு கொலை செய்யப்படவில்லை. திடீர் ஆத்திரம் காரணமாக நடந்த சம்பவத்தில் இருவரும் உயிரிழந்துள்ளனர். இதனால் குறைந்தபட்ச தண்டனை வழங்க வேண்டும்' என வாதிடப்பட்டது. பின்னர் 9 பேருக்கும் ஏப். 6-ல் தண்டனை அறிவிக்கப்படும் என்று கூறி விசார ணையை நீதிபதி தள்ளிவைத்தார்.

**பாரபட்சம், கருணை காட்டக் கூடாது**

இந்நிலையில் சாத்தான்குளம் வழக்கு தொடர்பாக மத்திய அரசு சார்பில் விசாரணை நீதிமன்றத்தில் மின்னஞ்சல் வழியாக பதில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதில், சாத்தான்குளம் கொலை வழக்கு போலீஸ் காவல் மரணமாகும். இதில் குற்றவாளிகளுக்கு பாரபட்சம், கருணை காட்டக் கூடாது. அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS
➤ Public Notice
➤ Legal Notice
➤ Tender Notice
➤ Society Notice
➤ Loss of Share
➤ Merger
➤ Acquisition
➤ AFR, UFR, etc.
for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர்
✆ : 9337501889, 7789941009
Email: anandabhaskarnews@gmail.com



## திருக்குறள் குறள்-580

பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்



எவராலும் விரும்பத்தக்க
நாகரிகமான
கண்ணோட்டத்தை
விரும்புகின்றவர், பழகியவர்
தமக்கு நஞ்சு இடக்கண்டும்
அதை உண்டு அமைவர்.

## சிந்திக்க ஒரு நொடி



வாழ்ந்தவனுக்கு அவனுடைய
அனுபவம் பதில்
சொல்லும்....
வாழ்பவனுக்கு
அவன் காலம் பதில்
சொல்லும்.....
வாழப் போகிறவனுக்கு
அவன் மனம் பதில்
சொல்லும்....

**உஷா முத்துராமன்**

## ஆர்.கே.நகர் சட்டமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளர் ஜே.ஜே.எபினேசர் வாக்கு சேகரிப்பு



மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பாக, நேற்று ஆர்.கே.நகர் சட்டமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளர் ஜே.ஜே.எபினேசர் அவர்கள் ஆர்.கே.நகர் 3வது சர்க்கிள் மேற்கு பகுதி 38-வது வட்டத்தில் வாக்கு கேட்டு பிரச்சாரத்தை தொடங்கினார். இந்நிகழ்ச்சியில் வடசென்னை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் திருமதி.மதாரம்மா கனி பாரூக் அவர்கள் வேட்பாளருடன் கலந்துகொண்டு வீதி வீதியாக சென்று பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார். உடன் முன்னாள் மாவட்ட தலைவர் T.V.துரைராஜ், மாவட்ட அமைப்பு செயலாளர் I.முகமது பாரூக், மாவட்ட பொருளாளர் B.கார்த்திகேயன், சர்க்கிள் தலைவர்கள் வால்டாக்ஸ் ரோடு J.ரமேஷ், S.K.வீராரெட்டி, கூடுதல் பொறுப்பாளர்கள் D.K. மூர்த்தி, M.மோகன்குமார், செய்தி தொடர்பாளர் D.B.பாஸ்கர், வட்ட தலைவர்கள் உட்பட காங்கிரஸ் பேரியக்க நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்துகொண்டு வாக்கு சேகரித்தனர்.

## வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி அதிமுக வேட்பாளர் செந்தில்குமார் வேட்பு மனுவை தாக்கல்



திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி அதிமுக வேட்பாளர் செந்தில்குமார் அதிமுக தேர்தல் அலுவலகத்தில் 1000 க்கும் மேற்பட்ட கழக நிர்வாகிகள் தொண்டர்கள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் தொண்டர்களுடன் ஊர்வலமாக சென்று வாணியம்பாடி கோட்டாட்சியர் அலுவலகத்தில் வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி தேர்தல் அலுவலர் அஜிதாபேகத்திடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். அப்போது முன்னாள் எம் எல் ஏ கோ வி சம்பத்குமார், கழக மருத்துவர் மாநில இணை செயலாளர் டாக்டர் பசுபதி,நகர கழக செயலாளர் சதாசிவம், நாட்றம்பள்ளி ஒன்றிய கழக செயலாளர் சாம்ராஜ் உதயேந்திரம் பேரூராட்சி கழக செயலாளர் சரவணன் மற்றும் பாஜக பாமக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## இந்திய முஸ்லிம் லீக் வேட்பாளர் SSB.சையத் பாரூக் வாக்கு சேகரிப்பு



திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி, மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி, இந்திய முஸ்லிம் லீக் வேட்பாளர் SSB.சையத் பாரூக் அவர்களுக்கு ஏணி சின்னத்தில் வாக்களிக்குமாறு வாணியம்பாடி நகரில் உள்ள முக்கிய பள்ளிவாசல்களில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், இந்திய முஸ்லிம் லீக் மாநில துணைத் தலைவர் அப்துல் ரகுமான் ex.MP வாணியம்பாடி நகர கழக செயலாளர், நகர மன்ற உறுப்பினர் V.S.சாரதி குமார் BE.,MC வாக்கு சேகரித்தனர். நிகழ்வில் மாவட்ட தலைவர் ஜனாப் S.T. நிசார் கூட்டணி கட்சி நிர்வாகிகள், நகர கழக நிர்வாகிகள், தேர்தல் ஒருங்கிணைப்பு குழு ஒருங்கிணைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.

## திருநாங்கூர் திவ்ய தேசம்



ஸ்ரீபுருசோத்தம நாயகி சமேத ஸ்ரீ புருஷோத்தம பெருமாள் ப்ரம்மோற்சவம் முதல் நாள் காலை ஸ்ரீகருடத்வஜம் திருவீதி புறப்பாடு த்வஜாரோஹணம் (பிரஹாரம்) புறப்பாடு (தங்க மங்களகிரி) கம்பமாகடலடைத்து இலங்கைக்குமன் கதிர்முடி யவைபத்தும் அம்பினாலறுத்து அரசுஅவந்தம்பிக்கு அளித்தவனுறைகோயில்"செம்பலாநிரைசெண்பகம்மாதலி சூதகம்வாழைகள்சூழ் வம்புலாம்கமுகோங்கியநாங்கூர் வண்புருடோத்தமமே! என்று திருமங்கை ஆழ்வாரால் மங்களாஸாஸணம் செய்யப்பட்டதும்

## இலங்கை நாட்டுக்கு சென்றுள்ள தன்முனைக் கவிதைகளின் தந்தை முனைவர் கா. ந.கல்யாண சுந்தரத்துக்கு கொழும்புவில் வரவேற்பு



**கொழும்பு, ஏப்.05:** இலங்கை நாட்டுக்கு சென்றுள்ள தன்முனைக் கவிதைகளின் தந்தை முனைவர் கா. ந.கல்யாண சுந்தரம் அவர்களுக்கு கொழும்புவில் இலங்கைக் கவிஞர்களால் சிறப் பான வரவேற்பு அளிக்கப் பட்டது. கொழும்பு பொன்னம்பலேஸ்வரர் ஆலயத்தில் கவிஞர்கள் எம் பி எஸ் பாலா மற்றும் தாமரைச்செல்வி ஆகியோர் பொன்னாடை அணிவித்தும் நினைவுப்பரிசுகள் வழங்கியும் வரவேற்றனர்.

கவிஞர் தாமரைச் செல்விக்கு முனைவர் கா.ந.கல்யாண சுந்தரம் தன்முனைக் கவிக்கோ விருதளித்து பாராட்டினார். இவர்களுடன் பாடகி சுகுணா, தாமரைச்செல்வியின் சகோதரர் மற்றும் எம் பி எஸ் பாலாவின் பேரனும் நிகழ்வில் இடம்பெற்றனர்.

முன்னதாக டாக்டர் பிரதீப்குமார் அவர்கள் கொழும்பு விமானநிலையத்தில் வந்திருந்து கவிச்சுடர் கா ந கல்யாணசுந்தரம் மற்றும் குடும்பத்தினரை வரவேற்றார்.

இலங்கைக்கவிஞர்களின் அன்பும் ஆதரவும் அளப்பரியதாக உள்ளதை நினைத்து மகிழ்கிறோம். சுற்றுலாவின் தொடக்கமே இலங்கை மண்ணில் தமிழின் மணத்தோடு தொடங்கியது பெருமையாக உள்ளது என்றும் முனைவர் கா. ந. கல்யாணசுந்தரமும் அவரது துணைவியார் அருள்செல்வியும்நன்றியுடன் கூறினர்.

## தண்டலை நடுநிலைப்பள்ளியில் ஆண்டு விழா கொண்டாட்டம்

**புதுக்கோட்டை, ஏப்.05:** புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி ஒன்றியம் தண்டலை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 64 ஆம் ஆண்டு விழா பள்ளியின் தலைமை ஆசிரியர் சந்திரசேகரன் தலைமையில் கொண்டாடப்பட்டது முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் திரு விஜயன் அவர்கள் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் திரு பாலு அவர்களது ஆலோசனைப்படி பள்ளியின் முன்னாள் மாணவர் முன்னாள் கூட்டுறவு சங்க செயலாளர் திரு ரவிச்சந்திரன் பள்ளி மேலாண்மை குழு தலைவர் திருமதி உஷாராணி ஆவுடையார் கோவில் ஒன்றிய வட்டார வளமைய மேற்பார்வையாளர் திரு முத்துராமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர் விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் தலைமை ஆசிரியர் வரவேற்றார் பள்ளியின் ஆசிரியர் சீனிவாசன் ஆண்டறிக்கை வாசித்து வாழ்த்துரைகளை தொகுத்து வழங்கினார் மாணவர்களின் பேச்சு ,நடனம், நாடகம் ஆகிய கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன பள்ளியில் படிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் சில்வர் வாட்டர் பாட்டில், ஷீல்ட், மெடல் ஆகியவை கிராம பொதுமக்கள் மற்றும் நன்கொடையாளர்களால் வழங்கப்பட்டது.



விழாவில் பங்கு பெற்ற அனைத்து குழந்தைகளுக்கும் தண்டலை கிராம இளைஞர்கள் மற்றும் முன்னாள் மாணவர்கள் சார்பாக இரவு உணவு வழங்கப்பட்டது முன்னாள் மாணவர்களை திரு சரவணன் மற்றும் திரு செந்தில் குமார் ஆகியோர் ஒருங்கிணைத்து அனைத்து நிகழ்வுகளையும் சிறப்புடன் செய்து இருந்தனர் விழாவில் ஆசிரியர்கள் தேன்மொழி, மாலதி, சரண்ராஜ் மற்றும் பிரதீபா ஆகிய நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்கள் இப்பள்ளியில் பணியாற்றி ஓய்வு பெற்ற ஆசிரியை திருமணி கிரேசி, சத்துணவு பணியாளர்கள், காலை உணவு பணியாளர்கள், முன்னாள் மாணவர்கள், மற்றும் கிராம பொதுமக்கள் என சுமார் 500க்கும் மேற்பட்டோர் விழாவில் கலந்து கொண்டனர் நிறைவாக ஆசிரியர் சரண்ராஜ் நன்றி கூறினார்

## சோகத்தூர் யோக நரசிம்மருக்கு பங்குனி மாத ஸ்வாதி விழா..!

**வந்தவாசி , ஏப் 05:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த சோகத்தூர் கிராமத்தில் உள்ள ஸ்ரீ அமிர்தவல்லி நாயிகா சமேத ஸ்ரீ யோக நரசிம்மர் திருக்கோயிலில் நரசிம்ம மூர்த்திக்கு ஸ்வாதி நட்சத்திரம் முன்னிட்டு ஸ்வாதி விழா வெகு விமரிசையாக நடைபெற்றது. இந்த வைபவத்தில் மூல மூர்த்திகளுக்கு புதிய வஸ்திரம், பூமாலைகள் சாற்றப்பட்டு மகா தீபாராதனை நடந்தேறியது. மேலும் யாகசாலை பூஜைகள் நடைபெற்றது. தொடர்ந்து சாத்துமுறை, யாகத்திற்கான கலசத்தில் சங்கல்பம் செய்து உலக நன்மைக்காக கூட்டுப் பிராத்தனை செய்யப்பட்டது. இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டு நரஸிம்மரின் அருளை பெற்றனர். பங்கேற்ற அனைவருக்கும் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்பட்டது.





**பா. சீனிவாசன், வந்தவாசி.**

## கே.வி.குப்பம் தொகுதி திமுக வேட்பாளர் ராஜேஸ்வரி மனு தாக்கல்!



**வேலூர், ஏப். 05:** வேலூர் மாவட்டம், கே.வி.குப்பம் (தனி) தொகுதி திமுக வேட்பாளர் டாக்டர். ராஜேஸ்வரி மோகன்காந்தியை ஆதரித்து, வேலூர் நாடாளுமன்ற உறுப்பினரும்,வேலூர் வடக்கு தொகுதி பொறுப்பாளருமான டி.எம்.கதிர் ஆனந்த், கே.வி.குப்பம் மத்திய,மேற்கு,கிழக்கு ஒன்றிய செயலாளர்களான எல்.ரவிச்சந்திரன், கே.சீதாராமன், ஆர்.முருகேசன் ஆகியோர் தலைமையில், திமுக அனைத்து பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் தொண்டர்களுடன், கூட்டணி கட்சிகளான காங்கிரஸ், விசிக,மதிமுக, தேமுதிக, கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் அனைத்து கூட்டணி கட்சி பொறுப்பாளர்களும் கலந்து கொண்டு பெருந்திரளான பிரமாண்டமான ஊர்வலத்துடன் வேட்பு மனு தாக்கல் செய்வதற்காக கே.வி.குப்பம் பேருந்து நிலையம் வழியாக சென்று, கே.வி. குப்பம் வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் அதிகாரியிடம் வேட்பு மனு தாக்கல் செய்தனர்.

## ஆதி கேசவப் பெருமாள் பிரம்மோற்சவம் கொடியேற்றம்



மயிலை ஆதி கேசவப் பெருமாள் பிரம்மோற்சவம் கொடியேற்றம்

## ஸ்ரீகோமளவல்லி தாயார் திருக்கல்யாண உத்சவம்



கும்பகோணம் ஸ்ரீசாரங்கபாணி ஸ்வாமி கோவில் ஸ்ரீகோமளவல்லி தாயார் திருக்கல்யாண உத்சவம் மிக சிறப்பாக நடந்தது.

## ஸ்ரீ பக்தவத்சலப் பெருமாள் – விஸ்வாவசு பங்குனி பிரம்மோத்ஸவம்



திருநின்றவூர் ஸ்ரீமத்ஸவித்ரி நாயிகா சமேத ஸ்ரீ பக்தவத்சலப் பெருமாள் - விஸ்வாவசு பங்குனி பிரம்மோத்ஸவம் - 2026 முதல் திருநாள் காலை -த்வஜாரோகணம் புறப்பாடு

## ஸ்ரீ புண்டரீகாக்ஷப் பெருமாள் பங்குனி ரத உற்சவம்



அருள்மிகு திருவெள்ளறை ஸ்ரீ புண்டரீகாக்ஷப் பெருமாள் பங்குனி ரத உற்சவம் முதல் திருநாள் அதிகாலை துவஜாரோஹணம் (கொடியேற்றம்) மேஷ லக்னத்தில் நடந்தது.

## தீர்த்தவாரி உத்ஸவம்

மதுரை ஸ்ரீ பிரசன்ன வெங்கடேச பெருமாள் தீர்த்தவாரி உத்ஸவம் கள்ளர் திருக் கோலத்தில் புஷ்ப பல்லக்கில் திருக்கோயில் எழுந்தருளல்.



# தேர்தல் கொண்டாட்டம் 2026



## தேர்தல் களப்பணியில்...

### தனியாக பிரச்சாரத்தில் ஈடுபட்ட திருத்தணி தவெக வேட்பாளர்



தவெக நிர்வாகிகள், தொண்டர்கள் தேர்தல் பணிகளை புறக்கணித்ததால், திருத்தணி தவெக வேட்பாளர் சத்யகுமார் தன்னந்தனியாக தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டதால், பரபரப்பு ஏற்பட்டது.

திருத்தணி சட்டப்பேரவை தொகுதி வேட்பாளரான, தவெக தேசிய செய்தி தொடர்பாளர் சத்யகுமார், சில தினங்களுக்கு முன் திருத்தணி நகருக்கு வந்தார். அப்போது ஆர் வத்துடன், தொகுதியின் கட்சி நிர்வாகிகள் சத்யகுமாரை சந்திக்க வந்தனர்.

அப்போது வேட்பாளர் சத்யகுமார், நிர்வாகிகளை மதிக்காமல் தகாத வார்த்தைகளால் பேசியதாக கூறப்படுகிறது. இதனால் சத்யகுமார் மீது அதிருப்தியில் இருக்கும் தொகுதியை சேர்ந்த தவெக நிர்வாகிகள், சத்யகுமாரை மாற்றி வேறு வேட்பாளரை கட்சி தலைமை அறிவிக்க கோரி, தேர்தல் பணிகளை புறக்கணித்து வருகின்றனர்.

தவெக வேட்பாளர் சத்யகுமார் வேட்பு மனு தாக்கல் செய்ய எதிர்ப்பு தெரிவித்து, திருத்தணி கோட்டாட்சியர் அலுவலகம் அருகே சென்னை - திருப்பதி தேசிய நெடுஞ்சாலையில் 50-க்கும் மேற்பட்ட தவெகவினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நேற்று முன்தினம் மதியம் 2.45 மணியளவில் தவெக வேட்பாளர் சத்யகுமார், மாவட்ட செயலாளர் டில்லிபாபு மற்றும் கட்சியின் முக்கிய நிர்வாகி களை கூட அழைத்து செல்லாமல் தனியாக திருத்தணி கோட்டாட்சியர் அலுவலகத்துக்கு சென்று வேட்புமனு தாக்கல் செய்தார்.

இந்நிலையில், தவெக வேட்பாளர் சத்யகுமார் நேற்று திருத்தணி நகரில், கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் யாரும் இல்லாமல் தன்னந்தனியாக தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். அப்போது, அவர் பைபாஸ் சாலை உள்ளிட்ட பகுதிகளில் தனியாக நடந்து சென்று, தேநீர் கடைகள், பெட்ரோல் பங்க் மற்றும் சாலையில் நடந்து சென்றவர்களிடம் விசில் சின்னத்துக்கு வாக்களிக்குமாறு பிரச்சாரம் செய்தார். இதனால், திருத்தணியில் பரபரப்பு ஏற்பட்டது.

### "விஜய்யும், சீமானும் ஓட்டுகளை பிரிப்பது திமுக கூட்டணிக்கே சாதகம்" - மு.வீரபாண்டியன்

"விஜய்யும், சீமானும் ஓட்டுகளை பிரிப்பதால் திமுக கூட்டணியின் வெற்றி மிகவும் எளிதாகும்" என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் தெரிவித்தார்.

கோவில்பட்டி தொகுதி திமுக வேட்பாளர் கருணாநிதிக்கு ஆதரவு திரட்டும் வகையில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. இதில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் பேசியது: "ஒரு கட்சி வெற்றி பெறலாம், தோற்கலாம். ஆனால் ஜனநாயகம் தோற்றுவிடக் கூடாது.

பாஜகவும், ஆர்எஸ்எஸ் அமைபும் பேரபாயம். இந்த தேர்தலில் பாஜக இல்லாமல் அதிமுக தனித்து நின்றிருந்தால் கடுமையான போட்டி இருந்திருக்கும், ஆனால், பாஜகவை அதிமுக அழைத்து வருவதால் திமுக தலைமையிலான கூட்டணிக்கு வெற்றி என்பது மிக இலகுவாகிவிட்டது.

அமைதியாக இருக்கும் தமிழகத்தை பாஜக கெடுக்க முயற்சிக்கிறது. இது தமிழக மக்களுக்கு தெரியும். விஜய்யும், சீமானும் ஓட்டுகளை பிரிப்பார்கள். எனவே, இன்னும் பிரம்மாண்டமான வெற்றியை திமுக கூட்டணி அடையும்" என்று அவர் கூறினார்.

இந்த தேர்தலில் எத்தனை முனை போட்டி நிலவினாலும் எதிரில் இருப்பவர்களுக்கு கூடத் தெரியும், தேர்தல் முடிவுகள் எப்படி இருக்கும் என்று.

### "எதிர்க்கட்சி அந்தஸ்து கூட அதிமுகவுக்கு கிடைப்பது சந்தேகம்" - பிரேமலதா

"எதிர்க்கட்சி அந்தஸ்து கூட அதிமுக-வுக்கு கிடைப்பது சந்தேகம்" என தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்தார்.

அம்பத்தூர் தொகுதியில் போட்டியிடும் திமுக வேட்பாளர் அ.பு.பூர்ணிமாவை ஆதரித்து பிரேமலதா விஜயகாந்த், பாடியில் நேற்று பிரச்சாரம் செய்தார். அதிமுக-வுக்கு எதிர்கட்சி அந்தஸ்து கூட கிடைக்குமா என்பது சந்தேகம். மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி, மறைந்த தேமுதிக தலைவர் விஜயகாந்த், முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆகியோரின் ஆசியுடன் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி, தமிழகத்தில் 200-க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வென்று ஆட்சி அமைக்கும். இவ்வாறு அவர் பேசினார். இதே போல் தேமுதிக வேட்பாளர் அனகை முருகேசனை ஆதரித்து பல்லாவரத்திலும் பிரேமலதா பிரச்சாரம் மேற்கொண்டார்.

## சிறுபான்மையின வேஷம் போடும் கூட்டணியை நம்பாதீர்கள்: புதுவையில் விஜய் பேச்சு



புதுவை தட்டாஞ்சவாடியில் விஜய் பிரசாரம் செய்தார். அப்போது அவர் கூறியதாவது: சிறுபான்மையின வேஷம் போடும் கூட்டணியை நம்பாதீர்கள். திமுக கூட்டணி வேண்டாம், பாஜக கூட்டணியும் வேண்டாம்.

புதுவை மாநில அந்தஸ்து கோரிக்கையை இரு கட்சிகளுமே நிறைவேற்றவில்லை. பாஜக-என்.ஆர். காங்கிரஸ் கூடி சேர்ந்த கூட்டணி இல்லை; சேர்ந்திருக்க முடியாமல் சேர்ந்துள்ள கூட்டணி. நாம் யாரோடும் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஒட்டி உறவாடவில்லை. தில்லாக, கெத்தாக தனித்து நிற்கிறோம்

பொருந்தாத கூட்டணிக்கும், ஓட்டை உடைசல் கூட்டணிக்கும் ஓட்டு போட்டு தயவு செய்து ஏமாந்துவிடாதீர்கள். ஒருத்தரை ஒருத்தர் முழுங்கி ஏப்பம் விடப் பார்க்கும் இந்த இரண்டு கூட்டணியும் உங்களுக்கு ஒன்றுமே செய்யாது. உங்களுக்கு நல்லாட்சி வேண்டும், நம்பிக்கையான ஆட்சி வேண்டும். அதனால், திமுக-காங்கிரஸ் கூட்டணியும் வேண்டாம்; பாஜக இருக்கும் கூட்டணியும் வேண்டாம். மக்களோடு மக்களாக நிற்கிற தவெக வேட்பாளர்களுக்கு தயவு செய்து ஓட்டு போடுங்கள். உங்கள் விஜய்க்கு ஓட்டு போடுவதாக நினைத்து ஓட்டு போடுங்கள். உங்கள் தேவைகள் நிறைவேற தவெக துணை நிற்கும். எங்களுக்கு ஒரே ஒரு வாய்ப்பு கொடுங்கள். இந்த விஜய் உங்களுக்கு துணை நிற்பான். தமிழ்நாட்டை போலவே புதுவையிலும் தவெக ஆட்சி அமைய வேண்டும்," என்றார்.

தொடர்ந்து புதுவைக்கான வாக்குறுதிகளை அளித்து விஜய் கூறியதாவது:

துணை நிலை ஆளுநரின் தலையீடு இல்லாத முழு மாநில அந்தஸ்து பெற முயற்சிப்போம்.

டிவிகே ஆட்சி அமைந்த 6 மாதங்களில் உள்ளாட்சி தேர்தல் நடைபெறும்.

25 ஆயிரம் ரூபாய் மகப்பேறு உதவி தொகையாக வழங்கப்படும்.

அரசு வேலைகளில் உள்ள காலியிடங்கள் நிரப்பப்படும். 100 சதவீதம் பயிர் காப்பீடு வழங்கப்படும்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் 25 லட்சம் ரூபாய் மருத்துவ காப்பீடு வழங்கப்படும்.

வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு 200 யூனிட் வரை கட்டணமின்றி மின்சாரம் வழங்கப்படும்.

## திமுகவின் 28 வயது இளம் வேட்பாளருக்கு எதிராக களமிறங்கிய எல்.முருகன்



தமிழக சட்டசபை தேர்தல் அடுத்த மாதம் 23-ந்தேதி நடைபெற உள்ளது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் மே 4-ந்தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அன்றே அறிவிக்கப்பட உள்ளன. இந்த தேர்தலில் திமுக கூட்டணி, அதிமுக கூட்டணி, தமிழக வெற்றிக் கழகம், நாம் தமிழர் கட்சி என 4 முனை போட்டி நிலவுகிறது.

திமுக சார்பில் அவினாசி தனி தொகுதியில் அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த 28 வயது இளம் பெண் மருத்துவர் வெ.கோகிலாமணி வேட்பாளராக களமிறக்கப்பட்டுள்ளார். இவர் அவினாசி ஆரம்ப சுகாதார நிலையத்தில் அரசு மருத்துவராக பணியாற்றி வருகிறார்.

இந்த நிலையில் இன்று அதிமுக கூட்டணியில் இடம்பெற்றுள்ள பாஜக வேட்பாளர் பட்டியலை வெளியிட்டது. இதில் அதிமுக கூட்டணியில் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அவினாசி தொகுதியில் மத்திய இணை மந்திரி எல்.முருகன் போட்டியிட உள்ளதாக பாஜக அறிவித்துள்ளது. இதன் மூலம் திமுகவின் இளம் வயது வேட்பாளர் கோகிலாமணியை எதிர்த்து எல்.முருகன் களம் இறங்கியுள்ளார்.

அவினாசி தொகுதியை பொறுத்தவரை 1984 முதல் 2021 வரையிலான 9 தேர்தல்களில் அதிமுக 8 முறை வெற்றி பெற்றுள்ளது.

எனவே இந்த தொகுதியை அதிமுக எப்போதும் விட்டுக் கொடுத்ததில்லை. முதல்முறையாக பாஜகவுக்கு விட்டுக் கொடுத்துள்ளது. அவினாசி தொகுதியில் தவெக சார்பில் கமலியும், நாம் தமிழர் கட்சி சார்பில் மேனகாவும் போட்டியிடுகின்றனர். இந்த தொகுதியில் யார் வெல்வார் என்ற எதிர்பார்ப்பு மக்களிடையே அதிகரித்துள்ளது.

## 'தேர்தலுக்கு பிறகு காங்கிரஸ் மாநில தலைவர் பதவியில் இருந்து விலகிவிடுவேன்' - செல்வப்பெருந்தகை

தமிழக சட்டசபை தேர்தல் அடுத்த மாதம் 23-ந்தேதி நடைபெற உள்ளது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் மே 4-ந்தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அன்றே அறிவிக்கப்பட உள்ளன. தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றுள்ள காங்கிரஸ் கட்சிக்கு 28 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இதன்படி, காங்கிரஸ் மாநில தலைவர் செல்வப்பெருந்தகை ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் போட்டியிட உள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், தேர்தலுக்கு பிறகு காங்கிரஸ் மாநில தலைவர் பதவியில் இருந்து விலகி, தொகுதி பணிகளில் முழுமையாக கவனம் செலுத்த உள்ளதாக செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார். இது குறித்து செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது;-

"தேர்தல் முடிவுகள் வந்த பிறகு என்னுடைய பணி முழுவதும் ஸ்ரீபெரும்புதூர் தொகுதி மக்களுக்காக மட்டுமே இருக்கும். அதில் எந்தவித மாற்றமும் கிடையாது. தேர்தல் முடிவுகள் வந்தபிறகு எங்கள் அகில இந்திய தலைமையிடம் பேசி தொகுதி வேலையையும், தமிழ்நாட்டு வேலையையும் மட்டும்தான் பார்க்கப் போகிறேன்.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் நூற்றுக்கு நூறு வெற்றியை பெற்றுத் தந்தோம். எதிர்வரும் சட்டமன்ற தேர்தலிலும் நூற்றுக்கு நூறு வெற்றியை பெறப்போகிறோம். பதவியை விட்டு விலகும்போது மனநிறைவோடு விலக வேண்டும். நான் மனநிறைவோடு மாநில தலைவர் பதவியில் இருந்து விலகுவேன். அதே சமயம், பதவி விலகக் கோரி எனக்கு எந்த அழுத்தமும் கிடையாது. அடுத்த 5 ஆண்டுகளுக்கு கூட நான் தலைவராக இருப்பேன். நான் எந்த பதவி கேட்டாலும் ராகுல் காந்தி கொடுப்பார்.

மாநில தலைவராக 2 ஆண்டுகளில் என்னென்ன பணிகள் செய்துள்ளேன் என்பது எங்கள் தலைவர்களுக்கு தெரியும்.

## திமுக மேல அப்டி என்ன கோபம்னு சொல்லுங்க..இயக்குனர் சேரன்

வரும் தேர்தலில் திமுகவிற்கும் தவெகவிற்கும் இடையேதான் போட்டி என்று பேசும் விஜய், திமுக மற்றும் முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலினை கடுமையாக விமர்சித்து வருகிறார். பாஜக குறித்தோ, அதிமுக பற்றியோ அதிகம் விமர்சிப்பது இல்லை. இந்த நிலையில், விஜய்யின் இந்த விமர்சனம் பற்றி இயக்குனர் சேரன் கேள்வி எழுப்பும் வகையில் பதிவிட்டுள்ளார். இயக்குனர் சேரன் கூறியிருப்பதாவது:

புதுசா கட்சி ஆரம்பிச்சு மக்கள்கிட்ட ஓட்டு கேட்க வந்தா மக்களுக்கு என்ன பிரச்சினை இருக்கு அதை தனது கட்சி எப்படி தீர்க்கும், நாட்டில் என்ன என்ன மாற்றங்கள் கொண்டு வரலாம்.. அதற்கு தன்கிட்ட என்ன என்ன திட்டங்கள் இருக்குன்னு பேசனுமா இல்ல உங்களுக்கு ஸ்டாலின் வேணுமா இல்ல நான் வேணுமான்னு கேட்டா அந்த தகுதி போதுமா ஒரு நாட்டை ஆள.. உங்க இருவருக்கும் என்ன பிரச்சினைன்னு எங்களுக்கு தெரியல.. உங்க ரசிகர்களுக்கே தெரியாதுன்னு நினைக்கிறேன். அது என்ன எப்ப வந்தாலும் ரெண்டு கட்சிக்குத்தான் போட்டி... அப்படி என்ன உங்களுக்கு திமுக மேல கோபம்னு எங்களுக்கும் சொல்லுங்க விஜய்... நாங்களும் சப்போர்ட் பன்றோம்.. சொல்லாம நீங்க மட்டும் சினிமா டயலாக் பேசுனா ஏன் ஓட்டு போடனும்னு மக்கள் கேக்குறாங்கள்ல.. இங்க ஐம்பது வருஷமா இருக்க கட்சிகள் மற்றும் பதினைந்து வருஷமா மக்களோட மக்களா களத்துல நின்னு போராடி, புதிய மாற்றத்தோடு தமிழகத்தை உருவாக்க மக்கள்கிட்ட வாக்கு சேகரிக்கும் கட்சிகள் எல்லாம் நிறைய இருக்கு.. எந்த விதத்துல நீங்க அந்த கட்சிகளை விட உயர்வு சொல்லுங்க... எந்த போராட்டத்துல மக்களுக்காக மக்கள் கூட நின்னு இருக்கீங்க இங்க ரெண்டு கட்சிக்குத்தான் போட்டின்னு சொல்ல... மனசாட்சி இல்லைன்னா நீங்க எப்படி மக்கள் தலைவனா மாறுவிங்க விஜய்... உழைப்பை முதல்ல மதிங்க... உங்க கவர்ச்சி மட்டும் மக்களுக்கான அரசியல் இல்ல... இனிமேலும் மக்கள்கிட்ட வீரவசனம் மட்டும் பேசாம ஒழுங்கா உங்க கட்சியோட கொள்கை திட்டம் எல்லாம் எல்லா இடத்துலயும் பேசுங்க.. ஒவ்வொரு தொகுதிலயும் என்ன பிரச்சினைன்னு அலசி ஆராய்ங்க... பொதுவா வீராவசனம் பேச இது அரட்டை அரங்கம் இல்லை... மக்கள் களம்... ஏற்கனவே நாங்க 50 வருடத்தை இழந்துட்டு இருக்கோம்.. இப்போ நீங்க வந்து ஆட்டத்தை கலைக்காதிங்க.. மறுபடியும் மக்கள் பிரச்சினை உணராத முதல்வர் எங்களுக்கு வேண்டாம்.... மக்களோடு மக்களாக நின்று எங்களை, எங்கள் இளையதலைமுறையை வழிநடத்தும் தலைமையே எங்களுக்கு வேண்டும்"என்று பதிவிட்டுள்ளார்.

## வேட்பாளர் பட்டியலில் ஏன் பெயர் இல்லை..? பா.ஜ.க. முன்னாள் தலைவர் அண்ணாமலை விளக்கம்

தமிழக சட்டசபை தேர்தல் வருகிற 23-ந் தேதி நடக்கிறது. இந்த தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணியில் அங்கம் வகிக்கும் பா.ஜ.க.விற்கு 27 தொகுதிகள் ஒதுக்கப்பட்டு இருக்கின்றன. இந்த தொகுதிகளில் போட்டியிடக்கூடிய வேட்பாளர்கள் 27 பேர் கொண்ட பா.ஜ.க. வேட்பாளர்கள் பட்டியல் நேற்று வெளியானது. இதில் பல நட்சத்திர வேட்பாளர்கள் களமிறக்கப்பட்டுள்ளனர். இதன்படி சாத்தூரில் நயினார் நாகேந்திரன், மயிலாப்பூரில் தமிழிசை, கோவை வடக்கில் வானதி சீனிவாசன், அவிநாசியில் எல்.முருகன், நாகர்கோவிலில் எம்.ஆர்.காந்தி, மொடக்குறிச்சியில் கிருத்திகா சிவக்குமார் உள்ளிட்டோர் போட்டியிடுகின்றனர்.

இந்த வேட்பாளர் பட்டியலில் பா.ஜ.க. முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலையின் பெயர் இடம்பெறவில்லை. இது குறித்து கட்சி வட்டாரங்கள் கூறுகையில், பா.ஜ.க.

மேலிடம் அண்ணாமலையை மொடக்குறிச்சி தொகுதியில் போட்டியிட வலியுறுத்தியதாகவும், ஆனால் அவர் கோவை வடக்கு தொகுதியில் போட்டியிட விருப்பம் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது. அவர் கேட்ட தொகுதி கிடைக்காததால், தேர்தலில் போட்டியிட விரும்பவில்லை என அண்ணாமலை கூறியதாக தகவல்கள் வெளியாகி இருந்தன.



இந்நிலையில் நேற்று வெளியான பா.ஜ.க.வேட்பாளர் பட்டியலில் ஏன் பெயர் இல்லை..? என்று அண்ணாமலையிடம் சென்னை விமானநிலையத்தில் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு அவர் பதிலளிக்கையில், "தேர்தலில் போட்டியிட விரும்பவில்லை என தலைமைக்கு ஏற்கனவே எழுத்துப்பூர்வமாக தெரிவித்துவிட்டேன். மாநிலத்தின் கோர் கமிட்டியில் என்னுடைய கருத்தை இந்த தேர்தலில் போட்டியிட விரும்பவில்லை என்று சொல்லி இருந்தேன். கோர் கமிட்டியில் இருந்து தலைமைக்கு போன பட்டியலில் என் பெயர் கிடையாது. பியூஷ் கோயலிடமும் ஒரு வாரத்திற்கு முன்பு தேர்தலில் போட்டியிடவில்லை என்ற கருத்தை தெரிவித்து இருந்தேன். கட்சி என்னுடைய கருத்துக்கு மதிப்பளித்து, என்னை பிரசாரத்திற்கு பயன்படுத்தி இருப்பது மகிழ்ச்சி தான். காரணம் இந்த தேர்தலை பொறுத்தவரை எல்லோருக்கும் பணி செய்கிறேன். தமிழகம் முழுவதும் பா.ஜ.க. வேட்பாளர்கள் 27 பேர் உள்ளனர். தேசிய ஜனநாயக கட்சி வேட்பாளர்கள் எல்லோருக்கும் நான் பிரசாரம் செய்ய தயாராக இருக்கிறேன். ஒவ்வொரு ஊராக சென்று பிரசாரம் செய்கிறேன். கட்சியின் வேட்பாளர்களை வெற்றி பெற செய்வது என்னுடைய கடமையாக பார்க்கிறேன். எப்போதும் நான் வேட்பாளர் ரேசில் இல்லை. எந்த தொகுதியையும் நான் கேட்கவில்லை. போட்டி போடவில்லை. நான் கேட்கவும் மாட்டேன். அது என்னுடைய பழக்கமும் கிடையாது. என்னுடைய வேலை ஏப்ரல் 21ம் தேதி வரை பிரசாரம் செய்வது, அதன் பிறகு மற்றவை குறித்து பேசுகிறேன். இந்த முறை என்னுடைய சண்டை தமிழகம் முழுவதும் பிரசாரம் மூலம் தான். 2024ல் நாடாளுமன்ற தேர்தலில் நான் போட்டியிட்ட போது, எனக்கு சிறிய வருத்தம் இருந்தது. நம்மை நம்பி நிறைய வேட்பாளர்களை போட்டி போட வைத்தோம். ஆனால் என்னால் அவர்களுக்கு ஆதரவாக பிரசாரம் செய்ய முடியவில்லை. அந்த மன குறையை 2026ம் ஆண்டு தேர்தலில் தீர்க்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. காலம் இருக்கிறது. காட்சிகள் மாற தான் போகிறது. நிறைய தேர்தல் வர தான் போகிறது. அன்று நாம் போட்டி போட்டு கொள்ளலாம்." என்று அவர் கூறினார்.

## ஸ்ரீரங்கத்தில் கோலாகலமாக நடைபெற்ற பங்குனி தேரோட்டம்



**ஸ்ரீரங்கம், ஏப்.5:**

பூலோக வைகுண்டம் என போற்றப்படும் ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் சுவாமி கோவிலில் பங்குனி தேர் திருவிழா கடந்த மாதம் 24-ந் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. இதையடுத்து நாள்தோறும் நம்பெருமாள் பல்வேறு வாகனங்களில் புறப்பாடு நடந்தது. கடந்த 27-ந் தேதி தங்க கருட சேவையும், 29-ந் தேதி உறையூரில் நம்பெருமாள் கமலவல்லி நாச்சியார் சேர்த்தி சேவையும், 30-ந் தேதி உபநாச்சியாளர்களுடன் நெல் அளவு கண்டருளும் வைப்பவம் நடைபெற்றது.

கடந்த 1-ந்தேதி நம்பெருமாள்-தாயார் சேர்த்தி சேவை நடைபெற்றது. இந்த சேவை ஆண்டுக்கு ஒருமுறை மட்டும் நடக்கும் நிகழ்வாகும். நம்பெருமாள் தாயாரும் ஒருசேர எழுந்தருளி பக்தர்களுக்கு சேவை சாதித்தனர். இருவரையும் ஒருசேர தரிசிக்கும் தம்பதிகளின் வாழ்க்கை மகிழ்ச்சியாக அமையும் என்பது நம்பிக்கை. எனவே, அன்றைய தினம் ஏராளமான பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

### நம்பெருமாள், தாயார் சேர்த்தி சேவை

விழாவின் சிகர நிகழ்ச்சியான பங்குனி தேரோட்டம் நேற்று காலை கோலாகலமாக நடைபெற்றது. இதையொட்டி நம்பெருமாள் காலை 7 மணிக்கு தாயார் சன்னதியில் இருந்து கோரதம் என கூறப்படும் பங்குனி தேர் மண்டபத்திற்கு புறப்பட்டார். காலை 7.45 மணியளவில் தேரில் எழுந்தருளினார். காலை 8 மணியளவில் தேர் வடம் பிடித்து இழுக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் 'ரங்கா !... கோவிந்தா !...' என்ற கோஷத்துடன் வடம் பிடித்து தேர் இழுத்தனர்.

தேர் நான்கு சித்திரை வீதிகளில் வலம் வந்து நிலையை வந்தடைந்தது. அப்போது தேரின் முன் பக்தர்கள் சூடம், நெய் விளக்கேற்றி தேங்காய் உடைத்து வழிபட்டனர்.

தேரோட்டத்தையொட்டி பலத்த போலீஸ் பாதுபாதுகாப்பு போடப்பட்டது. மாலை 6.30 மணிக்கு நம்பெருமாள் கண்ணாடி அறையில் இருந்து புறப்பட்டு சந்தன மண்டபம் வந்தடைந்தார். இரவு 7 மணி முதல் 9 மணி வரை திருமஞ்சனம் நடைபெற்றது. இரவு 9 மணிக்கு சந்தன மண்டபத்தில் இருந்து புறப்பட்டு சித்திரை வீதிகளில் வலம் வந்து படிப்பு கண்டருளியபின் நள்ளிரவு 1 மணிக்கு மூலஸ்தானம் சென்றடைந்தார்.

## ஏகாம்பரநாதர் கோவிலில் தீர்த்தவாரி உற்சவம்



**காஞ்சிபுரம், ஏப்.5:**

உலக புகழ்பெற்ற காஞ்சிபுரம் ஏலவார்குழலி சமேத ஏகாம்பரநாதர் கோவிலில் பங்குனி உத்திர திருக்கல்யாண பெருவிழா உற்சவம் கடந்த மாதம் 22-ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி விமரிசையாக நடைபெற்றது. தினமும் வெவ்வேறு வாகனத்தில் சுவாமி திருவீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

ஏகாம்பரநாதருக்கும், ஏலவார்க்குழலி அம்மனுக்கும் கடந்த 1-ந்தேதி பங்குனி உத்திர திருக்கல்யாணம் நடந்து முடிந்த நிலையில் விழாவின் 13-வது நாளான நேற்று தீர்த்தவாரி உற்சவம் நடைபெற்றது.

இதையொட்டி வெள்ளி நந்தி வாகனத்தில் காஞ்சீபுரம் சர்வ தீர்த்த குளக்கரைக்கு எழுந்தருளிய ஏகாம்பரநாதர் ஏலவார்க்குழலி அம்மன் முன்னிலையில், சிவபெருமானின் அஸ்திர தேவர் எனும் சூலாயுதத்துக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் செய்து சிவாச்சாரியார்கள் மந்திரங்களை ஒலிக்க சர்வ தீர்த்த குளத்தில் 3 முறை மூழ்கி தீர்த்தவாரி உற்சவம் நடைபெற்றது.

தீர்த்தவாரி உற்சவத்தில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு ஏகாம்பரநாதரையும், ஏலவார் குழலி அம்மனையும் தரிசனம் செய்தனர்.

மேலும், திருக்குளத்தில் இறங்கி புனித நீரை தெளித்து சென்றனர்.

## திருவிழா: பூஜையில் வைக்கப்பட்ட ஒரு எலுமிச்சை பழம் ரூ.45 ஆயிரத்து 500-க்கு ஏலம்



**விழுப்புரம், ஏப்.5:**

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் அருகே உள்ள ஒட்டனந்தல் கிராமத்தில் பிரசித்திப்பெற்ற ரத்தினவேல் முருகன் கோவில் அமைந்துள்ளது. இக்கோவில், சின்ன மயி லம் என்றும், இரட்டை குன்றின் மீது அமைந்துள்ளதால் இரட்டை குன்று முருகன் எனவும் அழைக்கப்படுகிறது.

இங்கு 11 நாட்கள் நடைபெறும் பங்குனி உத்திர விழாவில், முதல் 9 நாட்கள் நடைபெறும் திருவிழவின்போது இரட்டை குன்றின் மீது அமைந்துள்ள முருகன் அருகில் அமைந்துள்ள வேல் மீது ஒவ்வொரு நாளும் ஒரு எலுமிச்சை பழம் வீதம் 9 நாளும் வைத்து பூஜை செய்யப்படும். இந்த பழங்கள் அனைத்தையும் சேகரித்து வைத்து, 11-ம் நாள் திருவிழாவில் இரவு 11 மணிக்கு இடும்பன் சாமிக்கு கருவாடு சோறு படையல் வைத்து சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு, ஊர் பொது மக் கள் முன்னிலையில் 9 நாள் எலுமிச்சை பழமும் ஏலம் விடப்படும். இதை பக்தர்கள் போட்டிப்போட்டு ஏலம் எடுத்துச்செல்வார்கள். இந்த எலுமிச்சை பழத்தை வாங்கி சாப்பிடுபவர்களுக்கு தங்கள் வேண்டுதல் நிறைவேறும் என்ற நம்பிக்கை பக்தர்கள் மத்தியில் உள்ளது.

அந்த வகையில், இந்த ஆண்டுக்கான திருவிழா கடந்த 23-ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. தினசரி சாமிக்கு சிறப்பு பூஜைகள் நடந்தது. இதில் 11-ம் திருவிழா நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. இரவு 11 மணிக்கு இடும்பன் சாமிக்கு கருவாடு சோறு படையல் வைத்து சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டது. பின்னர், 9 நாட்கள் பூஜை செய்யப்பட்ட எலுமிச்சை பழங்களை ஊர் பொது மக்கள் முன்னிலையில், மரசெருப்பின் மீது நின்று நாட்டாமை புருஷோத்தமன் ஏலம் விட்டார். இதில் முதல் நாள் எலுமிச்சை பழத்தை ஒட்டனந்தலை சேர்ந்த பவித்ரா- வெங்கடேசன் தம்பதியர் 45 ஆயிரத்து 500 ரூபாய்க்கு ஏலம் எடுத்தனர். அதை தொடர்ந்து 2-வது நாள் பூஜை செய்த எலுமிச்சை பழம் ரூ.15 ஆயிரத்திற்கும், 3-வது நாள் எலுமிச்சை பழம் ரூ. 16 ஆயிரத்திற்கும், 4-ம் நாள் பழம் ரூ. 14 ஆயிரத்து 500 ரூபாய்க்கும், 5-ம் நாள் விழா எலுமிச்சை பழத்தை ரூ.16 ஆயிரம், 6-ம் நாள் விழா பழம் ரூ. 16 ஆயிரத்து 500, 7-ம் நாள் பழம் ரூ.9 ஆயிரம், 8-ம்நாள் விழா பழம் ரூ.5 ஆயிரத்திற்கும், 9-ம் நாள் பழம் ரூ.5500-க்கும் ஏலம் எடுத்தனர். இதன் மூலம் 9 நாள் பழங்களும் ரூ.1 லட்சத்து 43 ஆயிரம் ரூபாய்க்கு ஏலம் போனது.

**பக்தர்களின் நம்பிக்கை**

குழந்தையில்லாத தம்பதியினர், வியாபாரம் செய்பவர்கள். வீடுகட்ட முயல்பவர்கள். கல்யாணமாகாதவர்கள், தொழில் செய்ய முனைபவர்கள் என பலர் தங்கள் குறைகள் தீரும் என்ற நம்பிக்கையில் கலந்துகொண்டு ஏலம் எடுத்தனர்.

## சமயபுரம் மாரியம்மன் கோவில் சித்திரை தேர்த்திருவிழா



**சமயபுரம், ஏப்.5:**

சமயபுரம் மாரியம்மன் கோவிலில் தேர்த்திருவிழா ஆண்டுதோறும் சிறப்பாக கொண்டாடப்படும். இந்த ஆண்டுக்கான திருவிழா நாளை மறுநாள் (ஞாயிற்றுக்கிழமை) கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. அன்று இரவு அம்மன் கேடயத்தில் எழுந்தருளி கோவிலை வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.

தொடர்ந்து விழா நாட்களில் ஒவ்வொரு நாளும் காலையில் அம்மன் பல்லக்கில் எழுந்தருளி கோவிலை வலம் வருகிறார். ஒவ்வொரு நாளும் இரவு 8 மணிக்கு சிம்மம், பூதம், அன்னம், ரிஷபம், யானை, சேஷம், குதிரை உள்ளிட்ட பல்வேறு வாகனங்களில் கோவிலை வலம் வந்து பக்தர்களுக்கு காட்சி தருகிறார்.

வருகிற 13-ந்தேதி (திங்கட்கிழமை) அம்மன் வெள்ளிக்கு திரை வாகனத்தில் எழுந்தருளி வையாளி கண்டருளும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இதில் சிகர நிகழ்ச்சியான தேரோட்டம் வருகிற 14-ந்தேதி (செவ்வாய்க்கிழமை) நடைபெறுகிறது. அன்று காலை 10.31 மணிக்கு மேல் 11.30 மணிக்குள் தேர் வடம் பிடித்தல் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

15-ந்தேதி அம்மன் வெள்ளி காமதேனு வாகனத்திலும், 16-ந்தேதி அம்மன் முத்துப்பல்லக்கிலும் புறப்பாடாகிறார்.

17-ந்தேதி மாலை அம்மனுக்கு அபிஷேகமும், இரவு 7 மணிக்கு வசந்த மண்டபத்தில் தெப்ப உற்சவ தீபாராதனையும் நடைபெறுகிறது.

தேரோட்டம் முடிந்து 8-ம் நாளான 21-ந்தேதி இரவு அம்மன் தங்கக்கமல வாகனத்தில் புறப்பாடாகிறார்.






## நலம் தரும் மருத்துவம்

### கோடையை சமாளிக்க குளு குளு டிப்ஸ்...

கோடையில் தண்ணீர் தாகமும், உடல்சோர்வையும் தவிர்க்க எலுமிச்சை சாறுடன், சர்க்கரை, சிறிது உப்பு சேர்த்து பருகினால் தாகம் கட்டுப்படும்.

கோடையில் வரும் ஜலதோஷத்திலிருந்து விடுபட மோரில் சிறிது மிளகுத்தூளை சேர்த்து பருகலாம். மோருடன் கீழாநெல்லி சாறு கலந்து வெறும் வயிற்றில் குடித்தால் குறையும்.

கோடையில் வாகனங்களில் நீண்ட தூரம் பயணம் செய்பவர்களுக்கு உடல் உஷ்ணப் பிரச்னை ஏற்படும். அவர்கள் மோரில் சிட்டிகை சீரகத்தூள், சிட்டிகை வெந்தயத்தூள், உப்பு சேர்த்து குடித்தால் உஷ்ணம் குறையும்.

கோடையில் மூல நோய் பிரச்னை உடையவர்கள் அதிகம் அவதி பட நேரிடும். அவர்கள் அத்திப்பழங்களை சாப்பிட்டு வந்தால் நல்லது.

கோடைகாலத்தில் காலை உணவுடன் கஞ்சி வகைகளை சாப்பிடுவது உடல் ஆரோக்கியத்திற்கு நல்லது. கம்பு, கேழ்வரகு கூழ் வகைகளை சாப்பிடலாம். பழைய சாதத்துடன் தண்ணீரும், மோரும், உப்பு கலந்து சாப்பிடலாம். சாதத்தை வடித்த கஞ்சியுடன் உப்பு கலந்து பருகலாம். இது உடல் உஷ்ணத்தை குறைக்கும்.

இரவில் வெந்தயத்தை நீரில் ஊற வைத்து அந்த தண்ணீரை காலையில் பருகலாம். அதுபோல் வெந்தயத்தை மோரில் ஊற வைத்து மறுநாள் காலையில் அதனை அரைத்து தலைக்கு தேய்த்து குளித்து வர உடல் சூடு, தலையில் உள்ள சூடு குறையும்.

கோடையில் நீர் நிறைந்த காய்கறிகளை சமையலில் சிறு சிறு துண்டாக நறுக்கி சாலட்டாக சாப்பிடலாம். கேரட், வெள்ளரிக்காய், பீட்ரூட், தர்பூசணி போன்றவற்றை சிறு துண்டுகளாக்கி அதனுடன் மிளகுத்தூள், உப்பு சேர்த்து சாப்பிட்டால் உடல் உஷ்ணத்தை குறைக்கும்.

கோடை காலத்தில் தயிரை அதிகம் சாப்பிடுவது இரட்டிப்பு பலனை கொடுக்கும். அதாவது செரிமானத்தை எளிமைப்படுத்தும். நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்.

கோடையில் கடைந்த மோரில் அரை மூடி எலுமிச்சை சாறும், வெங்காய சாறும், கலந்து பெருங்காயத்தூள் ஒரு சிட்டிகை, உப்பு போட்டு குடித்தால் கோடை வெப்பத்தில் உடல் சோர்ந்து போகாமல் கூலாக இருக்கும்.

வெள்ளரிக்காய்களை சிறு துண்டுகளாக நறுக்கி ஒரு பாத்திரத்தில் போட்டு மோர் ஊற்றி, அதில் கொத்தமல்லி, இஞ்சி, வெட்டிவேர் சிறிதாக நறுக்கி போட்டு உச்சி நேர வெயிலில் குடித்தால் வயிறு கூலாக இருக்கும்.

வெட்டிய எலுமிச்சையையும் வெட்டி வேரையும், நன்னாரி வேரையும் துணியில் கட்டி மண்பானை தண்ணீரில் போட்டு 6 மணி நேரம் கழித்து எடுத்து விட்டு அந்த தண்ணீரை அருந்தினால் உடல் குளிர்ச்சி அடையும். **(தொடரும்)**

## இனி உங்கள் வேலையை கம்ப்யூட்டரே பார்த்துக்கொள்ளும்...அதிர வைத்த கிளாட் ஏஐ!

தொழில்நுட்ப உலகில் நாளுக்கு நாள் பல புதிய மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. இதுவரை நாம் சொல்வதை மட்டும் கேட்டு நமக்குத் தேவையான தகவல்களை கொடுத்து வந்த செயற்கை நுண்ணறிவு, இப்போது ஒரு படி மேலே சென்று நமது வேலைகளையே நேரடியாகச் செய்யத் தொடங்கிவிட்டது.




ஆந்த்ரோபிக் நிறுவனம் உருவாக்கியுள்ள கிளாட் ஏஐ (CLAUDE AI) எனப்படும் புதிய தொழில்நுட்பம், மனிதர்களைப் போலவே கம்ப்யூட்டரை இயக்கும் அட்டகாசமான திறனைப் பெற்றுள்ளது. இந்த புதிய அப்டேட் கார்ப்பரேட் உலகில் பலத்த அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. நிஜ உலக வேலைகளைச் சுலபமாக முடிக்கும் வகையில் இந்த ஏஐ சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

### கம்ப்யூட்டரை இயக்கும் புதிய ஏஐ!

நாம் நேரில் ஆபிஸ் சென்று சிஸ்டத்தின் முன் அமர்ந்து செய்யும் அனைத்து வேலைகளையும் இந்த கிளாட் ஏஐ மிக சுலபமாகச் செய்துவிடுகிறது. இது மனிதர்களைப் போலவே திரையைப் பார்ப்பதுடன், மவுஸ் மற்றும் கீபோர்டை தன்னிச்சையாக இயக்கும் திறன் கொண்டது.

நாம் வீட்டில் இருந்தாலும் சரி, அல்லது வெளியே எங்காவது இருந்தாலும் சரி, மொபைல் போன் மூலமாகவே நாம் இந்த ஏஐக்கு ரிமோட் முறையில் கட்டளைகளைப் பிறப்பிக்க முடியும். நாம் சொல்வதைக் கேட்டு, குறிப்பிட்ட அப்ளிகேஷன்களைத் திறப்பது, பிரவுசரில் தேவையானவற்றைத் தேடுவது மற்றும் ஸ்ப்ரெட் ஷீட்களைத் தானாகவே நிரப்புவது போன்ற பல வேலைகளை மனிதர்களின் நேரடி உதவி இல்லாமலேயே இது கச்சிதமாகச் செய்து முடிக்கிறது.

### இணையத்தை கலக்கும் வைரல் வீடியோ!

இந்த புதிய தொழில்நுட்பத்தின் செயல்பாடுகளைத் தெளிவாக விளக்கும் வகையில் எக்ஸ் தளத்தில் இதன் அதிகாரப்பூர்வ கணக்கிலிருந்து ஒரு டெமோ வீடியோ சமீபத்தில் வெளியிடப்பட்டது. அந்த வீடியோவில் ஒரு நபர் மீட்டிங்கிற்குச் செல்ல தாமதமானதால், கிளாட் ஏஐயிடம் ஒரு அவசரமான வேலையைக் கொடுக்கிறார்.

அந்த ஏஐ உடனடியாக ஒரு பிரசன்டேஷனை பிடிஎப் ஃபார்மெட்டில் நேர்த்தியாக மாற்றி, அதை மீட்டிங் அழைப்பிதழுடன் இணைத்து யாருடைய உதவியும் இன்றித் தானாகவே மின்னஞ்சல் அனுப்புகிறது. இந்த வீடியோ பதிவேற்றப்பட்ட சில நாட்களிலேயே முப்பத்தி ஏழு மில்லியனுக்கும் அதிகமான பார்வைகளைப் பெற்று இணையத்தில் மிகப்பெரிய ட்ரெண்ட் ஆகியுள்ளது.

### விமர்சனங்கள்!

இந்த வீடியோவைப் பார்த்த நெட்டிசன்கள் பலரும் தங்களின் கடுமையான கவலைகளைச் சமூக வலைத்தளங்களில் வெளிப்படுத்தி வருகின்றனர். குறிப்பாக, புதிதாக வேலை தேடும் கல்லூரி மாணவர்களுக்கான என்ட்ரி லெவல் வேலைகள் இனி முற்றிலுமாக அழிந்துவிடும் எனப் பலரும் புலம்புகின்றனர். ஆப்ஸ் ஓபன் செய்வது, ஃபார்ம்ஃபில் செய்வது போன்றவையே ஒரு மனிதனின் அடிப்படை வேலை, அதையும் ஏஐ செய்துவிட்டால் ஐடி ஊழியர்களின் நிலைமை பரிதாபமாகிவிடும் என அவர்கள் வேதனை தெரிவிக்கின்றனர். மேலும் ஒயிட் காலர் வேலைகளின் சகாப்தம் முடிந்துவிட்டது என்றும் கமெண்ட்கள் பறக்கின்றன. அதேசமயம், இது ஒரு அருமையான கண்டுபிடிப்பு எனப் பாராட்டுபவர்களும் இருக்கிறார்கள். நீண்ட தூரம் விமானத்தில் பயணிக்கும் போது வீட்டில் உள்ள லேப்டாப்பில் நடக்கும் வேலைகளை மொபைல் மூலம் கண்காணிக்க இது மிகவும் உதவியாக இருக்கும் எனச் சிலர் அதிக மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

இந்த அசுர வளர்ச்சியைக் கண்டு பின்வாங்குவதை விட, புதிய தொழில்நுட்பங்களைக் கற்றுக்கொண்டு நம்மை நாமே மெருகேற்றிக் கொள்வது மட்டுமே எதிர்கால வேலைவாய்ப்பை உறுதி செய்வதற்கான சரியான வழியாகும்.

# "செதுக்கிய சிக்கல்"




முருகன் விதவிதமான முறுக்கு வகைகளை தானே தயாரித்து, தானே அவற்றைப் பாலிதீன் கவர்களில் அடைத்து, தானே கடை கடையாய்ச் சென்று டெலிவரி செய்வான்.

அதிகாலையிலேயே எழுந்து பம்பரமாய்ச் சுழல்வான்.

ஒரு நாள் முறுக்கு சுடும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, ஒரு சின்ன அஜாக்கிரதையால் கொதிக்கும் எண்ணெய் அவன் மீது தெறித்தது.

"அய்யோ!" அலறினான் முருகன்.

முகம், கை, கால், கழுத்து, வயிறு என எல்லா இடங்களிலும் தீக்கொப்புளங்கள்.

மருத்துவமனையில் பல நாட்கள் சிகிச்சை. எப்படியோ உயிர் தப்பினான். ஆனால், காயங்கள் ஆறிய பிறகும் உடல் முழுவதும், முகம் உட்பட அசிங்கமான தழும்புகள்.

முருகன் மொத்தமு மனம் உடைந்து போனான். வெளியில் தலை காட்டவே வெட்கப்பட்டு வீட்டிலேயே முடங்கிக் கிடந்தான்.

அவன் மனைவி மெல்லச் சொன்னாள், "மனுஷன் வாழ்க்கைல எந்தச் சிக்கலும் அவனைச் சிதைக்க வருவதில்லை... மாறா அவனைச் செதுக்கத்தான் வருகின்றன"

முருகன் புரியாமல் விழிக்க, "இப்ப என்ன ஆகிப் போச்சுன்னு நீங்க இப்படி முடங்கிக் கிடக்கறீங்க?.. மறுபடியும் அதே தொழிலில் இறங்குங்க... நீங்களே முறுக்கு சுடாதீங்க... அதுக்கொரு ஆள் போடுங்க... டெலிவரிக்கும் ஆள் போடுங்க...! ஒன் மேன் ஆர்மியாக இல்லாமல் ஒரு கம்பெனி மாதிரி ஆக்குங்க."

அந்த வார்த்தைகள் முருகனின் மனதைத் தட்டின.

அடுத்த வாரத்திலேயே இரண்டு பேரை வேலைக்கு வைத்தான். முறுக்கு சுடவும், கடைகளுக்கு டெலிவரி செய்யவும்.

மெல்ல மெல்ல வேலை வளர்ந்தது. இன்னும் பல பேரை வேலைக்கு அமர்த்தினான்.

சில வருடங்கள் கழித்து...

"முருகா முறுக்குக் கம்பெனி" என்ற பெயரில் பெரிய அளவில் முறுக்கு தயாரித்து பல ஊர்களுக்கு அனுப்பும் நிறுவனம் ஆகி விட்டது.

ஒரு நாள் மாவட்ட அளவில் நடந்த விழாவில், முருகனுக்கு "சிறந்த தொழில் முனைவர் விருது" வழங்கப்பட்டது.

விருதை கையில் பிடித்துக் கொண்டு மேடையில் நின்ற முருகன் கூட்டத்திலிருந்த மனைவியைத் தன் அருகில் அழைத்தான்.

அவள் வந்ததும் அந்த விருதுக் கேடயத்தை அவளிடம் கொடுத்தான்.



**-முகில் தினகரன்**
கோயமுத்தூர்.

# அதிகாரி

தமிழுக்கும் ஜீவாவிற்கும் இடையிலான நட்பு ஒரு சாதாரணமான பழக்கம் அல்ல; அது காலத்தால் செதுக்கப்பட்ட ஒரு நெருக்கமான பிணைப்பு. அதிகாலை 6.30 மணி அடித்தால் தமிழின் விரல்கள் முதலில் தேடுவது ஜீவாவின் அலைபேசி எண்ணைத்தான். ஒரு நாள் கூட அந்த அழைப்பு வராமல் போனதில்லை. சில நேரங்களில் ஜீவாவின் மனைவி ஆனந்தி சிரித்துக்கொண்டே சொல்வார்: "உங்க மனைவியை விட நீங்க ரெண்டு பேரும் தான் புருஷன்-பொண்டாட்டி மாதிரி ஒட்டியிருக்கீங்க!" அந்தளவுக்கு அந்த நட்பு ஊருக்குப் பெயர் போனது. ஒரு மாலை வேளையில், கோயம்புத்தூர் ரயில் நிலையம் அருகே இருந்த புகழ்பெற்ற 'சுப்பு மெஸ்'-க்கு இருவரும் சென்றனர். அது ஒரு ஆலயம் அல்ல; அது 'குடிமகன்கள்' கூடும் இடம். அங்கே 'குவாட்டர்' வாங்கினால் 'சைடிஷ்' இலவசம் என்பதால் எப்போதுமே கூட்டம் அதிகமாக இருக்கும். அங்கே அமர்ந்தவுடன் தமிழ் சர்வரிடம் சொன்னார்: "அண்ணே... ரெண்டு குவாட்டர் ரம்மு கொடுங்க." தமிழ் முன்பு வேலை பார்த்த செக்யூரிட்டி நிறுவனத்தில் ஜீவா அவருக்குக் கீழ் பணியாற்றிய அதிகாரி. நிறுவனம் மாறினாலும் அந்த பழைய மரியாதை மாறவில்லை. தமிழ் இன்றும் ஜீவாவை "அதிகாரி" என்றுதான் அழைப்பார். ஜீவா தமிழை "சார்" என்றுதான் அழைப்பான். தமிழ் சற்றே மனம் தளர்ந்து பேசத் தொடங்கினார். "அதிகாரி... அந்த செக்யூரிட்டி நிறுவனத்துல இருந்தப்பவே எனக்கும் என் மனைவிக்கும் சின்னச் சின்னப் பிரச்சனைகள் இருந்தது. அது இப்போ விஸ்வரூபம் எடுத்து நிக்குது." ஜீவா ஆச்சரியமாகப் பார்த்தான். "ஏன் சார்? நான் தான் உங்க வீட்டுக்கு வந்து பேசினேன் இல்லையா? அதற்குப் பிறகு எல்லாம் நல்லா போய்கிட்டு இருந்ததுன்னு நினைச்சேனே." தமிழ் சிறிது நேரம் அமைதியாக இருந்துவிட்டு மெதுவாகச் சொன்னார்: "ஒரு தப்பு பண்ணிட்டேன் அதிகாரி... அது என் தப்புதான்." ஒரு பெண்ணுடன் சற்று நெருக்கமாகப் பழகியதை அவர் ஒப்புக்கொண்டார். அந்தப் பெண் அவரைப் பாராட்டிப் பேசிய வார்த்தைகளில் மயங்கி அவர் அவளுடன் பேசத் தொடங்கினார். ஆனால் தனது குடும்பத்தை விட்டுவிட்டுப் போகும் எண்ணம் அவருக்கு ஒருபோதும் இல்லை. ஜீவா நிதானமாகச் சொன்னான்: "சார்... ஒரு குடும்பம் இருக்கும்போது வேறொரு பெண்ணோட இப்படி பழகுறதை எந்த மனைவியும் ஏத்துக்க மாட்டாங்க. இதே விஷயத்தை அவங்க செய்தா உங்களுக்கு பிடிக்குமா? ஆணுக்கு ஒரு நியாயம், பெண்ணுக்கு ஒரு நியாயம்னு இருக்க முடியாது சார்." தமிழ் பதில் சொல்ல முடியாமல் தலை குனிந்தார். "இப்போ புரியுது அதிகாரி, ஆனா கோபத்துல விவாகரத்து கேஸ் போட்டுட்டேன். மூணு விசாரணை முடிஞ்சிருச்சு." சில நாட்கள் கழித்து தமிழ் ஜீவாவின் வீட்டிற்குச் சென்றார். அப்போது ஜீவாவின் மனைவி உள்ளிருந்து சற்று கோபமாகச் சொன்னார்: "துணி காயப் போடச் சொன்னேன்... இன்னும் போடவே இல்லை!" ஜீவா சற்றும் முகம் சுளிக்காமல், "இதோ இப்போ போய் போடுறேன்" என்று சிரித்தபடி மாடிக்குச் சென்றான். இதைக் கண்டு வியந்த தமிழ் கேட்டார்: "அதிகாரி... மனைவி இப்படி சத்தம் போடுறாங்க, நீங்க அமைதியா போய்ட்டீங்க?" ஜீவா மெதுவாகச் சிரித்தான். "சார்... வெளியில நான் எவ்வளவு பெரிய அதிகாரியா இருந்தாலும், வீட்டுக்குள்ள நான் ஒரு கணவன் தான். ஒரு கம்யூனிஸ்ட்னா வீட்டிலயும் சமத்துவம் இருக்கணும். வேலைகளைப் பகிர்ந்து செய்யணும். நம்ம மனைவி நம்மளையே உலகம்னு நினைச்சு வாழுறவங்க, அவங்க கோபத்தை பெருசா எடுத்துக்கக் கூடாது." இந்த வார்த்தைகள் தமிழின் இதயத்தைத் தொட்டது. "அதிகாரி... இப்போதான் எனக்குப் புரியுது. நான் ஆபீஸ்ல இருந்த அதிகாரத்தை வீட்டுக்கும் கொண்டு வந்துட்டேன். அதுதான் என் வாழ்க்கையைக் கெடுத்தது." அவர் உடனே எழுந்து நின்றார். "நான் இப்போவே போய் என் மனைவியையும் என் குழந்தையையும் கூட்டிட்டு வர்றேன் அதிகாரி!" என்று உறுதியுடன் சொல்லிவிட்டு அங்கிருந்து விரைந்து கிளம்பினார்.






**-எல்.ஜி.சிவக்குமார்**
கோவை-45.

# விக்கிரமாதித்தன் கதைகள் 4

**.A.S.GOVINDA RAJAN**

## வாரனாசி பிரதாப மகுடனின் கதை

வாரனாசியில் பிரதாபமகுடன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவனுக்கு வஜ்ரமகுடன் என்ற மகன் இருந்தான். ஆனால் அவனுக்கு புத்தி கூர்மை கொஞ்சம் குறைவு. எதையும் சட்டென்று புரிந்து கொள்ளமாட்டான். இவனுடைய நண்பன் மந்திரிமகன் புத்திசரீரன், பெயருக்கு ஏற்றார்போல் நடந்து கொள்வான். வஜ்ரமகுடன் புத்திசரீரன் மீது மிகுந்த நம்பிக்கையும் வைத்திருந்தான். ஒரு நாள் இருவரும் வேட்டையாடச் நீண்டதூரம் சென்றவர்கள். அந்த வனத்தில் விரிந்த மலர்களின் வாசனை வஜ்ரமகுடனை கவர்ந்தன. அங்கு நீராடிக்கொண்டிருந்த பேரழகியை ராஜகுமாரன் பார்த்தான். அவளுடைய அழகில் வஜ்ரமகுடன் மயங்கினான்.


குளித்துக் கொண்டிருந்த அவள் ராஜகுமாரனை, ஓரக்கண்ணால் பார்த்தால், அவனுடைய கம்பீரமான தோற்றத்தில் மயங்கினாள். அவனை சந்திக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்தவள் சில சைகைகள் செய்தாள். இதை பார்த்த ராஜகுமாரனுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால் புத்திசரீரனுக்கு சட்டென விளங்கி விட்டது.

அவள் சொன்னதை தன் நண்பனிடம் கேட்டான். அதற்கு அவன் தங்களை அவள் காண விரும்புகிறாள். அதனால் அவளுடைய இருப்பிடத்தை ரகசியமாக சொல்லிச் சென்றாள். நண்பா! கொஞ்சம் விளக்கமாகச் சொல் என்றான்? சைகைகளின் அர்த்தத்தை மந்திரியின் மகன் விளக்கினான். அவள் தாமரை பூவின் சின்னமான கர்ணோத்பலன் நாட்டைச் சேர்ந்தவள். அந்தப் பூவை தந்தபத்திரம் போலச் சுருட்டியதால், தந்தச் சிற்பி மகள் என்றும், தாமரைப் பூவை தலையில் சூடியதால் அவள் பெயர் பத்மாவதி என்றும், கடைக்கண்ணால் பார்த்ததால், அவள் இதயம் உனக்கே சொந்தமாகிவிட்டது என்றும் அறிவித்தாள். அவனுக்கு எப்படியாது அந்தப் பெண்ணை அடைந்து விட வேண்டும் என்ற துடிப்பு அதிகரித்தது. உடனே அவனும், அவன் நண்பனும் புறப்பட்டார்கள். பிறகு அந்த நாட்டிற்குச் சென்று அவளது வீட்டை தேடி கண்டுபிடித்தனர். அதன் பிறகு ஒரு கிழவியின் வீட்டில் தங்கி அவளிடம் விவரத்தை கூறி, நீங்கள்தான் எப்படியாவது உதவி செய்ய வேண்டும், என்றனர் உங்களுக்கு வேண்டிய பொன்னும் பொருளும் தருகிறோம் என்றான். சரி நான் இப்போது என்ன செய்ய வேண்டும்? நீங்கள் பத்மாவதியிடம், ராஜகுமாரன் வந்திருக்கிறான் என்று ரகசியமாக தெரிவிக்க வேண்டும் என்றான் புத்திசரீரன். அப்படியே செய்கிறேன் என்றாள். சென்ற கிழவி அழுத முகத்துடன் திரும்பிவந்தாள். நான் நீங்கள் வந்திருக்கும் செய்தியை ரகசியமாகக் கூறினேன். அதற்கு என்னை இரு கன்னங்களிலும் அடித்துவிட்டாள். அவமானத்தால் நான் திரும்பிவிட்டேன் என்று அடையாளங்கள்! காட்டினாள்.

அவள் உங்களை பார்ப்பதற்கு நிலாக்காலமானாது ஏற்ற தினம் அல்ல, என்றாள். பத்துதினங்கள் கழித்து, கிழவியை மீண்டும் பத்மாவதியைப் பார்க்க அனுப்பினர். மீண்டும் கிழவி அழுதபடி வந்தாள். என்னடா இது வம்பாய்ப் போச்சு, என்றான்.

கிழவி கூறினாள், நான் பத்மாவதி முன் மவுனமாக அமர்ந்திருந்தேன். அவள் உங்களிடமிருந்து ஏதோ செய்தி கொண்டு வந்திருப்பதாக வாதம் செய்தாள். மூன்று விரல்கலைச் செம்பஞ்சுக் குழம்பில் நனைத்து, அதனால் என் மார்பில் அடித்து அனுப்பி விட்டாள்.

அது மட்டுமில்லாமல் என்னை வாசல் வழியாக போக வேண்டாம் என்று கூறி, ஓர் ஆசனத்தில் அமர்த்தி கயிறு கொண்டு கட்டி பின்புற ஜன்னல் வழியாக இறக்கி விட்டாள். நான் அருகிலுள்ள மரத்திலேறி தோட்டத்தின் வழியாக வெளியேறி கஷ்டப்பட்டு வந்து சேர்ந்தேன் என்றாள்.



புத்திசரீரன் புன்னகைத்தான். நண்பா, கவலை கொள்ள வேண்டாம். உன் ஆசை நிறைவேறப் போகிறது. ராஜகுமாரனோ ஆர்வத்துடன் கேட்டான். நண்பா!, அவள் உன்னை இன்னும் மூன்று இரவுகள் பொறுத்திருக்குமாறு கூறியிருக்கிறாள். ராஜகுமாரனுக்கு தலைகால் புரியவில்லை. மூன்று இரவுகள் சென்றன பின் பத்மாவைதியைப் பார்க்க சென்றான். ராஜகுமாரனைக் கண்டவுடன் கட்டி அணைத்துக் கொண்டாள். இருவரும் ஒருவர் மீது ஒருவர் அன்பைப் பொழிந்தனர். அப்போது பத்மாவதி கேட்டாள் நான் காட்டிய ஜாடைகளை சரியாகப் புரிந்து கொண்டீர்களே, எப்படி? அன்பே நீ அனுப்பிய சங்கேத மொழிகள் எனக்கு கொஞ்சம் கூட புரியவில்லை. ஆனால் அந்த மொழி என் நண்பன் புரியவைத்தான். அதனால் தான் என்னால் உன்னைச் சந்திக்க முடிந்தது. என்றான். இதைக் கேட்ட பத்மாவதியின் முகம் மாறியது. ஆக ராஜகுமாரன் தம்மீது காதலுடன் இருக்க வேண்டுமானால், மந்திரி குமாரன் அவருடன் இருக்கக் கூடாது. எனவே எப்படியாவது புத்திசரீரனை தீர்த்துக்கட்டுது என கன பொழுதில் தீர்மானித்து விட்டாள் பத்மாவதி.

வீட்டுக்குச் சென்ற ராஜகுமாரன், புத்திசரீரனிடம் சங்கேத மொழிகளை விளக்கியது யாரென்பதையும் அவளிடம் சொன்னதாய்ச் சொன்னான்.

நண்பா! உங்களின் அந்தரங்கத்தை அறிந்தவன் நான் என்ற எண்ணம் அவள் மனதில் தோன்றியிருக்கும். பெண்ணின் ரகசியங்களை அவளுக்கு உரியவனைத் தவிற வேறொருவன் தெரிந்திருப்பதை எந்தப் பெண்ணும் விரும்பமாட்டாள். அதற்கு ராஜகுமாரன் அவள் மிகவும் நல்லவள்.

மறுநாள் பணிப்பெண்கள் புத்திசரீரனிடம், பத்மாவதி தங்களிடம் தனது மரியாதையை தெரிவிக்கச் சொன்னார்கள். ராஜகுமாரனை பத்மாவதி அவனுக்காக காத்திருப்பதாகவும் நீங்கள் உடனே வரவேண்டும் என்றும் தெரிவித்தார்கள்.

பார்த்தாயா நண்பா! பண்புள்ள பெண்ணாய் உனக்கு தனது மரியாதையைத் தெரிவிக்கிறாள் என்றான். புத்திசரீரன் பொறு நண்பா, என்று சொன்னபடி பலகாரத்தில் ஒரு சிறு துண்டை எடுத்து நாய்க்கு போட்டான். நாய் அவ்விடத்திலேயே துடித்துடித்து இறந்தது.

சரி அவளை நான் எப்படி எந்நாட்டிற்கு கொண்டு செல்வது? அப்போது வெளியே அந்நாட்டு அரசனின் ஆண்குழந்தை இறந்து போயிற்று, இது தான் சரியான சமயம் என்று புத்திசரீரன் ஒரு திட்டம் தீட்டினான். புத்திசரீரன் நண்பா, நான் இருக்கும் வரை அவள் உன்னுடன் மனப்பூர்வமாக வரமாட்டாள். அதனால் நான் ஒன்று சொல்கிறேன் கேள். இன்றிரவு நீ பத்மாவதியின் மாளிகைக்குச் செல்.

அவளுடன் தன் நிலைமை மறந்து படுக்கையில் தூங்கும் போது அவளுடைய நகைகளை எடுத்துக் கொண்டு, அவள் இடுப்பில் சூலாயுதத்தால் கீறல் அடையாளம் செய்து விட்டு வா. அதற்கு மேல் நான் பார்த்துக் கொள்கிறேன் என்றான். ராஜகுமாரன் அவளை பார்க்கச் சென்றான். அவளுடன் காதல் மொழி பேசி அவளுக்கு போதையூட்டி மயக்கச் செய்தான். அவளது நகைகளை எடுத்துக் கொண்டான். பிறகு இடுப்பில் சூலாயுதத்தால் கீறி காயத்தை உண்டாக்கி வீடு வந்து சேர்ந்தான். திட்டப்படி மந்திரிகுமாரன் மயானத்தில் தபசி வேஷம் போட்டு அமர, ராஜகுமாரனும் சீடனாக வேஷம் தரித்து அமர்ந்தனர். புத்திசரீரன் ராஜகுமாரனிடம் பத்மாவதியின் நகைகளை எல்லோரும் பார்க்கும் படி எடுத்துச் சென்று விலை பேசு. ஆனால் யாரும் வாங்க முடியாதபடி அதிக விலை சொல். காவலாளிகள் உன்னைப் விசாரித்தால், என் குருநாதர் தான் இதை விற்கச் சொன்னார் என்று சொல். காவலாளிகளின் கண்களில் சிக்கிக் கொண்டான். ராஜகுமாரனும் இந்த நகை பற்றி தனக்கு ஒன்றும் தெரியாது. தனது குருநாதர் தான் விற்கச் சொன்னார் என்றும் கூறிவிட்டான். பிறகு இருவரையும் அரசன் முன் நிறுத்தினர். அரசர் புத்திசரீரனிடம் இந்த நகை உன்னிடம் எப்படி வந்தது என்று விசாரித்தார். புத்திசரீரன் நான் ஒரு தபசி. இரவு நேரம் இம்மயானத்தில் தங்கியிருக்கையில் நடு நிசியில் மோகினி அரசரின் மகளான இளவரசனின் உடலைத் தாங்கி வந்தாள். நன்றாக மது மயக்கத்தில் இருந்த அவள் என் ஜபமாலையை பிடுங்க முயன்றாள்.

என் மந்திர சக்தியால் சூலாயுதத்தை பழுக்கக் காய்ச்சி இடுப்பில் சூடு போட்டுத் துரத்திவிட்டேன். அவள் கழுத்திலிருந்த இந்த முத்து மாலையை பிடுங்கிக் கொண்டேன். தபசிக்கு முத்து மாலை எதற்கு? அதனால் தான் அதை விற்று வரச்சொல்லி சீடனை அனுப்பினேன் என்றான். அரசர் பத்மாவதியை மோகினி என சந்தேகித்தான். பத்மாவதியை பணிப் பெண்களைக் கொண்டு இடுப்பில் சூலாயுதத்தால் காயம் இருக்கிறதா என்று பார்க்க அவர்களும் இதை உறுதி செய்தனர். பத்மாவதியை அரண்மனைக்கு அழைத்து பணிப்பெண்களைக் கொண்டு இடுப்பில் சூலாயுதத்தால் காயம் இருக்கிறதா என்று பார்க்கச் சொன்னான். தடம் இருப்பதை பணிப்பெண்கள் உறுதி செய்தனர். அரசர் கடும் கோபம் முற்றான். அதனால் இவளை இந்த நாட்டை விட்டே துரத்தி விடுங்கள் என்றான். அரசன் அதுவும் சரிதான். பத்மாவதியை காட்டில் விட்டு வர காவலாளிகளுக்கு உத்தரவிட்டான்.

காவலாளிகள் அவளை இழுத்துச் சென்று ஆடையாபரணங்களை உருவிக்கொண்டு நடுக்காட்டில் விட்டு விட்டுத் திரும்பினார்கள். அந்த வேளையில் ராஜகுமாரனும், புத்தி சரீரனும் அவள் இருக்கும் இடத்தை அடைந்தனர். புத்திசரீரன் தான் ராஜகுமாரனுக்கு உண்மையான நண்பன் என்றும், பத்மாவதியின் வாழ்க்கைக்கு எந்த ஆபத்தும் வராது என்றும் உறுதி கூறினான். பிறகு இருவரும் அவளைஅழைத்துக் கொண்டு நாடு திரும்பினர்.

# பிறவாதீசுவரர்!

வருடத்தில் ஒருநாள் மட்டுமே திறக்கும் காஞ்சிபுரத்தின் மர்ம சிவன் கோவில் பிறவியை நீக்கும் பிறவாதீசுவரர் !

தமிழகத்தில் ஆன்மிக அதிசயங்கள் நிறைந்த பல தலங்கள் உள்ளன. அவற்றில் சில கோவில்கள் வரலாறால் புகழ் பெற்றவை, சில கோவில்கள் தெய்வீக சக்தியால் பக்தர்களை ஈர்க்கும் தலங்கள்.

ஆனால் சில கோவில்கள் — அவற்றின் மர்மமான வழிபாட்டு முறைகளாலும், அரிதான பாரம்பரியங்களாலும் — பக்தர்களை ஆச்சரியப்பட வைக்கும்.

அப்படிப்பட்ட ஒரு அரிய தலம் தான் காஞ்சிபுரத்தில் உள்ள பிறவாதீசுவரர் திருக்கோவில்.

இந்தக் கோவிலின் மிகப்பெரிய விசேஷம் என்ன தெரியுமா?

இந்த கோவில் வருடத்தில் ஒரே ஒரு நாள் மட்டுமே திறக்கப்படுகிறது.

அந்த ஒரு நாள் — மகாசிவராத்திரி.

மற்ற நாட்கள் முழுவதும் இந்த கோவில் கருவறை மூடியே இருக்கும் என்பது இந்தத் தலத்தின் மிகப்பெரிய ஆன்மிக மர்மமாக கருதப்படுகிறது.

## கோவில் நகரம் காஞ்சிபுரம்

தமிழகத்தில் “கோவில் மாநகரம்” என்று போற்றப்படும் புனித நகரம் காஞ்சிபுரம். இந்த நகரம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஆன்மிக மையமாக இருந்து வருகிறது.

பழமையான வரலாற்று குறிப்புகளின்படி, காஞ்சிபுரத்தில் 1008 சிவன் கோவில்கள் இருந்ததாக கூறப்படுகிறது.

அதில் இன்று பல கோவில்கள் மட்டுமே காணப்பட்டாலும், அந்த ஆன்மிக மரபு இன்னும் உயிரோடு உள்ளது.

**காஞ்சிபுரம் என்றாலே முதலில் நினைவிற்கு வருவது:**

காமாட்சி அம்மன் கோவில்
ஏகாம்பரேஸ்வரர் கோவில்
வரதராஜ பெருமாள் கோவில்

இந்த மூன்று பெரிய தலங்களே.

ஆனால் பலருக்குத் தெரியாத ஒரு ஆன்மிக ரகசியம் என்னவென்றால் — வருடத்திற்கு ஒருநாள் மட்டுமே திறக்கப்படும் சிவன் கோவில் கூட இங்கேயே உள்ளது.

## பல்லவ மன்னர்களின் ஆன்மிக நகரம்

கி.பி. 300 முதல் 850 வரை காஞ்சிபுரம் பல்லவ மன்னர்களின் தலைநகரமாக இருந்தது.

அந்த காலத்தில் காஞ்சி நகரம் கலை, கல்வி, ஆன்மிகம் ஆகிய அனைத்திலும் செழித்து வளர்ந்தது.

மணிபல்லவம் எனப்படும் தீவிலிருந்து வந்ததாக கூறப்படும் இந்த மன்னர்கள் சிம்மக் கொடியை தங்கள் சின்னமாகக் கொண்டிருந்தனர்.

அவர்களின் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட கோவில்கள் இன்று கூட பல்லவக் கட்டிடக் கலைக்கு சாட்சிகளாக நிற்கின்றன.

**அவற்றில் மிகவும் புகழ்பெற்றவை:**

கைலாசநாதர் கோவில்
வைகுண்டப் பெருமாள் கோவில்

ஆனால் இவை தவிர சிவகாஞ்சி பகுதியில் அமைந்துள்ள ஆறு அபூர்வமான கோவில்கள் பலருக்குத் தெரியாமல் உள்ளன.

அவற்றில் மிகவும் மர்மமானதும் ஆன்மிக ரகசியம் நிறைந்ததும் — பிறவாதீசுவரர் திருக்கோவில்.

வருடத்தில் ஒருநாள் மட்டுமே திறக்கும் கோவில்

இந்த கோவிலின் மிகப்பெரிய அதிசயம் என்னவென்றால் — வருடத்தில் ஒரே ஒரு நாள் மட்டும் இந்த கோவில் திறக்கப்படுகிறது.

அந்த நாள் மகாசிவராத்திரி.

அன்று இரவு, பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் காஞ்சிபுரத்திற்கு வந்து இந்த அரிய தரிசனத்தை காண காத்திருக்கிறார்கள்.

வருடம் முழுவதும் மூடியிருக்கும் இந்த கருவறை — அந்த ஒரு இரவில் மட்டும் திறக்கப்படுகிறது.

கோவில் வாசல் திறக்கும் அந்த நொடியே பக்தர்கள் மனமுருகி இறைவனை வேண்டிக் கொள்வார்கள்:

“இந்தப் பிறவியே கடைசியாக இருக்கட்டும்... இனி மறுபிறவி வேண்டாம்”

என்று.

பக்தர்களின் நம்பிக்கையின்படி, அந்த ஒரு இரவில் கிடைக்கும் பிறவாதீசுவரர் தரிசனம் — பிறவிப் பிணியை நீக்கும் அருள் தரிசனம் ஆகும்.

கோவில் கட்டுமான சிறப்பு

இந்த ஆலயம் கி.பி. 700 முதல் 728 வரை ஆட்சி செய்த ராஜசிம்ம பல்லவன் காலத்தில் கட்டப்பட்டதாக வரலாறு கூறுகிறது.

மணற்கற்களால் கட்டப்பட்ட இந்த கோவில் பல்லவக் கட்டிடக் கலையின் அழகை வெளிப்படுத்துகிறது.

இந்த கோவிலின் கட்டுமான அமைப்பு மிகவும் தனித்துவமானது:

மேற்கு நோக்கி அமைந்த கருவறை
இரண்டு அடுக்கு விமானம்
எண்கோண வடிவில் அமைந்த கருவறை
செவ்வக வடிவில் அமைந்த முகமண்டபம்

இவை அனைத்தும் பல்லவ கால கட்டிடக் கலைக்கு சிறந்த



எடுத்துக்காட்டுகள்.

தல வரலாறு வாமதேவ முனிவரின் தவம்

இந்தத் தல வரலாற்றில் முக்கியமான இடம் பெறும் ஒருவர் வாமதேவ முனிவர்.

ஐதீகத்தின் படி, அவர் தாயின் கருவில் இருந்தபோதே ஒரு பிரார்த்தனை செய்ததாக கூறப்படுகிறது.

“இறைவா... இனி மறுபிறவி வேண்டாம். இந்த வாழ்க்கையே கடைசி ஆகட்டும்.”

கருவில் இருந்தபடியே அவர் இறைவனை வேண்டியதாக புராணங்கள் கூறுகின்றன.

அந்த நேரத்தில் சிவபெருமான் அவருக்கு அருள் காட்சி தந்து கூறினார்:

“காஞ்சிபுரத்திற்கு வந்து எம்மை வழிபடு; உனக்கு மறுபிறவி இல்லை.”

பிறந்த பின் வாமதேவர் காஞ்சிபுரத்திற்கு வந்து ஒரு லிங்கத்தை பிரதிஷ்டை செய்து கடும் தவம் செய்தார்.

அந்த தவத்தின் பலனாக அவர் மறுபிறவி இல்லாத நிலையை அடைந்தார் என்று ஐதீகம் கூறுகிறது.

அதனால் தான் இத்தல இறைவன் பிறவாதீசுவரர் என்று அழைக்கப்படுகிறார்.

பிறவாதீசுவரர் என்றால் — பிறவி நீக்கும் இறைவன் என்ற அர்த்தம்.

கோவில் சிற்பங்களின் அழகு

இந்த கோவிலின் கருவறையில் சிவலிங்கம் அருள்கூர்கிறது.

அதன் பின்புறச் சுவரில் சோமாஸ்கந்தர் வடிவில் சிவன், பார்வதி மற்றும் முருகன் காட்சி தருகின்றனர். அருகில் பிரம்மா மற்றும் விஷ்ணு சிற்பங்களும் காணப்படுகின்றன.

**தேவகோட்டங்களில்:**

தெற்கில் தட்சிணாமூர்த்தி
கிழக்கில் விஷ்ணு
வடக்கில் பிரம்மா

வெளிப்புறச் சுவர்களில்:

துர்கை
கஜலட்சுமி

போன்ற தெய்வங்களின் அழகிய சிற்பங்கள் பல்லவக் கால சிற்பக்கலையின் உயர்ந்த நயத்தை வெளிப்படுத்துகின்றன.

**எங்கு அமைந்துள்ளது?**

இந்த மர்மமான பிறவாதீசுவரர் திருக்கோவில் காஞ்சிபுரம் நகரின் சிவகாஞ்சி பகுதியில் அமைந்துள்ளது.

இது கம்மாளத் தெருவில், பச்சைவண்ணர் கோவிலுக்கு அருகில் உள்ளது.

காஞ்சிபுரம் பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 2 கிலோமீட்டர் தொலைவில் இந்தத் தலம் அமைந்துள்ளது.

இறுதியாக...

வருடம் முழுவதும் மூடியிருக்கும் ஒரு கோவில் —
ஒரே ஒரு இரவில் திறந்து பக்தர்களுக்கு தரிசனம் தருவது அதுவும் பிறவியை நீக்கும் இறைவன் என்று போற்றப்படும் சிவபெருமான்.

இதுபோன்ற ஆன்மிக மர்மங்கள் நிறைந்த தலங்கள் தமிழகத்தின் பெருமை.

**முனைவர் பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்

---

தினம் ஒரு தலைவர்கள்

# வ.த.சுப்ரமணிய பிள்ளை வரலாறு

**வ.த.சுப்ரமணிய பிள்ளை (டிசம்பர் 11,1846- ஏப்ரல் 17,1909 ) வடக்குப்பட்டு தணிகாசலம் சுப்பிரமணிய பிள்ளை. தமிழறிஞர். திருப்புகழ் பாடல்களை தேடிக் கண்டடைந்து தொகுத்து வெளியிட்டார். மாவட்ட நீதிபதியாகப் பணியாற்றினார்.**

வடக்குப்பட்டு தணிகாசலம் சுப்பிரமணிய பிள்ளை செங்கல்பட்டில் டிசம்பர் 11,1846-ல் தணிகாசலம் பிள்ளை-இலட்சுமி அம்மாளுக்கு பிறந்தார். திருத்தணிகை முருகன் இவர்களது குலதெய்வம். தணிகாசலம் பிள்ளை தனி ஆசிரியர் மூலம் வீட்டிலேயே சுப்ரமணிய பிள்ளைக்கு ஆரம்பக்கல்வி அளித்தார். தமிழும் தெலுங்கும் பயின்ற சுப்ரமணிய பிள்ளை 1857-ல் செங்கல்பட்டு மிஷன் ஸ்கூலில் சேர்ந்து உயர்நிலைக் கல்வியை முடித்து அங்கேயே சில ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார். இந்நிலையில் பள்ளி ஆய்வுக்காக வந்த வில்லியம் மில்லர் இவருடைய அறிவுத்திறன் கண்டு சென்னைக்கு வந்து மாகிண்டோஷ் ஸ்காலர்ஷிப் தேர்வு எழுதி வென்றால் தகுந்த வேலை கிடைக்கும் என்றார். அவ்வாறே சென்னை சென்று தேர்வெழுதி வென்றார். மில்லர் வாக்களித்தபடி இவருக்கு மாதம் எட்டு ரூபாய் ஸ்காலர்ஷிப் தொகை கிடைத்தது. தொடர்ந்து U.C.S. தேர்வு எழுதி வென்றார். எஃப்.ஏ. வகுப்பில் சேர்ந்து அதிலும் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார்.

சுப்ரமணிய பிள்ளை பச்சையப்பன் கல்லூரியில் சிலகாலம் ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னர் மில்லரின் பரிந்துரையின் பேரில், ஸ்காட்லாண்ட் மிஷன் பள்ளியில் ஆசிரியப்பணியில் சேர்ந்தார். 1868-ல் வள்ளியம்மாளுடன் திருமணம் நிகழ்ந்தது. பின்னர் ஆசிரியர் பணியில் இருந்து விலகி மில்லரின் நண்பர் ஹாட்ஸன் துரையின் பரிந்துரையின் பேரில் மஞ்சக்குப்பம் நீதிமன்றத்தில் எழுத்தர் பணியில் சேர்ந்தார். தலைமை எழுத்தராக பதவி உயர்வு பெற்று பின்னர் முன்சீஃப் தேர்வெழுதி வென்று 1882-ல் கடலூருக்கு மாவட்ட முன்சீஃப் ஆக நியமிக்கப்பட்டார். சோளிங்கர், விழுப்புரம் உள்ளிட்ட சில இடங்களில் பணியாற்றிய பின்னர் நாமக்கல்லில் முன்சீஃப் பொறுப்பேற்றார்.

நாமக்கல்லில் முன்சீஃப் பொறுப்பேற்ற பின்னர், மே 31, 1888-ல் அவர் எழுதிய குறிப்பில் "பெரிய ஊராகிய இந்த நாமக்கல்லில் ஒரு சிவன் கோயிலோ சைவக் கோயிலோ இல்லாதிருப்பது ஆச்சரியமாகவும் வருத்தத்தைத் தரத்தக்கதாயும் இருக்கிறது. குளக்கரையில் ஒரு பிள்ளையார் இருக்கிறார்; இவரே இவ்வூர்ச் சைவர்களுக்குள்ள மூர்த்தி" என்று குறிப்பிட்டிருக்கிறார். நாமக்கல்லில் மூன்றாண்டுகள் பணியாற்றிய பின்பு கும்பகோணம் சென்றார். கும்பகோணம் பற்றி தனது நாட்குறிப்பில் "கும்பகோணத்துக்கருகில் இவ்வளவு சிவஸ்தலங்கள் இருப்பது எனக்கு ஆநந்தமாயிருக்கிறது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஒரு ஸ்தலமாவது தரிசித்து என் வாழ்நாள் பலன்படுகிறது" என்று எழுதியிருக்கின்றார். பின்னர் திருத்துறைப்பூண்டியில் சில ஆண்டுகாலம் வசித்தார். மதுரை, மானாமதுரை போன்ற இடங்களில் முன்சீஃபாகப் பணியாற்றிய பிள்ளை, 1901-ல் பணி ஓய்வு பெற்றார்.

வ.த.சுப்ரமணிய பிள்ளையின் மகன் புகழ்பெற்ற தமிழறிஞரான வ.சு. செங்கல்வராய பிள்ளை. சுப்ரமணிய பிள்ளையின் திருப்புகழ் பதிப்புப்பணி செங்கல்வராயபிள்ளையால் முன்னெடுக்கப்பட்டது

முருக வழிபாடு ஒவ்வொரு மாதமும் கார்த்திகை தினங்களில் தவறாது முருகன் ஆலயத்திற்குச் செல்வதும், பாடல் பாடுவதும் இவர் வழக்கமாக இருந்தது. தினமும் தவறாமல் 32 முறை 'தணிகையன் துணை' என்று எழுதியபின் தணிகேசன் மீது பாடல் பாடுவதைத் தொடர்ந்து மேற்கொண்டு வந்தார்.

மண்ணாசை என்கின்ற
மாயையில் வீழ்ந்து
மதிமயங்கி
எண்ணாது உனை
மறந்தேயிருதேன்
இனியாகிலும் என்
அண்ணா உன்றன்
பொன்னடிக் கமலம்
வந்தடையும் வண்ணம்
தண்ணார் அருள்புரியாய்
தணிகாசல சண்முகனே."

என்று திருத்தணிகை முருகன் மீது நூற்றுக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார். சிவபெருமான், உமையம்மை, மகாவிஷ்ணு, விநாயகர், நால்வர் மீதும் இவர் பல்வேறு காலகட்டங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார். திருப்புகழில் உள்ள 274 பாடல் பெற்ற தலங்களில் 176 இடங்களுக்குச் சென்று தரிசித்திருக்கிறார்.



திருப்பணிகள் அறச்செயல்களில் ஈடுபாடு கொண்டிருந்த சுப்பிரமணிய பிள்ளை பல்வேறு மடங்களுக்கும், ஆலயங்களுக்கும் திருப்பணிகள் செய்தார். விளக்குகள் அளிப்பது, பாத்திரங்கள், ஆலயமணிகள், வேல், ஆபரணங்கள் போன்றவற்றைத் தருவது, ஆலயங்களைப் புதுப்பிப்பது, கவனிப்பின்றி இருக்கும் தெய்வச் சிலைகளை ஆலயங்களில் பிரதிஷ்டை செய்வது போன்ற பணிகளைத் தொடர்ந்து செய்தார். மதுரையில் இருக்கும் பழமுதிர்சோலை ஆலயம் பாழ்பட்டுக் கிடப்பதைக் கண்டு வருந்தி அதைச் சீர்செய்வதில் முன்னின்றவர் பிள்ளை. சைவப் பணிக்காகவே பிறந்த நகரத்தார்களுக்கு இவர் "நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களுக்கு ஓர் விண்ணப்பம்" என்பதை எழுதி அனுப்பி ஆலயத்தைச் சீர்த்திருத்துமாறு வேண்டிக் கொண்டார். இவர் முயற்சியின் பேரில் நாளடைவில் ஆலயம் சீரமைக்கப்பட்டு சிறப்புப் பெற்றது.

திருப்புகழ் சுவடிகளுக்காக தொடர்ந்து பயணம் செய்தார். உ.வே. சாமிநாதையர் போன்றவர்களுக்கு கடிதம் எழுதி சுவடிகள் கோரினார். 1876-ம் ஆண்டு ஆறுமுக நாவலர் எழுதிய சைவ வினா-விடையில் திருப்புகழின் ஆறு பாடல்கள் இருந்தன. 1878-ம் ஆண்டு ஜூன் மாதம் 28-ம் தேதி அன்று காஞ்சிபுரம் புத்தேரி தெரு அண்ணாமலை பிள்ளை என்பவரிடமிருந்து 750 பாடல்கள் கொண்ட ஏட்டுச்சுவடிகள் கிடைத்தன. அதே வருடம் பின்னத்தூர் சீனிவாச பிள்ளையிடம் 450 பாடல்களும், பின்னர் அவரிடமே 150 பாடல்களும் கிடைத்தன. மார்ச் 20, 1881-ல் கருங்குழி ஆறுமுக ஐயர் என்ற வீர சைவரிடமிருந்து 900 பாடல்கள் திருப்புகழ்ச் சுவடிகள் கிடைத்தன. 1903-ம் ஆண்டு திருமாகறல் என்ற ஊரில் 780 பாடல்கள் கிடைத்தன. மஞ்சக்குப்பம் பள்ளி ஆசிரியர் சிவசிதம்பர முதலியார், சேலம் சரவணப்பிள்ளை, அனந்த ராம ஐயர் போன்றவர்களின் உதவியுடன் திருப்புகழ் முதல் பதிப்பை வெளியிட்டார். ஜூன் 5,1891 அன்று சிவசிதம்பர முதலியார் செப்பம் செய்து சீர்திருத்தி வ.த.சுப்பிரமணிய பிள்ளை அவர்களிடம் ஒப்படைத்து விட்டார். ஏப்ரல் 9, 1895 அன்று திருத்தம் செய்யப்பட்ட திருப்புகழ் பாடல்களை அச்சிற்குப் பதிப்பிக்கக் கொடுத்தார். சிவ சிதம்பர முதலியார் அச்சு வடிவத் திருப்புகழ் புத்தகத்தைக் காணாமலேயே இறந்துபோய் விட்டார்.

வ.த.சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் திருப்புகழைப் புத்தக வடிவில் கண்ட அன்று தனது டைரிக்குறிப்பில் ஏப்ரல், 9 1895 அன்று இவ்வாறாகக் குறிப்பிடுகிறார். 'கடந்த 24 வருடங்களுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட திருப்புகழ் பதிப்பு வேலை முடிய இவ்வளவு காலம் சென்றுள்ளது. இப்போதும் பாதி அளவே முடிந்துள்ளது'. (ரெங்கையா முருகன்

கிட்டத்தட்ட 24 ஆண்டுகள் இப்பணியில் தொடர்ந்து ஈடுபட்டிருந்தார். அந்தத் தொகுப்பிற்கு தமிழறிஞர்களிடையே மிக நல்ல வரவேற்பு கிடைத்தது. அடுத்த பாகம் வெளியிட வேண்டும் என்ற எண்ணத்தையும் பிள்ளைக்கு உண்டாக்கியது. உடனே அந்த முயற்சியில் ஈடுபட ஆரம்பித்தார். ஓய்வுபெற்றபின் தமது இறுதிக் காலம் முழுக்கத் திருப்புகழ் பாடல்களைத் தொகுப்பதிலேயே ஈடுபட்டார். 1902-ல் திருப்புகழ் இரண்டாம் பாகத்தை அச்சிட்டு வெளியிட்டார். திருப்புகழ் மூன்றாவது பாகத்தைத் தொகுக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அது நிறைவேறுவதற்கு முன் மறைந்தார்.



சீரியல் நடிகை ஆதிரை பிக் பாஸ் ஷோவில் போட்டியாளராக கடந்த வருடம் கலந்துகொண்டார். சீரியல் மூலமாக அவர் பாப்புலர் ஆனதை விட பிக் பாஸ் மூலமாக தான் சமீபத்தில் அதிகம் பேசப்படும் ஒருவர் ஆனார்.
தற்போது அவர் தாராள கவர்ச்சி உடையில் போஸ் கொடுத்து இருக்கும் ஸ்டில்களை வெளியிட்டு இருக்கிறார்.
வேற லெவல் கவர்ச்சி புகைப்படங்கள் இதோ.

# எதிர்காலத்தில் எப்படி காதலிப்பார்கள்?



விக்னேஷ் சிவன் இயக்கத்தில் பிரதீப் ரங்கநாதன் நடித்துள்ள படம் ‘LIK’ (லவ் இன்ஷூரன்ஸ் கம்பெனி).

இப்படத்தில் பிரதீப் ரங்கநாதனுக்கு ஜோடியாக கீர்த்தி ஷெட்டி நடித்துள்ளார். மேலும் இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நாம் தமிழர் ஒருங்கிணைப்பாளர் சீமானும், எஸ். ஜே.சூர்யாவும் நடித்துள்ளனர். நயன்தாரா மற்றும் 7 ஸ்கிரீன் ஸ்டுடியோஸ் இணைந்து தயாரித்துள்ள இப்படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். இப்படத்தின் பாடல்கள் வெளியாகி ரசிகர்களிடையே வரவேற்பை பெற்றது.

இதனை தொடர்ந்து இப்படத்திற்கான பணிகள் நிறைவடைந்ததை தொடர்ந்து படம் வெளியாவது குறித்த அறிவிப்புகள் வெளியானாலும் படம் வெளியாகவில்லை.

கடைசியாக ‘LIK’ படம் ஏப்ரல் 3 ஆம் தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்ட நிலையில் தற்போது ஏப்ரல் 10 ஆம் தேதி வெளியாகும் என படக்குழு வீடியோ வெளியிட்டு அறிவித்தது.

இந்நிலையில், LIK படத்தின் டிரெய்லரை படக்குழு இன்று மாலை வெளியிட்டுள்ளது. டிரெய்லர் மூலம் படம் அறிவியல் புனைகதை பாணியில் அமைந்திருப்பது தெரிகிறது.

இளம் தலைமுறையினருக்கு ஏற்ற சப்ஜெட்டாக இருப்பதால் பிரதீப் ரங்கநாதனின் இந்த படமும் ரூ.100 கோடி வசூலை தாண்டுமா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

# ஆர்யாவின் Mr X படத்திற்கு U/A சான்றிதழ்




மனு ஆனந்த் இயக்கத்தில் ஆர்யா நடிப்பில் உருவாகி உள்ள படம் ‘மிஸ்டர் எக்ஸ்’ (Mr X). இப்படத்தின் படப்பிடிப்பு 2023-ம் ஆண்டு தொடங்கி 2024-ல் நிறைவடைந்தது. அதன்பின் பல சர்ச்சைகளையும், தாமதங்களையும் சந்தித்த இப்படம் இந்த மாதத்திற்குள் வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது.

இந்த நிலையில் தணிக்கை குழு படத்திற்கு U/A சான்றிதழ் வழங்கியுள்ளது. இப்படத்தின் Satellite உரிமையை ஸ்டார் விஜயும், டிஜிட்டல் உரிமையை ஹாட்ஸ்டாரும் வாங்கியுள்ளன.

பிரின்ஸ் பிக்சர்ஸ் தயாரித்துள்ள இப்படத்தில் மஞ்சு வாரியர், சரத்குமார் மற்றும் கௌதம் ராம் கார்த்திக் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். மேலும் அதுல்யா ரவி, ரைசா வில்சன், ஜெயபிரகாஷ், காளி வெங்கட் மற்றும் அனகா ஆகியோரும் நடித்துள்ளனர்.

மிஸ்டர் எக்ஸ் படத்தை அருள் வின்சென்ட் ஒளிப்பதிவு செய்ய, திபு நினன் தாமஸ் இசையமைக்க, பிரசன்னா ஜி.கே படத்தொகுப்பு மேற்கொண்டுள்ளார்.



பிக் பாஸ் 9ம் சீசனில் டைட்டில் ஜெயித்தவர் திவ்யா கணேஷ். அவர் அந்த ஷோவுக்கு வரும் முன்பு பாக்கியலட்சுமி உள்ளிட்ட பல சீரியல்களில் நடித்து இருந்தார். ஆனால் பிக் பாஸ் தான் அவரை புகழின் உச்சிக்கே கொண்டு சென்றது. திவ்யா கணேஷ் தற்போது சேலையில் சற்று கிளாமர் ஆக இருக்கும் ஸ்டில்களை வெளியிட்டு இருக்கிறார். அழகிய புகைப்படங்கள் இதோ.

# பைக்கர் விமர்சனம்




2003ஆம் ஆண்டில் ஆரம்பிக்கும் கதையில், ஷர்வானந்த் மோட்டோகார்ட் நடத்தி தனது மனைவி மாளவிகா நாயர் மகன் இஷான் ஆகியோருடன் அமைதியான குடும்ப வாழ்க்கை வாழ்ந்து வருகிறார். ஒருநாள் பள்ளியில் தந்தையை பற்றி தவறாக பேசிய நண்பனை மகன் அடிக்கும் சம்பவம் மூலம், ஷர்வானந்த் தனது கடந்தகாலத்தை மறைத்து வாழ்கிறார் என்பதற்கான குறிப்பு கிடைக்கிறது.

இதற்கிடையில், ஷர்வானந்த்தின் தந்தை ஜஎன்ஜி நிறுவன மோசடி குற்றச்சாட்டில் ராஜசேகர் அவமானப்படுத்தப்படுகிறார். தனது தந்தையின் மானத்தை மீட்டெடுக்க, பல ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் மோட்டோகார்ட் ரேஸிங் களத்தில் இறங்கும் ஷர்வானந்த், அதில் வெற்றி பெற்றாரா? தந்தை அவரை ஏற்றுக்கொண்டாரா? என்பதே படத்தின் மீதிக்கதை.

**நடிகர்கள்**

விகாஸ் கதாபாத்திரத்தில் நடித்து இருக்கும் ஷர்வானந்த் முழுமையாக கதாபாத்திரத்திற்கு பொருந்தியுள்ளார். குறிப்பாக ரேஸிங் காட்சிகளில் அவரது உடல் உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு தெளிவாக தெரிகிறது. முகபாவனைகளிலும் நன்றாக நடித்துள்ளார். ராஜசேகர் தனது அனுபவத்தால் கதாபாத்திரத்திற்கு வலு சேர்த்துள்ளார். தந்தையாகவும், தனக்கான மாஸ் காட்சிகளிலும் சமநிலையுடன் நடித்துள்ளார். மாளவிகா நாயர் எளிமையான கதாபாத்திரத்தில் உணர்ச்சிப்பூர்வமான நடிப்பை கொடுத்துள்ளார்.

**இயக்குநர்:** இயக்குனர் அபிலாஷ் ரெட்டி, மோட்டோகிராஸ் போன்ற அதிகமாக பயன்படுத்தப்படாத விளையாட்டை மையமாக கொண்டு கதை சொல்லியிருப்பது படத்தின் பெரிய பலம். வழக்கமான விளையாட்டு படமாக இருந்தாலும், திரைக்கதை விறுவிறுப்பாக நகர்கிறது. குடும்ப உணர்வுகள், தந்தை-மகன் உறவு ஆகியவை ஓவராக இல்லாமல் கதையோடு கலந்து வருகிறது. சில வசனங்கள் குறிப்பாக நினைவில் நிற்கும் வகையில் உள்ளது. ரேஸிங் காட்சிகள் படத்தின் முக்கிய பலம். பைக் சாகச காட்சிகள் ரசிக்க வைக்கிறது.

**இசை மற்றும் ஒளிப்பதிவு**

ஜிப்ரானின் இசையில் பாடல்கள் கேட்கும் ரகம். பின்னணி இசை படத்திற்கு பலம். யுவ்ராஜின் ஒளிப்பதிவு படத்திற்கு நல்ல துணையாக இருக்கிறது.



# டிமான்டி காலனி 3 படப்பிடிப்பு நிறைவு

இயக்குநர் அஜய் ஞானமுத்து இயக்கத்தில் ஹாரர் திரில்லர் படமாக உருவாகி 2015-ம் ஆண்டு வெளியான டிமான்ட்டி காலனி திரைப்படம் மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றது. இந்தப் படத்தின் வெற்றியைத் தொடர்ந்து அதன் 2-ஆம் பாகத்தை படக்குழு வெளியிட்டது. இந்தப் படமும் மக்களிடையே மிகப்பெரிய வரவேற்பை பெற்று வெற்றி திரைப்படமாக மாறியது.

உலகளவில் டிமான்டி காலனி 2 திரைப்படம் 80 கோடி ரூபாய் வசூலித்தது குறிப்பிடத்தக்கது. இரண்டாம் பாகத்தின் வெற்றியை தொடர்ந்து படக்குழு மூன்றாம் பாகத்தையும் உருவாக்கி இருக்கிறது. இந்தப் பாகத்தை பேஷன் ஸ்டுடியோஸ் மற்றும் கோல்ட் மைன் பிலிம்ஸ் இணைந்து தயாரித்துள்ளன.

அருள்நிதி, பவானி சங்கர் நடிப்பில் உருவாகி வரும் டிமான்டி காலனி படப்பிடிப்பு நிறைவடைந்துள்ளதாக படக்குழு தெரிவித்துள்ளது. கோடைக்காலத்தை முன்னிட்டு அடுத்த மாதம் படம் ரிலீஸ் ஆகலாம் எனத் தெரிகிறது.

# அரசியல் குறித்த கேள்வி... 'நோ கமெண்ட்ஸ்' என்று பதில் அளித்த ரஜினிகாந்த்



சென்னை விமான நிலையத்தில் நடிகர் ரஜினிகாந்த் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:- 'ஜெயிலர்2' படத்திற்கான படப்பிடிப்பு முடியும் தருவாயில் உள்ளது. வெளியீட்டு தேதியை பட நிறுவனம் அறிவிக்கும். கமலுடன் இணையும் படத்திற்கான படப்பிடிப்பு ஆகஸ்ட் மாதத்தில் தொடங்கும் என்றார்.

இதனிடையே, தேர்தல் நெருங்கிக்கிட்டு இருக்கு... மக்களுக்கு என்ன சொல்ல விரும்புறீங்க...? என்று செய்தியாளர் எழுப்பிய கேள்விக்கு வணக்கம் என்றார். மேலும் தேர்தல் பிரசாரத்திற்கு நீங்கள் போக வாய்ப்பிருக்கா என்று செய்தியாளர் எழுப்பிய கேள்விக்கு 'நோ கமெண்ட்ஸ்' என்று கூறினார்.

பாய்ஸ் படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானவர் நடிகை ஜெனிலியா. இதன்பின் சச்சின், சந்தோஷ் சுப்பிரமணியம், உத்தமபுத்திரன், வேலாயுதம் என தொடர்ந்து முன்னணி நட்சத்திரங்களுடன் இணைந்து நடித்து வந்தார்.

தமிழில் மட்டுமின்றி தெலுங்கு, இந்தி ஆகிய மொழிகளிலும் நடித்து முன்னணி இந்திய நடிகையாக உயர்ந்தார். திருமணத்திற்கு பின் சில கதைகளை மட்டுமே தேர்ந்தெடுத்து நடித்து வருகிறார். கடந்த ஆண்டு வெளிவந்த சித்தாரே ஜமீன் பர் படத்தில் அமீர் கானுக்கு ஜோடியாக நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அவ்வப்போது தனது சமீபத்திய புகைப்படங்களை பதிவிடுவார். அந்த வகையில், தற்போது தன்னுடைய லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்களை பதிவிட்டுள்ளார். இதோ பாருங்க:



# 'லெனின் பாண்டியன்' படத்தில் ஸ்ரிதா ராவ் கதாபாத்திரம் குறித்து வெளியான போஸ்டர்



டி.டி. பாலசந்திரன் இயக்கத்தில், சத்யஜோதி பிலிம்ஸ் தயாரிப்பில் உருவாகி உள்ள படம் 'லெனின் பாண்டியன்'. நடிகர் சிவாஜி கணேசனின் பேரன் தர்ஷன் கணேசன் நாயகனாக அறிமுகமாகும் இப்படத்தில், இசையமைப்பாளர் கங்கை அமரன் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

இப்படத்திற்கு இளையராஜா இசையமைத்துள்ளார். 32 ஆண்டுகளுக்குப் பிறகு தயாரிப்பாளர் டி.ஜி. தியாகராஜனுடன் இளையராஜா இணையும் படம் இதுவாகும். இதனால் இப்படத்தின் மீதான எதிர்பார்ப்பு மேலோங்கி உள்ளது. கிராமப்புற பின்னணியைக் கொண்ட ஆக்ஷன் கலந்த கதை, இதில் தர்ஷன் காவல் அதிகாரி வேடத்தில் நடித்துள்ளார். நீண்ட இடைவெளிக்குப் பிறகு நடிகை ரோஜா இப்படத்தின் மூலம் தமிழில் ரீ-என்ட்ரி கொடுத்துள்ளார்.

'லெனின் பாண்டியன்' படத்தில் நடித்து வரும் நடிகர்களின் கதாபாத்திரங்கள் குறித்து படக்குழு போஸ்டர் வெளியிட்டு வருகிறது. அந்த வகையில், நடிகை ஸ்ரிதா ராவ் கதாநாயகியாக நடிக்கிறார் என்றும் இப்படத்தில் அவரது கதாபாத்திரன் பெயர் பிரியா என்றும் படக்குழு போஸ்டர் வெளியிட்டுள்ளது.

# கார் மேனி செல்வம் விமர்சனம்




கார் மேனி செல்வம்- விமர்சனம்(2.5 / 5)

சிறிய வீட்டில் வாழும் சமுத்திரக்கனி, பணக்காரர் கௌதம் மேனனிடம் கார் டிரைவராக வேலை பார்க்கிறார். எப்படியாவது பணம் சம்பாதித்து மேலே வர வேண்டும் என்று நினைக்கும் மனைவி லட்சுமி பிரியாவின் தூண்டுதலால், பல வழிகளில் சம்பாதிக்க முயற்சி செய்யும் சமுத்திரக்கனி, எதிர்பாராத சூழ்நிலைகளால் கடன் சுமையில் சிக்கிக் கொள்கிறார்.

கடன் பிரச்சனையில் இருந்து தப்பிக்க வெளிநாடு செல்கிறார் சமுத்திரகனி. அங்கு குடும்பத்தை பற்றி நினைத்து மீண்டும் ஊருக்கு திரும்ப நினைக்கிறார். ஆனால் திரும்பி வரமுடியாத சூழ்நிலை ஏற்படுகிறது.

இறுதியில் சமுத்திரகனி சொந்த ஊருக்கு திரும்பினாரா? கடன் பிரச்சனையில் இருந்து மீண்டாரா? என்பதே படத்தின் மீதிக்கதை.

### நடிகர்கள்

படத்தில் நாயகனாக நடித்து இருக்கும் சமுத்திரக்கனி, அமைதியான, உடைந்த மனநிலையுடன் போராடும் குடும்பத் தலைவனாக மிக இயல்பாக நடித்திருக்கிறார். எந்த இடத்திலும் மிகைப்படுத்தாமல், தன் கதாபாத்திரத்தை கட்டுப்பாட்டுடன் கொண்டு சென்றிருப்பது படத்தின் மிகப்பெரிய பலம். பல காட்சிகளில் அவரது நடிப்பு மனதை தொட்டுச் செல்கிறது.

நாயகியாக நடித்திருக்கும் லட்சுமி பிரியா, ஒரு நடுத்தர குடும்ப மனைவியாக உண்மையிலேயே வாழ்ந்திருக்கிறார். கணவன்-மனைவி இடையிலான அன்றாட உரையாடல்கள் மிகவும் இயல்பாக அமைந்துள்ளது. இவர்களின் மகனாக வரும் சிறுவனும் தனது நடிப்பால் கவனம் ஈர்க்கிறார்.

கௌதம் மேனன், எளிமையான பணக்காரராக கவர்கிறார். அவருடைய பாத்திரம் கதைக்கு ஒரு சமநிலையை கொடுக்கிறது. மற்ற துணை கதாபாத்திரங்களும் கதைக்கு தேவையான அளவில் உதவியிருக்கிறார்கள்.

### இயக்குநர்

நடுத்தர வர்க்க மனிதனின் வாழ்க்கைப் போராட்டத்தையும், கடன் சுமையையும், குடும்ப பொறுப்புகளையும் எளிமையாக சொல்லும் ஒரு உணர்ச்சி பூர்வமான படமாக இயக்கி இருக்கிறார் இயக்குனர் ராம் சக்ரி. படத்தின் காட்சியமைப்பு  சினிமா என்று தோன்றாமல், நம்மை சுற்றி நடக்கும் வாழ்க்கையைப் பார்க்கும் உணர்வை கொடுக்கிறது.

கமர்ஷியல் அம்சங்களை விட, கதைக்கும் உணர்வுக்கும் முக்கியத்துவம் கொடுத்திருப்பது படத்தின் சிறப்பு. பெரிய திருப்பங்கள் இல்லாமல் மெதுவாக செல்லும் திரைக்கதை படத்திற்கு பலவினம்.

### ஒளிப்பதிவு

யுவராஜ் தக்ஷன் ஒளிப்பதிவு படத்திற்கு பெரிய பலம். அதுபோல் பின்னணி இசை கதையோடு பயணித்து இருக்கிறது.



பாபநாசம் படத்தில் கமலின் மகளாக நடித்து இருந்தவர் எஸ்தர் அனில். குழந்தை நட்சத்திரமாக இருந்த அவர் வளர்ந்துவிட்டதால் முக்கிய ரோல்களிலும் நடிக்கிறார்.

தற்போது எஸ்தர் அனில் மிக கவர்ச்சியாகவும் போட்டோஷூட் எடுக்க தொடங்கி இருக்கிறார் அவர். அதனால் அடிக்கடி அவர் போட்டோக்கள் இணையத்தில் வைரல் ஆகின்றன.

தாராள கவர்ச்சி லுக்கில் அவர் போஸ் கொடுத்து இருக்கும் லேட்டஸ்ட் ஹாட் ஸ்டில்களை பாருங்க.

# இந்தி படத்தில் நடிக்க நயன்தாரா வாங்கும் சம்பளம் இத்தனை கோடியா?



'லேடி சூப்பர் ஸ்டார்' என ரசிகர்களால் கொண்டாடப்படும் நயன்தாரா, சினிமாவுக்கு வந்து 22 ஆண்டுகள் ஆகிறது. பெரிய சம்பளம் வாங்கும் நடிகையாக திகழும் நயன்தாரா, படங்களில் முதன்மை கதாபாத்திரத்திலும் நடித்து அசத்தி வருகிறார்.

நயன்தாரா கடைசியாக 'மனசங்கர வர பிரசாத் காரு' என்ற படத்தில் நடித்திருந்தார். அந்த படத்தில் அவரது சம்பளம் ரூ.10 கோடி என்று பேசப்பட்டது. தென்னிந்திய சினிமாவில் இது நடிகைக்கான பெரிய சம்பளமாகவும் பேசப்பட்டது.

இதற்கிடையில் வம்சி பைடிபள்ளி இந்தியில் இயக்கும் புதிய படத்தில் சல்மான்கான் ஜோடியாக நயன்தாரா நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார். இந்த படத்தில் அவரது சம்பளம் ரூ.11 கோடி என்று பேசப்பட்டுள்ளதாம்.

'ஜவான்' படத்தை தொடர்ந்து மீண்டும் நயன்தாரா இந்தியில் நடிக்கவுள்ளது குறிப்பிடத்தக்கது.






## இன்முகம்

இன்முகம் என்பது அன்பையும்
கனிவையும் வெளிப்படுத்தும்
புன்னகை பூத்த முகம் !

இன்சொல் மற்றவர் மனதை
எளிதில் கவரும் ஆற்றல்
கொண்டது !

இதயக் கதவைத் திறக்கும்
திறவுகோல்!

வாடும் பயிருக்கு பெய்யும்
மழை!

வார்த்தைகள் தோற்கும்
இடத்தில் அன்பு மவுனமாய்
பேசும் முகம் மலர மனம்
மலரும்!

மானிடத்தின் மிகச் சிறந்த
அணிகலன் அதுவே!

கதிரவன் கண்ட தாமரையாய்
காண்பவர் உள்ளம் குளிரச்
செய்யும்!

ஈகையினும் மேலானது
இன்முகம் ஆயிரம் சொற்கள்
சொல்லாததை அழகிய
புன்னகை சொல்லிவிடும்!

அன்பின் ஊற்றே
அந்த மலர் முகம்!
கடும் சொல் இல்லாத கனிந்த
இதயம் கண்ணாடி காட்டு
உன் பிம்பம்!

வாடிய பயிரை வாழ வைக்கும்
வானத்து நிலவின் இன்முகம்!

சாதி மதங்கள் கடந்த மொழி
சகத் துயரம் கலையும் வழி!

விலையில்லா இந்தப்
புன்னகை தான் விண்ணகம்
காட்டும் நல்வழி!
கோடி கொடுத்தும் வாங்க
இயலா குணத்தின் மகுடம்
இன்முகம்!

வாடி நிற்கும் மானுடருக்கு
வாழ்க்கை அளிக்கும் வான்
மழை!

உதட்டில் மலரும்
சிறுநகை அது உள்ள
கதவைத்திறக்கும்!

பகைவன் கூடப் பணிந்து
போகும் பாச கருவி
இன்முகம்!

இருண்ட வீட்டில் ஏற்றிய
தீபமாய் இருதய பாரம்
குறைந்திடும் !

அகத்தின் அழகை
வெளிக்காட்டும் அற்புத
கண்ணாடி இன்முகம்!

வார்த்தையில்லா உரையாடல்
வழியில்லா அறுவை சிகிச்சை!



இன்முகம் காட்டி
நீ நின்றால்
இவ்வுலகம்
உந்தன்
காலடியில்!

**பெ.திருமுகம்**
மணமேல்குடி



## ஔவை வழியே அறிவு!

நேரிசை வெண்பா!

ஆத்திசூடி
கொன்றைவேந்தன்
அன்பான நல்வழி
ஏத்திப்புகழும் இனியநல்..
காத்திடும் ஔடதமாம்
ஞானக்குறளும் அழகான
ஔவை வழியே அறிவு!

பண்டாரப்பாட்டு
பளிங்கு விநாயகர்
கண்ணாம் அகவலும்
கற்கண்டாம்...
மண்ணிலே ஔடதமாம்
மூதுரைஅன்பாகத்தந்திட்ட
ஔவை வழியே அறிவு!

**முனைவர்
இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.



கடைசி சொட்டு நீரைக்
குளம் உறிஞ்சும்போது
கருமேகம் பார்த்து
விடுகிறது.

குடைகள் அழகாவது
மழைக்கு உயர்த்திப்
பிடிக்கையில்தான்.



உலர்ந்த
உதடுகளை
ஈரப்படுத்தத்
தேவை
வானின்
முத்தம்.

**ரிஷபன்**



குழந்தைகள் கைவண்ணம்

## நீச்சல் பழகு

நீச்சல் பழகு நித்தமும்
சைக்கிள் பழகு..

நீச்சல் பழக நிறைய
நன்மை சைக்கிள்
பழக உடலும்
வலிமை..

நீந்தநீந்த சீராகும்
சிறந்த மூச்சு
உயிராகும்..
சைக்கிள் ஓட்ட ஓட்ட
நோய்கள் ஓடும்..

நீச்சலும் சைக்கிளும்
நாளும் பேணிட
மனமும் நன்றாய்
ஆகிடுமே...

நீச்சலும் சைக்கிளும்
என்றுமே இருதயம்
காத்திடும் இன்பமே..



**ஹரணி** தஞ்சாவூர்

## புதியதோர் உலகம் படைப்போம்



நாடுகளுக்கிடையெந்தத்
தடையுமின்றி
நாடுசெல்ல
அனுமதியும்
தேவையின்றி
வாடுகின்றார்
ஒருநாட்டு
மக்களென்றால்
வளநாடு
கரங்கொடுத்துக்
காத்து நின்று
பாடுபட்ட பலனெல்லாம் அனைவருக்கும்
பகிர்ந்தளிக்கும் பொதுவுடைமை எண்ணம் பூத்த
ஏடுகளில் மட்டுமிங்கே எழுதி வந்த
ஏற்றமுடை புதுவுலகைச் செய்வோம் வாரீர் !

பலமொழிகள் பேசினாலும் அறிவு என்னும்
பாலத்தால் ஒருங்கிணைத்துக் கணினி மூலம்
பலரிடத்தும் பலமொழியில் பேசதற்குப்
படிசமைத்து மொழிச்சண்டை ஏதுமின்றி
இலக்கியங்கள் மொழிமாற்றம் செய்து தம்தம்
இலக்கியமாய்ப் போற்றுகின்ற பொதுமை நெஞ்சில்
கலந்தெந்தக் காழ்ப்புமின்றி வாழ்வதற்குக்
கண்டிடுவோம் புதியதொரு உலகை வாரீர் !

உயிர்பறிக்கும் குண்டுகளைச் செய்வோரின்றி
உயிர்மாய்த்து நிலம்பறிக்கும் போர்களின்றி




உயர்சக்தி அணுக்குண்டு அழிவிற்கின்றி
உயர்த்துகின்ற ஆக்கத்தின் வழிசமைத்தே
உயரறிவால் கண்டிடித விஞ்ஞானத்தை
உயர்வாழ்வின் மேன்மைக்குப் பயனாய்ச்
செய்து பயமின்றி அமைதியாக வாழ்வதற்கே
படைத்திடுவோம் புதுவுலகை வாரீர் வாரீர் !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**

## உலக மொழிகளின் மூலம் தமிழ்மொழி

இலக்கண இலக்கியங்களின் குவியல் தமிழ்மொழி
இனிய உச்சரிப்பின் இனிமை தமிழ்மொழி
உலகப் பொதுமறையை உலகிற்கு தந்திட்ட தமிழ்மொழி
உலகமொழிகளின் மூலம் ஒப்பற்ற தமிழ்மொழி
காவியங்களும் காப்பியங்களும் நிறைந்த தமிழ்மொழி
கனிச்சாறையும் கற்கண்டையும் மிஞ்சிய தமிழ்மொழி
எண்ணிலடங்கா சொற்கள் கொண்ட தமிழ்மொழி
எண்ணத்தை உயர்வாக்கும் உயர்ந்த தமிழ்மொழி
பழமைக்கு பழமையான தொன்மைமிகு தமிழ்மொழி
புதுமைக்கு புதமையான புத்துணர்வுமிகு தமிழ்மொழி
இணையத்தில் கொடிகட்டிப் பறக்கும் தமிழ்மொழி
இணையில்லாப் புகழ்மிக்கக உயர்தனித் தமிழ்மொழி
முதல் மனிதன் பேசிய முதல்மொழி தமிழ்மொழி
மூத்தோரை மதிக்கும் மரியாதை மிக்க தமிழ்மொழி
உலகிற்கு பண்பாட்டை பறைசாற்றும் தமிழ்மொழி
உலக இலக்கியங்களில் முதன்மையானது தமிழ்மொழி
மனிதநேயத்தை முன்மொழியும் மொழி தமிழ்மொழி
மனிதனை மனிதனாக மதிக்கும் நல் தமிழ்மொழி
பல்லாயிரம் ஆண்டுகளாக நிலைத்திருக்கும் தமிழ்மொழி
பல நூறு மொழிகளில் சிறந்திருக்கும் தமிழ்மொழி
புலவர்கள் பலரை உருவாக்கிய தமிழ்மொழி
அறிஞர்கள் பலரை செதுக்கிய தமிழ்மொழி
விஞ்ஞானிகள் பலரை வளர்த்த தமிழ்மொழி
மெஞ்ஞானிகள் பலரை வழங்கிய தமிழ்மொழி
இயல்,இசை,நாடகம் சிறந்து விளங்கிடும் தமிழ்மொழி
எத்திக்கும் முத்தமிழிலும் முத்திரை பதித்திடும் தமிழ்மொழி
அகமும் புறமும் அழகாக விளங்கும் தமிழ்மொழி
அற்புத உறவுகளுக்கு தனித்தனி சொல்லழகு தமிழ்மொழி
முல்லை,மருதம்,குறிஞ்சி,நெய்தல்,பாலை பாடிய தமிழ்மொழி
மூச்சாக உலகத் தமிழருக்கு விளங்கிடும் தமிழ்மொழி
மனதை இளமையாக்கும் இனிய தமிழ்மொழி
மமதையை அழித்து ஒழித்திடும் தமிழ்மொழி
தாலாட்டு தொடங்கி ஒப்பாரி வரை இனிய தமிழ்மொழி
தமிழனின் பிறப்பு முதல் இறப்பு வரை தொடரும் தமிழ்மொழி
ஒரு எழுத்தில் பொருள் கூறும் தமிழ்மொழி
ஒரு எழுந்து மாறினால் பொருள் மாறும் தமிழ்மொழி
காந்தியடிகள் மனதார புகழ்ந்திட்ட தமிழ்மொழி
தமிழனாக பிறந்திட ஆசைப்பட வைத்த தமிழ்மொழி
கவிஞர்கள் கட்டித் காத்த கரும்பு தமிழ்மொழி
கவிதைகள் கட்டித்தங்கம் போன்ற தமிழ்மொழி
உலகம் உள்ளவரை என்றும் நிலைக்கும் தமிழ்மொழி
உலகில் ஈடு இணையற்ற உன்னதமொழி தமிழ்மொழி!

**கவிஞர் இரா.இரவி**



## நீர்வாழ் விலங்குகளைக் காப்போம்!

நேரிசை வெண்பா!

பலவித அச்சுறுத்தல்
பாங்கின்றிக் காணும்
நலமில்லா வாழ்வினை
நாளும்..பலகாலும்
காணுமே நீர்வாழ்வில்
காப்பின்றி எஞ்ஞான்றும்
பேணுதல் நம்மின்நல் பீடு!

விலங்குகளின் பன்முக
வீறுகொண்ட தன்மை
கலையாகக் கண்டேதான்
காலம்..விலைமதிக்க
ஒண்ணா நிலையிலே
ஒண்மையுடன் வாழ்கின்ற
கண்ணான நீர்விலங்கைக்
காண்!

## விருந்தினரை வரவேற்போம்!

விருந்தினரை வரவேற்போம்
வீறுகொண்டே
திகழ்ந்திடுவோம்
கரும்பாகக் கண்டிடுவோம்
கனிவாக உபசரிப்போம்!
அருந்துதலைச்செய்திடுவோம்.
அன்பாக நடத்திடுவோம்
பெருமையாகஎண்ணிடுவோம்
பீடுநடை போட்டிடுவோம்!

அகம்மலர வரவேற்போம்
அருள்காட்டிமகிழ்ந்திடுவோம்
முகங்கோணா வகையினிலே
மேன்மையாக நடத்திடுவோம்!
தகுதியான உணவுவகை
தந்தேதான் இன்புறுவோம்
வகையாக எண்ணித்தான்
வளமாகத்திகழ்ந்திடுவோம்!

**முனைவர்
இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.



1. நதிகள் தன்னைத்தானே
கட்டுப்படுத்திக் கொண்டால்
அது கரை மற்றவர்கள்
கட்டுப்படுத்தினால்
அது அணை அதுபோலவே
மனிதனும் தாமாக
கட்டுக்கடங்கினால் அது
கௌரவம் அவர்கள்
அடக்கினால் அது அவமானம்

2. வாழ்க்கை என்னும் தேர்வு
கூடத்தில் பார்த்து எழுத
தடை இல்லை ஆனால்
எல்லோருக்கும் ஒரே
மாதிரியான விடை இல்லை

3. பிறர் உழைப்பை
திருடி கொள்பவர்களும்
திருடர்கள் தான்


4. சடலத்தை எரிப்பவர்
வெட்டியான் சாம்பலை
கரைப்பவர் புரோகிதர்
இரண்டு பேருக்குமே
மற்றவர்கள் சாவில் தான்
வாழ்க்கை பிறகு எப்படி
வந்தது ஏற்றத்தாழ்வு

5.வாழ்க்கையில் வாழை
இலையாக இருக்காதே
பயன்படுத்தி முடிந்ததும்
தூக்கி எறிந்து விடுவார்கள்
அதற்கு பதிலாக
வேப்பிலையாக இரு
உன்னை பயன்படுத்துவதற்கு
முன்பாக பலமுறை யோசித்துப்
பார்த்து

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

# நூல் விமர்சனம்

குழந்தையுடன் குழந்தையாய் !
(சிறுகதைகள்)
நூல் ஆசிரியர் : நெருப்பாலைப் பாவலர்
இராம. இளங்கோவன்!
மின்னஞ்சல் firewavespoet@gmail.com
நூல் விமர்சனம் : கவிஞர் இரவி !
முக்கனிப் பதிப்பகம் எண் 26.
இரண்டாம் 'டி' குறுக்குத் தெரு ,சர்
.எம் .வி .நகர், இராமையா தேங்காய்த்
தோட்டம்.,பெங்களூரு.5600016.
கைப்பேசி 09845526064.
224.பக்கம் விலை 150 ரூபாய்




நூல் ஆசிரியர் நெருப்பாலைப் பாவலர் இராம. இளங்கோவன் அவர்கள் பெங்களூரு பாவணர் பாட்டரங்கின் பொறுப்பாளர், பெங்களூரு பெருமைகளில் ஒன்றானவர் .கவிதைகளை நெருப்பென அனல் வரிகளால் வடித்து சமூகத்தைத் தட்டி எழுப்புபவர். இலக்கிய ஆர்வலர். மரபு, புதுக்கவிதை, ஹைக்கூ கவிதை என மூன்று பாக்களும் வடிக்கும் ஆற்றல் மிக்கவர். சிறுகதையும் நன்றாக எழுத வரும் என்பதை மெய்ப்பிக்கும் விதமாக "குழந்தையுடன் குழந்தையாய்" என்ற இந்த நூலில் 26 சிறுகதைகள் எழுதி உள்ளார். சகலகலா வல்லவர் என்பதை மெய்பித்து உள்ளார். இந்நூலை தனது தந்தை தெய்வத்திரு ஆறு. இராமசாமி அவர்களுக்கு காணிக்கை ஆக்கி உள்ளார்.

பெங்களூரு திருவள்ளுவர் மன்றத்தின் மாதர் கூட்டத்திற்கு இலவசமாக இடமளித்து வரும் புரவலர் முனைவர் ஆ. மதுசூதனபாபு அவர்களும், எழுத்தாளர் மொழிபெயர்ப்பு நாவல் ஆசிரியர் ஜெயா வெங்கட்ராமன் அவர்களும், அணிந்துரை அழகுரையாக வழங்கி உள்ளனர். முக்கனி பதிப்பகம் சார்பாக சுலோச்சனா இளங்கோவன் அவர்கள் பதிப்புரை வழங்கி உள்ளார்கள். நூலாசிரியர் பற்றிய குறிப்புகள் அவரது சாதனையை வெற்றியை, உழைப்பை பறைசாற்றும் விதமாக உள்ளன.

முதல் சிறுவிதையான "பாறைக்குள் பவளம்" மனிதநேயத்தை வலியுறுத்தும் விதமாகவும், சாதிமத பேதங்களை சாடும் விதமாகவும் நன்கு எழுதி உள்ளார். ஒன்னா, அம்பி என்று பிராமணர்கள் பேசும் வழக்கச் சொல்லினைப் பயன்படுத்தி இயல்பாக கதை வடித்துள்ளார். திருப்பதி உண்டியலில் பணம் போடுவதை விட, உயிருக்குப் போராடும் மனிதனின் சிகிச்சைக்கு உதவுவது சிறப்பு என்ற கருத்தை நன்கு வலியுறுத்தி, சமுதாயத்தை சீர்படுத்துவதற்கு தேவையான, நல்ல பல கருத்துக்களை நன்கு வலியுறுத்தி உள்ளார்.பிராமணர்களின் பேச்சு வழக்கில் நன்றாக எழுதி உள்ளார் .

அடுத்த பதிப்பில் எழுத்துப் பிழைகள் நீக்கி வெளியிட வேண்டும். 'மூளைவளர்ச்சி இல்லாத ' என்பது 'மூலவளர்ச்சி இல்லாத' என்று உள்ளது.

சிறுகதைகள் முழுவதும் மனிதநேயம் விதைக்கும் விதமாக, சிந்திக்க வைக்கும் விதமாக நன்கு வடித்துள்ளார். பாராட்டுக்கள். சிறுகதைகளுக்கான தலைப்புகளும் நன்கு தேர்ந்தெடுத்த சொற்களாக வைத்து உள்ளார். பாறைக்குள் பவளம், திசை மாறிய தென்றல், தாகம் தீர்க்கும் பாலைவனம், மனக்காலத்தில் கசிந்த கருணை, மனசாட்சி, இப்படி சிறுகதையின் தலைப்புகளே கதையின் கருவை பறைசாற்றும் விதமாக மிகப் பொருத்தமாக சூட்டி உள்ளார். நூலாசிரியர் நெருப்பலைப் பாவலர் இராம இளங்கோவன் அவர்கள், கவிஞர் என்பதால், கதையில் வரும் பாத்திரங்கள் பேசும் வசனங்கள் கவித்துவமாக உள்ளன. சில இயல்பாக உள்ளன. காலையில் எழுந்து விடுவான் என்பதை இப்படி எழுதி உள்ளார். பாருங்கள். தாகம் தீர்க்கும் பாலைவனம் ! உதயசூரியன் தன் உறக்கத்தைக் கலைந்து விட்டு, கடலில் குளித்து புறப்படும் முன்பே, அன்றாடம் அதிகாலையே உறக்கத்தை உதறித் தள்ளி எழுந்து விடும் வழக்கமுடைய முகிலன்.

சின்ன சின்ன சிறுகதைகள் மூலம் சிந்தையில் சிறு மின்னலை உருவாக்கி வெற்றி பெறுகின்றனர் நூல் ஆசிரியர். சிறுகதை எப்படி எழுத வேண்டும் என்ற இலக்கணம் கூறும் விதமாக கதைகளை வடித்து உள்ளார். வளரும் எழுத்தாளர்கள் இந்நூலை படித்தால் ஒரு சிறுகதை எப்படி எழுத வேண்டும் என்ற புரிதலை உண்டாக்கும் நூல். "வானத்தில் இரவு நேரங்களில் எண்ணற்ற நட்சத்திரங்கள் இருந்த போதும் பளிச்சென ஒற்றை வெண்ணிலவைக் காணமுடிவதைப் போல,"இப்படி ஒவ்வொரு சிறுகதையையும் கவித்துவமான உவமைகளுடன் தொடங்கி படிக்கும் ஆர்வத்தை தொடக்கத்திலேயே உண்டாக்கி விடுகின்றார். எடுப்பு, தொடுப்பு, முடிப்பு என சிறுகதைகளைச் சிறப்பாக கட்டமைத்து உள்ளார்.

"சிதைக்கப்பட்ட உயிர்" என்ற சிறுகதையில் அனாதை குழந்தையின் மனவலியை நன்கு உணர்த்தி உள்ளார். கதை படிப்பது போல இல்லை, ஒவ்வொரு சிறுகதையும் படிக்கும் போது நமது மனக்கண்ணில் காட்சியாக விரிகின்றன. நேரடியாகப் பார்க்கும் நிகழ்வுகள் போல மனதில் பதிந்து விடுகின்றன. இது நூலாசிரியர் வெற்றி.

'குழந்தை இல்லை' என்று அனாதை விடுதியில் தத்து எடுக்கின்றனர். சில வருடங்கள் ஆனதும் அவர்களுக்கு குழந்தை பிறக்கின்றது. சொந்தக் குழந்தை வந்தவுடன், தத்து வந்த குழந்தையை வெறுக்கின்றனர். பின் விரட்டுகின்றனர். மனிதர்களின் மனம் மிகவும் சுயநலமிக்கது. மனிதாபிமானமற்றவர்கள் நாட்டில் மலிந்து விட்டனர், என்பதை கதைகளில் நன்கு வலியுறுத்தி உள்ளார். எந்த ஒரு தவறுமே செய்யாமல் அனாதை குழந்தை ஆக்கப்பட்டு, அவர்களின் உயிர் உள்ள வரை வாடும் அவலத்தை வார்த்தைகளில் வடிக்க முடியாது. எனவே அவர்கள் மீது அன்பு செலுத்துங்கள் என்ற அறிவுரையை ஒரு சிறுகதையின் மூலம் உணர்த்தி உள்ளார். 'குழந்தையுடன் குழந்தையாய்' நூலில் தலைப்பில் உள்ள சிறுகதை மிக நன்று. இக்கதை படித்த போது இது நூலாசிரியரின் சொந்தக்கதை என்பது எனக்கு விளங்கியது. எனக்கு மட்டுமல்ல படிக்கும் வாசகர்கள் அனைவருக்கும் விளங்கும். உண்மைதான். அரசு வேலையை விட்டு விட்டு, முழு நேர எழுத்தாளராக, கவிஞராக மாறியதை சராசரிப் பெண்கள் யாருமே ஏற்க மாட்டார்கள். இன்று நாட்டு நடப்பு அப்படித்தான். எழுத்தாளர், கவிஞர் இல்லங்களில், வெளி இடங்களில் கிடைப்பது போன்ற மரியாதை அவரவர் இல்லத்தில் கிடைப்பது இல்லை. வீட்டுக்கு வீடு வாசப்படி என்பதைப் போல எல்லோருக்குமான அனுபவம் இதுதான். ஆனால் ஒரு கவிஞரோ, எழுத்தாளரோ மறைந்தபிறகு அவரை வெளிஉலகம் பாராட்டும் போது குடும்பம் உணரும்.

இது கதை அல்ல உண்மை என்பதால் 'கடைசிக்கதை' கதையல்ல சொந்த வாழ்வில் நிகழ்வு என்பதால் படித்துவிட்டு கண்ணில் கண்ணீர் வந்தது. நூலாசிரியர் பலமுறை சந்தித்து உரையாடி உள்ளேன். ஆனால் அவர் ஒருபோதும் சொந்தக்கதை சொல்லியதே இல்லை. இக்கதை படித்துதான் அவரது கதை உணர்ந்தேன்.

நானும் அரசு வேலையை விட்டு விடலாம் என்ற எண்ணம் இருந்தது. இக்கதை படித்து அந்த எண்ணத்தை விட்டு விட்டேன். குழந்தையுடன் குழந்தையாய் பேத்தியை ஏந்திய புகைப்படம் அட்டைப்படத்தை அலங்கரித்து உள்ளது . மனைவி எவ்வளவு திட்டினாலும் அவர் உயிரோடு உடன் வாழ வேண்டும். மனைவி இறந்து கணவன் இருப்பது கொடுமை தான். நல்ல பிள்ளைகள் ஒரு ஆறுதல்.

கடைசி கதையில் எழுதியது போல புகைபிடிக்கும் பழக்கமோ,மது அருந்தும் பழக்கமோ தங்களுக்கு இல்லை என்பது உண்மை .ஆனால் பொடிப் போடும் பழக்கம் உள்ளது .அதனை நிறுத்தி விட்டால், நீண்ட நாள் வாழ்வீர்கள் தங்கள் தமிழும் நீண்ட நாள் வாழும் .




1. ஏழைகள் ஓய்வு பெறும்
வயது அவர்களின் இறப்பு

2. ஆப்பிள் பழமாக
இருந்தாலும் சரி
ஆப்பிள் போனாக
இருந்தாலும் சரி
அது ஏழைகளுக்காக
இருந்தது இல்லை

3.நிறைய காயங்களுக்கு
பிறகு தான்
கனவுகள் நனவாகும்

4. எல்லாம் மாறும் என
ஏமாறாதே நீ மாறாமல்
எதுவும் மாறாது

5. போதும் என்கிற மனம்
இல்லாதவனுக்கு
பூமியில் எந்த இடத்திலும்
நிம்மதி இல்லை

6. உணவை தலை குனிந்து
உண்பது பூமிக்கு நன்றி கூற
தலை உயர்த்தி தண்ணீர்
குடிப்பது மேகத்திற்கு
நன்றி கூற

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



அந்த கண்களில்
சொல்லாத பல
சோகக் கதைகள் உண்டு!

அவள் டெவிலாய் மாறி
போனதால் சிறகுகளை
பிடுங்கி கொண்டான்
கடவுள்!

ஒளியற்றஇரவுகளில் எல்லாம்
உறக்கம் வருவதே இல்லை
கொட்டி தீர்க்கப் படும்
சோகக்கதைகள் மூலமே
எட்டிப் பார்க்கிறது
குட்டி தூக்கம் என்
வலிகளை வேடிக்கையாய்
கேட்பதை கூட
சலித்து கொண்டால்
எங்கே போய் தான்
ஒப்பாரி வைப்பது?!

அவனை எத்தனை முறை
தான் கொல்வாய்?
அந்த பாவப்பட்ட உடலில்
உயிர் போய் பல
வருடங்களாகி விட்டது.
உயிரற்ற செத்த உடல் அது
இப்போதைய உங்கள்
துன்புறுத்தல்கள் அந்த
வெற்று உடலை எதுவும்
செய்யப் போவதில்லை!

சிறைப்பட்டு கிடக்கும்
சொகுசு நரக வாழ்வை விட
மனம் போல் பறக்கும்
ஏழ்மையான வாழ்வும்
சொர்க்கம் தான்!

கனவில் கூட தொல்லை
தரும் உனக்கு என்ன
தண்டனை தான் தருவது?

வேதமாய் ஆனது
தேவதைகளின்
பாத கவிதைகள்!

யதார்த்தமாய் தான்
பார்த்தாய் ஏனோ
யுத்தம் நடக்கிறது என்னுள்!

ஆலமரம் ஆனி வேர் பிடித்து
ஆட்டம் போடுகிறாய்
கொஞ்சம் ஆடி தான்
போகிறது ஆறடி மனசு!

யுத்த கவிதைகள்
பிடிப்பதே இல்லை
நீ கன்னத்தில் வரைந்த
முத்தக் கவிதைகள்
பிடித்து போனதால்!

நீ அணைத்தால்
அணைந்து போகும்
என் சோகங்கள் எல்லாம்!

உன் அணைப்பை விட
வேறு சிறந்த ஆறுதல்
இருந்து விட போகிறதா
என்ன?!

சின்னதாய் ஒரு கவிதை
கேட்டேன் கண்கள் என்னும்
குளவியால் கொட்டினாய்
வந்து விழுந்தது கோடான



கோடி
கவிதைகள்
பரிசளித்தாள்??
சிரிப்பு
மத்தாப்பை!

**நௌஷாத் கான்.லி**



## கிராமம் !

நலிவுற்ற அந்த கிராமத்தில்
இளைஞர்கள் முதல்
பெரியவர்கள் வரை
பலரும் மதுவுக்கு
அடிமையாகியிருந்தனர் !

கிராமத்து ஆண்களுக்கு
மதுவின் தீமைகளை
எடுத்துரைக்க கிராமத்தில்
பெரும் கூட்டத்திற்கு ஏற்பாடு
செய்யப்பட்டது !

தொலைக்காட்சி தொடர்
நடிகர்கள் முதல்...
தன்னார்வளர்கள் பலரும்
மதுவின் தீமைகளை பற்றி



உரையாற்ற
வந்திருந்தனர்....

அனைவரும்
உரையாற்றி
முடித்த பின்

தன்னார்வர்களும்,
நடிகர்களும் ஒன்று கூடினர்...
ஊர் ஒதுக்குப் புறமுள்ள ஏசி
பாரில் !

**எம்.பி.தினேஷ்.**
கோவை



## கட்டிக் கரும்பே கண்ணம்மா"

என் கட்டிக் கரும்பே
கண்ணம்மா!
உன்கண்ணம்சிவந்தது
என்னம்மா!
நீ கடிக்கும் கரும்பு
தேனம்மா!
அதை சுவைச்சு தின்னு
பாரம்மா!
மாமன் தோட்டத்தில்
விளைஞ்ச கரும்பு!
உன்ன தேடி வந்த நானும்
எறும்பு!
விருப்பம் இருந்தா நீயும்
விரும்பு!
சம்மதம் சொன்னா கொஞ்சம்
திரும்பு!
செய்ய வேண்டாம் இன்னும்
குறும்பு!
மிச்சம் இருந்தால் தந்து
ஒதுங்கு.

**கவிஞர் பொன் பனகல் பொன்னையா.**

## "சினம் என்னும் பேய்க்குணம்"

சினம் என்பது சுடும் தீயே
ஜகத்தை விழுங்கும் பேயே!

அது வந்திட அறிவு மங்கும்
அன்பின் மேன்மை சிதையும்!

சொல்லெரியும், செயல்
தகிக்கும் சுற்றம் அனைத்தும்
சாம்பலாகும்!

சிந்தை கலங்கிச் சிதறும்
சிறந்தவனும் கீழோன்
ஆவான்!

சினத்தின் வெற்றி
தற்காலிகம் சிந்தனைத்
தோல்வி நிதர்சனம்!

சினக்கையில் சிறுநகை
பூத்திட சிறந்த மனிதன்
நீயாவாய்!

பேய்க் குணமதைப்
புறந்தள்ளு பொறுமைக்
குணம் ஏற்றிடு!



சினத்தை
வென்றவன்
சீரான
வாழ்க்கையை
வென்றே
ஒளிர்வான்!

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்.

1. அனுபவசாலிகள்
என்பவர்கள் வயதை
கடந்தவர்கள் அல்ல
பல வலிகளை கடந்தவர்கள்

2. கவலையை மறப்பது
கலை கவலையை மறைப்பது
மாபெரும் கலை

3. பணம் உழைத்து
வாழ்பவர்களிடம் பேசிவிட்டு
சென்று விடுகிறது பிறர்
உழைப்பில் வாழ்பவர்களிடம்
ஏசி போட்டு தங்கி விடுகிறது

4. மனிதனைத் தவிர மற்ற
அனைத்து ஜீவராசிகளும்
இயல்பாகவும் இன்பமாகவும்
வாழ ஒரே காரணம்
அவற்றுக்கெல்லாம்
பணத்தைப் பற்றி
ஒன்றும் தெரியாது

5. பணமும் மகிழ்ச்சியும்
பரம விரோதிகள்
ஒன்று இருக்கும் இடத்தில்
மற்றது இருப்பது இல்லை

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

## இடமாற்றம் !

நான்கு வழி சாலையாக
மேம்படுத்தப்படும்
பணிக்காக அச்சாலையில்
ஆண்டாண்டு காலமாக
இருந்த ஆலமரத்திற்கும்.
புங்க மரத்திற்கும்... வேரோடு
பிடுங்கப்பட்டு வேற இடத்தில்
நட இடமாற்ற ஆணைக்கு
உத்தரவிடப்பட்டது !

**எம்.பி.தினேஷ்**
கோவை



## மழை அழகு !


மழை அழகு...மலர்கள் மீது
தெறிக்கையில்...

மழை அழகு... நுனி
இலையில் பட்டு விழும்
சப்தத்தில்....

மழை அழகு... உன்னுடன்
ஒரு குடையில் நடக்கையில்...

மழை அழகு... உன்னை
பற்றிய எண்ணங்களை
நினைத்து மகிழ...

இப்போதும்... நீ என்னை
விட்டு பிரிந்த பின் என்



கண்கள்
சிந்தும்
கண்ணீரை
வெளிகாட்டாத
மழை அழகே !

**எம்.பி.தினேஷ்.**
கோவை

கடலுக்குக் காவல்
கடற்கரையிலும் காவல்
கடக்கலாகாது எல்லையை
ஓய்வில்லை அலைகளுக்கு
ஓய்வில்லை காவலுக்கும்!
ஓயாத இயற்கை
ஒவ்வாத செயற்கை!
ஒவ்வொரு நாளும்
தொடரும் இக் கடலோர
இடங்களின் வாழ்க்கை!

**KMD. முத்துக்குமார்,**
மைசூர்.

## ஞானோதயம்

எத்தனை செல்வமிருந்தாலும்
ஏவலுக்கு ஆட்கள்
உதவினாலும்
சௌகரியங்கள்
அதிகமிருப்பினும்
உண்ட உணவு
ஜீரணமாகணும் உடலைச்
சுற்றி குறுக்குமறுக்காய்
ஒயர்கள் படர்ந்தென்ன
லாபம்? கபோதியாய்
காலில்லாதவன்
கரங்களற்றவன் நிலையில்
சில காலம் வாழ முடியுமா?



ஓடியாடும்போதே
உதவுங்கள்
அந்தத்
திருப்தியேனும்
மிஞ்சும்

**பி. பழனி,**
சென்னை.

## இயல்பே ஏற்றம்...

எல்லாம் முடியும்
என்பவனே... என்னினிய
இளைஞனே! இயல்பாய்
இருத்தல் இமயப் பண்பு...
எளிதில் வசப்படாத
ஏற்றமிகு பண்பு...
அலங்காரம் என்ற பெயரில்
அசலைத் தொலைத்து
விட்டோம்... நகல் தான்
நல்லதென்று நம்பவும்
துணிந்து விட்டோம்...
நடிப்பது தான் இங்கே
நாகரீகம் மற்றும் நயமான
வாழ்க்கை என்று
நானிலமே நவிலும் போது
எதார்த்தம் பேணவும்
எளிமை போற்றவும்
எவர் துணிவார்?
ஆகவே தான்
இளைஞனே...
அரிதாரா ஆளுமையில்
அகிலம் சிக்கிண்டு
அவஸ்தை பெருக்கில்
அல்லாடி தவிக்கிறது...
பிழைக்கருவில் விளைந்த
போலிகளின் பெருக்கத்தால்
பூமியின் பண்பாட்டுப்
பந்தின் பிராணவாயு
அளவும் பூஜ்யமாகிப்
போகும் பேராபத்தை
எச்சரிக்கையாய் எண்ணி
இயல்புக்கு முடிசூட்டு...
என்றும் உயர்வு தரும்
உண்மைக்கு ஒளியூட்டு...
முகத் தாட்சண்யம் பாராமல்
அகத்தாட்சண்யம் உணரும்
புத்தன் பாதைக்கு
கொடிகட்டு... பளிங்கு
நேர்த்தியில் பார் முழுவதும்



இயங்கும்
வண்ணம்
பரிசுத்த
புதுமைக்கு
வளமார்ந்த
தளத்தில்
நின்று
உலகமே
வணங்கும் விதத்தில்
வழிகாட்டு!

**நெல்லை குரலோன்**
பொட்டல் புதூர்

சாலையில் உதிர்ந்துகிடந்த
சரக்கொன்றை மலர்கள்



சட்டென்று
ஞாபகப்
படுத்தியது
வாழமறந்த
நாட்களை!

**கே. பி. ஜனார்த்தனன்**

பன்னீர் மழை பாய்ஸியில்
வெண் முத்துக்களின்
சாரல்; பூமியில் பூத்தன
வெண் மல்லி மலர்கள்;
வெண் வெள்ளி மலர்கள்;
மாறின பொன்னார்
மலர்களாக; சாய் கதிர்
சூரியன் காட்டும் வித்தகம்!
சில நொடிகள் மட்டுமே!
நன்னீர் மழை பொழிய
எண்ணாத ஒரு நொடியில்



மண் மணத்தது
என் மனத்தில்
பன்னீர் மழை
என

**சசிகலா விஸ்வநாதன்**

## அலைபாயும் மனதினிலே:

மனம் ஒரு குரங்கு என்றனர்
அன்று மனதை அலைபாய
விடாமல் வைத்தல் நன்று !

இக்கரைக்கு அக்கரைப்
பச்சையாகத் தான் தெரியும்
அக்கரையில் பச்சை இல்லை
என்பதை உணர்க!

அரசனை நம்பி புருசனை
விட்ட கதையாக
ஆசையால் உள்ளதை
இழப்பதைத் தவிர்ப்போம்!

கிடைக்காத ஒன்றுக்காக
ஏங்குவதை விடுத்து
கிடைத்ததை ரசிக்கக் கற்றுக்
கொள்ளுங்கள்!

விரும்பியது
கிடைக்கவில்லையென
வருந்ததே விரும்பிடுக
கிடைத்ததில் அன்பு
செலுத்துக!

எதிர்மறை சிந்தனைகளை
விட்டுவிடுங்கள்
எப்போதும் நேர்மறையாகவே
சிந்தியுங்கள்!

ஒன்றை விட ஒன்று
உயர்ந்ததாகத் தோன்றும்
ஒன்றின் மீது கவனம்
இருந்தால் சிறக்கும்!

ஆயிரம் முறை சிந்தித்து
நல்ல முடிவெடுங்கள்
ஆனால் முடிவெடுத்துப்
பின்னே சிந்திக்க
வேண்டாம்!

அடுத்தவரைப் பார்த்து
பொறாமைப்பட வேண்டாம்



அவரவர்
வாழ்க்கையை
அவரவர்
வாழ்வோம்!

**கவிஞர் இரா. இரவி!**

## குறுங்கவிதைகள்

அந்தியிடம் அடகு வைத்து
மறைந்தான் மாலைக்
கதிரவன் நாளைக் காலை
மீட்கிறானாம்
எனது நிழலை.

********

பிதாவின் சார்பாக
பாதிரியாரே பிழைகளை
மன்னித்து விட்டார்.
பரிசுத்தமாகி விட்ட
பவித்ராவை பயமுறுத்துகிறது
வறுமைக் கோடு

*********

ஏடகத்தின் அமைதியை
எள்ளி நகையாடின
கொலுசுகள் ஏளனமாய்
சிரித்துக் கொண்டன
எட்டிப் பார்த்த
சுவர்ப்பல்லிகள்.

*********

முதலிரவுக்கு முன்பே
விழுந்து முறித்துக்
கொண்டாள் முழங்காலை.
மூன்று முடிச்சு விழுமுன்
முதியோரில்ல முகவரியை
அறிந்தவள்

**********

வைகறையின் இறுதி
ஊர்வலத்தில் கலந்தே
விடைப் பெறுகிறோம்
இருளில் நடைப் பயிலும்
நானும் மௌனமும்

**********

பணி ஓய்வுப் பெறுகிறார்
பள்ளித் தலைமை ஆசிரியர்
வரிசையில் நின்று
வாழ்த்துகின்றன
வலிய அறுபது ஆண்டுகள்

**********

சூழ்ந்தன போர் மேகங்கள்
பொழிந்தது குண்டு மழை.
பாதி பாதியாய் எரிந்தும்
பாங்காய் நிற்கும்
போதிமரங்கள்.

**********

மழை நிற்க
காத்திருக்கின்றன
அரைவில்லும் குறை நிலவும்
மொட்டு மலர
காத்திருக்கின்றன(ர்)
வண்டுகளும் பெண்டுகளும்.

பாழடைந்த வீட்டைத்
திறந்ததும் வேகமாய்
வெளியேறுகிறது



வௌவாலுடன்
அமானுஷ்யம்
காரிருள்
செய்கிறது
வசியம்

**முனைவர் வே.புகழேந்தி,**
பெங்களூர்

## தமிழ் இலக்கியத்தின் மணிமகுடம் திருக்குறள்

தமிழ் இலக்கியத்தின் மணிமகுடம் திருக்குறள்
தனிப்பெரும் இடம்பெற்ற இலக்கியம் திருக்குறள்
தமிழ் என்ற சொல்லே இடம் பெறாத திருக்குறள்
தமிழன் என்ற சொல்லே இடம் பெறாத திருக்குறள்
கடவுள் என்ற சொல்லே இடம் பெறாத திருக்குறள்
கற்கண்டை மிஞ்சும் கனிச்சுவை மிக்க திருக்குறள்
வாழ்வியல் நெறியை பயிற்றுவிக்கும் திருக்குறள்
வாழ்வின் அர்த்தம் உணர்த்தும் திருக்குறள்
உலக இலக்கியங்களின் உன்னதம் திருக்குறள்
உலகிற்கு அறநெறி அறிவிக்கும் திருக்குறள்
உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறள்
உலக மக்கள் யாவரும் அறிந்த திருக்குறள்
அழியாப் பெருமையுடன் நிலைத்திருக்கும் திருக்குறள்
அறியாமை நீக்கிடும் அறிவுடைமை திருக்குறள்
மனிதநேயம் மனத்தில் விதைக்கும் திருக்குறள்
மடமை நீக்கி பகுத்தறிவைப் போதிக்கும் திருக்குறள்
ஈடு இணையற்ற இனிய இலக்கியம் திருக்குறள்
எண்ணிலடங்கா கருத்துப் புதையல் திருக்குறள்
காந்தியடிகளின் குரு டால்ஸ்டாய் என்ற அறிஞர்
டால்ஸ்டாயின் குரு செந்நாப்புலவர் திருக்குறள்
சொக்க வைக்கும் சொற்களின் சுரங்கம் திருக்குறள்
சோகத்தை மறக்க வைக்கும் சுகம் திருக்குறள்
தமிழுக்கும் செம்மொழி பெற்றுத் தந்த திருக்குறள்
தமிழருக்குப் பெருமை ஈட்டித் தந்த திருக்குறள்!

**- கவிஞர் இரா.இரவி**



## விளையாட்டு உலகம்

உன்னைக்காதலித்த போதும்
ஏன் கரம் பிடித்த பின்னரும்
கூட உன் உலகம்
விளையாட்டு உலகமாகவே
இருக்கிறது! சுட்டித்தனமான
உன் பேச்சும்
குழந்தைத்தனமான
உன் குறும்புகளும்
உன்னுடன்
என்னையும் சேர்த்து
சிறுவர் உலகத்திற்கே
அழைத்துச் சென்று
விடுகிறது!
பார்வையாலேயே
நீ என்னைத்தின்னும்
அழகிருக்கிறதே
அந்த ஒன்றிற்காக வே
என் எல்லாப் பிறவியிலும்
நீயே காதலியாக வேண்டும்
என்று ஆசைப்படுகிறது
என் மனசு! விதிவிலக்கு
என்ற ஒன்று கூட இல்லாமல்
நீ செய்யும் அத்தனை
செயல்களிலுமே
விளையாட்டுத்தனம்
உட்புகுந்து விளையாடுகிறது!
நீ இப்படி இருப்பாயோ
அப்படிச் செய்து விடுவாயோ
என்ற என் தயக்கமான
கலக்கமான குழப்பத்திற்குப்
பதில் வழங்குவது போல்
உன் அழகான கள்ளத்தனமும்
கவிதைத்தனமும் நம்
கா த லி ல் கோடிட்ட
இடங்களை வெகு



அழகாகவே நிரப்பி
விடுகிறது! எனக்கு(ம்)மே
பிடிக்க வைத்து
விட்டாய்...

**முத்து ஆனந்த்**
வேலூர்



## தீர்ப்புகள் திருத்தப்படலாம்

பெண்களே! கூந்தலில்
மலர் சூடுவதை மறந்து
விடுங்கள்... கனவு சுமந்த
வசந்தங்கள் எங்களை விட்டு
நீங்குகையில் கூந்தலை
விட்டு தூக்கி எறியும்போது
நாங்களும் பெண்ணினம்
என்பதை மறந்து
விடுகிறீர்கள்... கார் குழலில்
பூக்களைச் சூடினால்தான்
சுமங்கலியா! எவன் எழுதியத்
தீர்ப்புக்கு எங்களுக்குத்
தண்டனை வழங்குகிறீர்கள்..



தீர்ப்புகள்
திருத்தப்பட
லாம் எங்கள்
தீர்மானத்தின்
முகவரிகள்
இன்னும்
ஏட்டிலியே
இருக்கின்றன....

**எஸ் .சந்திரசேகரன் அமுதா** செஞ்சிக்கோட்டை.

## நெருஞ்சிப் பூக்கள்

நாங்கள் இயற்கையின்
நெஞ்சில் பூத்திருக்கும்
நெருஞ்சி முட்கள்...

பாதங்களின் நரம்புகளை
மீட்டிப் பார்க்கும் பச்சை
விரல்கள்...

ரத்த தானத்திற்குக்
காத்திருக்கும் இயற்கை
நோயாளிகள்...



எங்கள்
முட்களில்
இரத்தப்
புஷ்பங்கள்
பூப்பதுயில்லை...

மஞ்சள்
பூக்களால்
சமுதாயத்திற்குத் தத்துவப்
பூக்களாகிறோம்....

**எஸ். தயாளன்,** காட்பாடி

காற்றில் கிளைக்கு
கிளை தாவியது நீழல.
மொழி இல்லாமலே



கண்களாலே
பேசும்
திறன்
கொண்டது
காதல்.

**ஜயந்தி சிவக்குமார்**
திருச்சி.

இரவின் யாமங்களுக்கும்
இமைகளுக்கும் இடையே
நடந்த போராட்டத்தின்
முடிவினில்..

இரவில் பளீரெனத்
தெரியும்படி.. தன் வழியே
பயணிக்கும் சூரிய
சந்திரர்களுக்காய்



நட்சத்திர
ஆரத்தி
எடுத்ததில்
மகிழ்ந்த
வானத்தில்
நிலவு
மறையக்
கதிர் விரிய ஆரம்பித்தது

**கீதா கண்ணன்**
ஸ்ரீரங்கம்

காயப்போட்டிருந்த
சட்டையில் பறவையின்
எச்சம் மேல் பாக்கெட்டில்
இருப்பதைக் கண்டு
துவைக்கலாமென முடிவு
செய்தேன்.

தண்ணீரால் மெதுவாக
தேய்க்கும்போது
நெஞ்சு வலிக்க
ஆரம்பித்தது.சோப்பையும்
நாரையும் எடுத்து
எச்சம் போகுமளவுக்கு
சட்டையைத் துவைக்க
ஆரம்பித்தேன்.

சிவப்பு நிற அடர்ந்த
நுரை குமிழ்களில்
காடு இருப்பதைக் கண்டு



நிறுத்தி
விட்டேன்
துவைப்பதை.
இதயமும்
வலியில்லாமல்
இருக்கிறது.

**துங்கன்.**


Happy Birthday
C.கார்னிகா ஸ்ரீ


Sanjay
Cell: 90032 64920
Real Choice
Retail & Wholesale
Dealers In: Designer
Sarees, Chudidhar,
Laganga, Choli &
Wedding Collection
#361, Mint Street, (Opp. New Jain Temple)
Sowcarpet, Chennai-600 079.
Real Choice Chennai
Real Choice Chennai
Real Choice Chennai


WANTED
Needed female staff
to look after
children, patients.
Contact
9150989424


WANTED
Retd, VRS, Home Makers,
NRIs, Business Person
Contact
8248951872


WANTED
Site Supervisor required
for construction work in Ambattur
Contact:
8428872887


Happy Birthday
நித்தியானந்தம்


keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers
Internship:
Clinical Training
Counseling Practice
Case Work
Jobs:
Social Worker
Jr Psychologist
Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com


சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா
பாக்கு
சம்பிரதாய தாம்பூல பாக்கு
అజంతా
వక్కపలుకులు
సంప్రదాయ తాంబూళ వక్కపలుకులు
அனைவருக்கும்
தீபாவளி
நல்வாழ்த்துகள்!
அஜந்தா
பாக்குடன்
உங்கள்
தீபாவளியை
கொண்டாடுங்கள்!
RAVIKUMAR AND COMPANY
21, North Mada Street, Villivakkam, Chennai - 600 049
PH: 044 26171341 | email: ajanthasupari@hotmail.com


TAMIL
TELECALLER
JOB FOR
WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA
SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARING FROM
Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009


Wanted
REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக
நிருபர்கள் தேவை
PRESS
PRESS
PRGI No. TNBIL/25/A1564
பேப்பர்பாய்
8122664699


தனியார் வாகன உதிரிபாகங்கள்
உற்பத்தி செய்யும் நிறுவனத்தில்
பணிபுரிய ஆட்கள் தேவை.
Quality Line Inspector
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E
Final Quality Inspector
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI
VMC Machine operator
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma
Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை/
மணப்பெண்ணைப்
பதிவு செய்யவும்.
www.enthunai.com
support@enthunai.com
7871617005
7789941009


அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி
ஜோதிட மையம்
ராசி
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள் , ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம் , சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில்
ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம்
இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com


FREE MARRIAGE INFORMATION CENTER :
இலவச திருமண தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889



ADIYOGI
REAL ESTATE
WHOLESALE
VADACHENNAI CALL DRIVER
ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale
Residential / Commercial
Plots Flats House
Villa Bungalows
Farm Land Ware Houses
Factory Sites Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005


SEVEN STARS LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
We Build Perfection
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com



We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Package Rs. 4.8 LPA
Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai
Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager - Ad Sales to join our dynamic team.
Key responsibilities for Marketing Manager
• Minimum 5 years of experience in print media ad sales
• Proven experience in space selling
• Strong background in field sales and client acquisition
• Excellent communication and negotiation skills
• If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you
If you are interested
Do send your resume and portfolio to
padmamediapublications@gmail.com
Call: 9337501889
பாஸ்கர்
பேப்பர்பாய்
தெய்வம்
தமிழ்நாடு இபேப்பர்.காம்


Bhoopathy Bakery
BAKED EVERYDAY
BISCUIT, CAKE, BUN VARIETIES
WHOLESALE & RETAIL
98845 15409
No:11/16, Gandhi Nagar, E.H Road, Tondiarpet, Chennai - 600 081
NOW AVAILABLE IN
100Kgs.com


Supreme
Car Wash & Detailing
REDEFINING CAR CARE
PREMIUM SERVICE
638364389 9840882711


உங்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு
உங்கள் ஜோதிடர் 9940374962
D.சக்திவேல்
அனுபவம் வாய்ந்த பாரம்பரிய ஜோதிடர்
கைரேகை ஜோதிடம்
முகக் குறிப்பு
கண் பார்வை கணிப்பு
வீடு மனை வாங்க விற்க அணுகவும்
நல்ல நேரங்கள் கணிப்பு
ராகு காலங்கள் பற்றிய தெளிவு
இன்றே அழையுங்கள்: D. சக்திவேல் - 9940374962
கவனத்தில் கொள்க:
• குளிகை காலம் நல்ல விவகாரங்கள் செய்தால் மேலும் வளர்ச்சி
• இராகு காலம் முடிந்த பிறகு நல்லது செய்யவும்
• எமகண்ட காலத்தில் வைத்தியம் பார்க்கக் கூடாது.


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756


LOW COST
MATRIMONY
WEBSITE
CALL: 7789951009

ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US 9597887308, 6380453463
EXPERT IN VEDIC ASTROLOGY
• PREDICTION & SOLUTIONS
• MONEY • LOVE
• HEALTH • FAMILY
• BUSINESS • CAREER
• MARRIAGE

ARG CONSTRUCTIONS
We Build Your DREAM HOME
Recently We Have Completed Over 50+ Big Projects
SERVICES WE OFFER
• Residential Construction
• Commercial Construction
• Customer Satisfaction
Contact Us 9710348377

VINAYGA ENTERPRISES
WANTED
COMPUTER OPERATOR
(FEMALE)
ONIDA AUTHORISED SERVICE CENTRE
CONTACT: 9962116238
ADDRESS: BHEEMANNA PETTAI, BHEEMANNA 1ST STREET, ALWARPET CHENNAI

PREMIUM LAND SALE
NEAR PARANDUR AIRPORT
YOU ARE LUCKY!
Grab Your Future Investment Today!
Location: Just 6 KM Near Parandur New Airport
Price Details
₹700 to ₹2200 per Sq.Ft
Affordable & High Return Investment
Why Invest Here?
✓ Fast Developing Area
✓ Near Upcoming Airport
✓ Excellent Appreciation Value
✓ Suitable for Residential & Investment
✓ Easy Road Access
PLOTS AVAILABLE NOW!
Contact: CT. Guruji
Phone: 90031 32847
LIMITED PLOTS - BOOK NOW!

FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO BUY OR SELL PROPERTY OR LAND?
+91 9884417843

Get Free Jobs Alert on Your WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs

ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601

Launch Your Own Secure Crypto MLM Software Today!
@4999/- onwards
CALL: 98537 19337, 74369 14247
www.mlmperfect.com

WANTED
வீட்டு வேலை செய்ய குழந்தை நோயாளி,நர்ஸ் வேலைக்கு ஆட்கள் தேவைப்படுவர்/வேலை தேடுபவரும் அனுகவும். 7845904395/ 8668107106

ADVERTISE WITH US
CONTACT US
9438610756

S.R Call Drivers Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49, E.H.Road, Cornation Nagar, K.Pet, Ch-21.

செக்யூரிட்டி கார்டுகள் தேவை
கோடம்பாக்கம் சேத்துப்பட்டு புரசைவாக்கம் கோட்டூர்புரம் பகுதிகளில் வேலை செய்ய செக்யூரிட்டி கார்டுகள் தேவை
அனுகவும்: 9840861539

WANTED
JAY SECURITY FORCE
பணி வாய்ப்புகள்
• பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
• இடங்கள்:
• பெருங்குடி, துரைப் பாக்கம்
• காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
• விருகம்பாக்கம்
பெண்கள் தேவை
சம்பளம்:- 12500 முதல் 20000 வரை
9791061354 - 8072969599
Head office
NO :1, அம்பாள் அவின்யு, வி.பி.ஜி அவின்யு, விரிவாக்கம், மேட்டுக்குப்பம்- சென்னை-97

Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Euro Kids Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
based on Harvard's Project Zero
Admissions Open for AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081

just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary | Unilevel | Matrix | Board | Generation | ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com



# பல்சுவை களஞ்சியம்



# மீம்ஸ்

# 100 நாட்கள் சாப்பிடாமல் இருந்த இந்தியர்! எப்படி சாத்தியமானது? நாசா வெளியிட்டுள்ள ஆய்வு முடிவுகள்!

அதிகாலையில் சூரியனின் கதிர்களை வெறும் கண்ணால் பார்த்து வணங்குவது இந்தியாவில் பண்டைய வழிபாட்டு முறைகளில் ஒன்றாக இருக்கிறது.

இந்நிலையில் சூரியனைப் பார்த்தால் டெலிபதி போன்ற 'Super Human Abilities' எனப்படும் சிறப்பு சக்திகள் கிடைக்கும் என்றும் உணவு உண்ணாமல் கூட வாழலாம் எனவும் நாசா அமைப்பு உறுதிப்படுத்தியுள்ளது.
பொதுவாக சூரியனை பார்த்தால் உடலில் உள்ள நோய் எதிர்ப்புத் திறன் அதிகரித்து, உடல் ஆரோக்கியமாக இருக்கும் என இந்தியாவில் நம்பப்பட்டு வருகிறது. எனவேதான் சூரியனை பார்த்து வணங்குவது, இந்துக்களின் முக்கியமான வழிபாட்டு முறையாக இந்தியாவில் உள்ளது. சூரியனை வெறும் கண்ணால் பார்ப்பதன் மூலம் நாம் எதிர்பார்க்காத சக்திகளை பெற முடியும் என இப்பொழுது ஆச்சரியப்படுத்தியுள்ளது நாசா.
சூரியனை பார்ப்பது என்பது சூரியனிலிருந்து வரும் புற ஊதாக்கதிர்களின் தாக்கம் குறைவாக இருக்கும் அதிகாலை நேரத்தில் சூரியனை பார்ப்பதாகும். இந்த செயல்முறையின் போது நாம் வெறும்காலுடன் இருத்தல் அவசியம். பூமிக்கும் சூரியனுக்குமான ஒரு இணைப்புப் பாலமாக நாம் செயல்பட வேண்டும். இதனை தொடர்ச்சியாக, சரியான முறையில் ஈடுபடுபவர்களுக்கு குறிப்பிட்ட காலகட்டத்திற்கு பிறகு உணவுத் தேவை என்பது மிகக் குறைவாக இருப்பதாக ஆய்வு முடிவில் தெரிய வந்துள்ளது.
தன்னை 'சூரியக்கதிர்களை உண்பவன்'என அழைத்துக் கொள்ளும் இந்தியாவைச் சேர்ந்த 'ஹிரா ரத்தன் மானக்' என்பவர் தன்னை ஆராய்ச்சி செய்யுமாறு நாசா விஞ்ஞானிகளை அணுகினார்.
நாசாவினால் நிதியுதவி பெறக் கூடிய பென்சில்வேனியா மருத்துவர்கள் குழு




அவரை ஆராய்ச்சி செய்த போது, பல ஆச்சரியத்தக்க தகவல்கள் கிடைத்தன. சூரிய ஒளி மூலம் கிடைக்கும் சிறப்பு சக்தியால் அவர் உணவு உண்பதே இல்லை என மருத்துவர்கள் அறிந்தனர். 100 நாட்களுக்கு அவரை தங்கள் கண்காணிப்பில் வைத்திருந்த மருத்துவர்கள், ஹிரா ரத்தன் மானக்கினால் சூரிய ஒளியை ஆற்றலாக எடுத்துக் கொண்டு உயிர் வாழ முடிகிறது எனவும் இந்த காலகட்டத்தில் சிறிதளவு தண்ணீர் மற்றும் மோர் மட்டுமே அவர் எடுத்துக் கொண்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

முதல் மூன்று மாத காலத்திற்கு சூரியனை பார்க்கும் போது சூரியனின் ஆற்றலானது கண்கள் வழியாக சென்று 'ஹைபோதாலமஸ் பாதை' என்கிற அங்கத்தில் தனது சக்தியை சேர்க்கிறது. கண்களில் உள்ள ரெட்டினாவுக்கும் மூளைக்கும் தொடர்பு ஏற்படுத்திக் கொடுக்கும் பாதையே 'ஹைபோதாலமஸ்' என அழைக்கப்படுகிறது. இதன் பின்னர் இந்த பாதை வழியாக சூரிய ஆற்றலானது மூளையை அடைகிறது. அதன் பின்னர் மன அழுத்தம், பசி ஆகியவை சிறிது, சிறிதாக குறையத் தொடங்குமாம். மேலும் மனிதனிடம் உள்ள எதிர்மறை எண்ணங்கள், கெட்ட பழக்க வழக்கங்கள் மறைந்து போகுமாம். சூரியனை பார்த்தல் செயல்முறையை செய்யத் தொடங்கிய 3 மாதங்களிலிருந்து 6 மாதத்திற்குள், உடல் உள்ள நோய்கள் மறைந்து போகுமாம். இதற்கு காரணம் சூரியனிலிருந்து வெளிப்படும் வண்ணங்கள், நம் உடலில் உள்ள பல்வேறு பாகங்களில் ஏற்பட்டுள்ள நோய்களை குணப்படுத்துவதுதான்.

வண்ண மருத்துவம் எனப்படும் துறையைச் சேர்ந்த மருத்துவர்களும் இதனை உறுதிப்படுத்தியுள்ளனர். குறிப்பாக கல்லீரல் நோய்களுக்கு பச்சை நிறமும், இதயத்திற்கு மஞ்சள், சிறுநீரகத்திற்கு சிவப்பு ஆகிய வண்ணங்கள் குணமளிக்கின்றனவாம். இப்படி வானவில்லில் இருக்கக் கூடிய அனைத்து வண்ணங்களும் சூரிய ஒளி வழியாக நம் உடலில் புகுந்து நோய்களை போக்குகிறதாம். வண்ண மருத்துவம் என்ற கோட்பாட்டின் கீழ்தான் பல வண்ணங்களில் இருக்கக் கூடிய சரிவிகித உணவை எடுத்துக் கொண்டால் நோய்கள் அண்டாது என கூறப்படுகிறதாம்.

சூரியனை பார்த்தல் செயல்பாட்டின் நிபுணர்கள், உடலுக்கு தேவை உணவு இல்லை எனவும் அதிலிருந்து கிடைக்கும் ஆற்றல்தான் உடலை இயக்க தேவை எனவும் கூறுகின்றனர். அந்த ஆற்றலானது சூரிய ஒளி மூலமே கிடைத்துவிடுவதால், உணவு தேவைப்படுவதில்லை எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால் சூரியக் கதிர்களை நேரடியாக பார்ப்பது கண்களில் உள்ள ரெட்டினாவுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என கண் மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால் சரியான நேரத்தில், சரியான வழிமுறையில் சூரியனை பார்த்தால் கண்களுக்கு பாதிப்பு ஏற்படாது எனவும் அவர்கள் கூறுகின்றனர். சூரியனை பார்ப்பதை பல ஆண்டுகளாக செய்து வருபவர்களின் கண்களை சோதித்த போது, அவர்களின் கண்களில் எந்த பாதிப்பும் இல்லை என்பதும் தெரிய வந்துள்ளது.
சூரிய நமஸ்காரம் என்பதும் கண்களுக்காகவும், உடல் ஆரோக்கியத்திற்காகவும் அனுசரிக்கப்படுகிறது. அதிலும் முக்கியமாக மூட்டு, முதுகு வலி பிரச்னைகள் வருவதைத் தவிர்க்கலாம். சூரிய ஒளியின் பயன்கள் அநேகம் இருக்கின்றன. பயன்படுத்திக் கொள்ள வேண்டியது நம் சாமர்த்தியம்தான்.
நம் முன்னோர் எவ்வளவு புத்திசாலிகளாக இருந்து நமக்கு எவ்வளவு அறிய பொக்கிஷங்களை வழங்கிச் சென்றுள்ளனர்?
நாம் தான் அறிவாளிகளாக கருதிக் கொண்டு,இவை எல்லாம் மூடநம்பிக்கை,முட்டாள்தனம் என சிலரும்,நேரமின்மை என பலரும் நமது மத சடங்கு சம்பிரதாயங்களை விட்டு விட்டு நோயாளிகளாகவும்,முட்டாள்களாகவும் திகழ்கின்றோம்..







## விடுகதை



| | |
|---|---|
| கூரை வீட்டைப் பிரித்தால் ஓட்டு வீடு. ஓட்டு வீட்டுக்குள்ளே வெள்ளை மாளிகை. வெள்ளை மாளிகையின் நடுவே ஒரு குளம். அது என்ன? | தேங்காய் |
| தலை இல்லாதவன் தலையை சுமப்பவன் அவன் யார் | தலையணை |
| பற்கள் இருக்கும் கடிக்கமாட்டான் அவன் யார் | சீப்பு |
| கன்று நிற்க கயிறு மேயுது அது என்ன? | பூசனிக்கொடி |
| தலையைச் சீவினால் தாளில் நடப்பான் அவன் யார்? | பென்சில் |
| கசக்கிப் பிழிந்தாலும் கடைசிவரை இனிப்பான் அவன் யார்? | கரும்பு |

## பேச்சு

எதிர்பார்ப்புகள் தான் ஏமாற்றத்தை தருகிறது இங்கு பிரதிபலன் எதிர்பாராமல் யாரும் எதுவும் செய்வதில்லை
அன்பை காட்டுவது மகிழ்ச்சியை பெறுவதற்கு தான் அழகை ரசிப்பதும் ஆனந்திப்பதற்காகத்தான் மரத்திற்கு தண்ணீர் ஊற்றுவதும் நாளை அது கனி கொடுக்கும் என்பதற்காக
அப்படி என்றால் தியாகம் என்பதற்கு என்ன அர்த்தம் என கேள்வி எழுப்பலாம் அதிலும் மகிழ்வு உண்டாகிறது
சுருக்கமாய் சொன்னால் எல்லாம் மகிழ்ச்சிக்காக செய்யப்படுகிறது
ஏமாற்றுவது துரோகம் செய்தல் கொலை செய்தல் விரோதத்தை உண்டாக்குதல் எல்லாமே மகிழ்ச்சியின் காரணிகளாக திகழ்ந்தது
இதில் நல்ல மகிழ்ச்சி கெட்ட மகிழ்ச்சி என பிரித்தல் அவசியம் யாருக்கும் துன்பத்தையும் துயரத்தையும் கொடுக்காமல் நாம் சந்தோஷிப்பதும் அவர்களுக்கு நன்மைய உண்டாக்குவது வரவேற்புக்கு உரியது



என்னைப் பொருத்தவரை இங்கு வாழ்கிற மனிதர்கள் எப்பொழுது எங்கே எப்படி உருமாறுவார்கள் என்று எனக்கு தெரியாது
அவ்வப்பொழுது நல்லவர்களாகவும் இருப்பார்கள் சில நேரங்களில் எதிராகவும் மாறுவார்கள் புரியும்படி சொன்னால் வில்லன் நாளைக்கு நண்பன் ஆவான் அப்படி என்றால் புரிந்து கொள்ளுங்கள்
இப்ப என்னை புரிஞ்சிருப்பீங்க எத்தனை பேரை நான் கடந்து வந்திருக்கிறேன் என்பதனை அதற்காக நான் சொல்வதெல்லாம் பாடமாக எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை
இது என்னுடைய அனுபவம் எனக்கு உரியது இதை நான் போதனையாக்கி விட விரும்பவில்லை
மனித வாழ்வில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான அனுபவங்கள் ஒவ்வொரு விதமான சந்திப்புகள்
நான் என்று என் அனுபவத்தை சொல்லிக் கொண்டே வருகிறேன் நான் வேறு யாரும் இல்லை என் பெயர் ரகு
எல்லோருக்கும் ஒரு அடையாள பெயர் இருக்கும் அதுபோல நான் என்று சொல்லுகிற எனக்கான அடையாளம் ரகு என்பது ஆகும்
நாம் மகிழ்வதும் மற்றவர்களை மகிழ்விப்பதும் நன்மை செய்வதே அன்றி வேறு ஒன்றும் இந்த உலகத்தில் மிஞ்சுவதில்லை
மண்ணை நேசிக்கிறவன் மண்ணுக்கு இரையாகிறான் பொன்னை நேசிப்பவளும் மண்ணுக்கே இரை ஆகிறாள்
இந்த உலகில் மிஞ்சுவது என்ன எதற்காக பிறந்தேன் எதற்காக வாழ்கிறேன் என்றெல்லாம் யோசித்துப் பார்த்தால் இருக்கும் நிமிடங்களும் நாட்களும் நமக்கானதை நாம் மகிழ்வாக அனுபவித்து மற்றவர்களை மகிழ்வித்து காலத்தை சந்தோஷித்து கடந்து செல்ல வேண்டும் என்பதே ஆகும்
இங்கே அரசனுக்கும் ஆண்டிக்கும் ஒரே குழி தான் செத்த பிறகு எல்லோரும் பிணம் தான்
இவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருக்கிற நானும் பிணம் தான் இனி ரகு என்கிற என் பெயர் தேவையற்றதாய் மாறிப் போகிறது இனி உலகத்திற்கு இந்த பெயர் அவசியமற்றதாய் மாறிப்போகிறது
பொய்யைப் பேசிப் பேசி சொத்தை வாங்கி குவித்த ஒரு அரசியல்வாதியின் கல்லறையின் அருகே மூச்சடங்கிப் போன என்னை புதைத்தார்கள்
அவர் இப்பொழுது எதுவும் பேசுவதில்லை என்னைப் போல இனி நானும் உங்களோடு பேசப்போவதில்லை.



## ஜோக்ஸ்

அந்த எழுத்தாளர் மாவு மில்லில் வேலை பார்க்கிறாராம்.
அதான் அரைத்த மாவையே அரைக்கிறாரா

----------------

தானத்தில் சிறந்தவர் நமது மன்னர் என்று எப்படிப் பெயர் எடுத்தார்?
போர்க்களத்தில் கூட எதிரி நாட்டு மன்னரிடம் சமா"தானம்" பேசி சமாளித்து விடுவார்.

----------------

எங்கே ஈ காட்டு பாக்கலாம்?
நீங்க 'ஈ" பார்த்ததில்லையா டாக்டர்!

----------------

2 ல 5 போகலைன்னா பக்கத்துல கடன் வாங்கணும்.
பக்கத்துல சரவணன் கிட்ட கேட்டேன் தர மாட்டேங்குறான், சார்!

----------------

பார்த்து அறிவது பலன் தருமா? பார்த்து தெரிவது பலன் தருமா? இல்லை பார்த்து புரிவது தான் பலன் தருமா?
பார்த்து எழுதுவதே பலன்தரும், சார்.

----------------

மன்னருக்கு கிரிக்கெட் பைத்தியம் முத்தி போச்சு.
எப்படி சொல்றீங்க?
எதிரி மன்னரிடம் போரை "பகல் இரவு" போராக வைத்துக்கொள்ளலாமா என்று கேட்டு ஓலை அனுப்பி இருக்கிறார்.

----------------




முதுகில் பல்லி விழுந்தால் காலண்டரில் குழப்பம் னு போட்டிருக்கே!
நம்ம முதுகில் பல்லி விழுந்தால் காலண்டர்ல ஏன்டா குழப்பம் வரணும்.

----------------

நல்லா படிச்சு பரீட்சை எழுதியும் இப்படி ஃபெயில் ஆயிட்டோமேன்னு கொஞ்சம் கூட கவலை இல்லாம நிக்கிற?
நீங்கதானப்பா சொன்னிங்க "கடமையை செய் பலனை எதிர்பார்க்காதேனு"



# ஜோதிடம் அறிவோம்



## தேய்பிறை சதுர்த்தி காலத்தில் நரசிம்மர் வழிபட்டால் மரண பயம் அகலும்.



மதுரை அருகே உள்ள யானை மலை ஒத்தக்கடை என்ற இடத்தில் உள்ளது யோக நரசிம்மர் ஆலயம்.

மிகவும் பழமை வாய்ந்த இந்த ஆலயத்தில் மூலவராக யோக நரசிம்மர் வீற்றிருந்து அருள்பாலிக்கிறார். தாயார் பெயர் நரசிங்கவல்லி என்பதாகும்.

ஆலய தீர்த்தம் சக்கர தீர்த்தமாகும்.

இது ஒரு குடைவறைக் கோவிலாகும். நரசிம்மர் வீற்றிருக்கும் ஆலயங்களிலேயே, மிகப்பெரிய உருவத்தை கொண்ட ஆலயம் இது என்பது தனிச் சிறப்பாகும்.

**தல வரலாறு:**

உரோமச முனிவர், தனக்கு புத்திர பாக்கியம் வேண்டி, இந்த யானை மலை தலத்திற்கு வந்து சக்கர தீர்த்தத்தில் நீராடி யாகத்தை தொடங்கினார். மேலும் நரசிம்மரை, அவரது நரசிம்ம அவதார கோலத்திலேயே தரிசிக்கவும் விரும்பினார். இறைவனும் உரோமச முனிவரின் விருப்பப்படியே, உக்கிர நரசிம்மராக தோன்றி காட்சி தந்தார்.

ஆனால் நரசிம்மரின் உக்கிர கோல வெப்பத்தால் உலகமே தகித்தது.

இதனை தாங்கிட முடியாமல், தேவர்களும், முனிவர்களும் பிரகலாதனிடம் சென்று முறையிட்டனர். பிரகலாதனும் இத்தலத்திற்கு வந்தார். ஆனால் நரசிம்மரின் உக்கிரம் குறைந்ததே தவிர, வெப்பம் முற்றிலும் நீங்கவில்லை.இதையடுத்து அன்னை மகாலட்சுமியிடம் அனைவரும் முறையிட்டனர். மகாலட்சுமியும் இத்தலத்திற்கு வந்தார்.

அதன்பிறகே நரசிம்மரின் உக்கிரம் முழுமையாக மாறி தணிந்தது.

மேலும் அன்னை மகாலட்சுமியை ஆலிங்கனம் செய்தபடி, யோக நரசிம்மராக, கேட்டதை வழங்கும் வள்ளலாக இத்தலத்தில் நரசிம்மர் அருள்புரிகிறார்.இத்தலத்தில் இருக்கும் யோக நரசிம்மர், தன் மார்பினில் மகாலட்சுமியை தாங்கியபடி மேற்கு திசை நோக்கி அருள்பாலிக்கிறார்.

இந்த ஆலயத்தில் கொடி மரம் இல்லை. பொதுவாக கொடி மரம் என்பது, கருவறைக்கு மேலுள்ள விமானத்தின் நீளம், அகல அளவைப் பொறுத்ததே. ஆனால் இத்தலத்தில் கருவறைக்கு மேல், யானை மலை மிகவும் உயர்ந்து காணப்படுவதால் கொடி மரம் வைக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.நரசிம்மராக அவதாரம் எடுத்தது, தேய்பிறை சதுர்த்தி காலத்தில் தான். எனவே அந்த நேரத்தில் இந்த யோக நரசிம்மரை வழிபட்டால், கல்வி சிறக்கும். வியாபாரம் விருத்தியாகும். எதிரி பயம் விலகும். மரண பயம் அகலும். அதே போல் நரசிங்கவல்லி தாயாரை வணங்கினால் திருமணத் தடை நீங்கும். கோபம் குறைந்து அமைதியான வழியில் செல்ல வழி ஏற்படும் என்பது அனுபவ உண்மையாகும்.

இந்த ஆலயத்தின் அருகே உள்ள தீர்த்தத்தில் மாசி மாத பவுர்ணமி தினத்தன்று கஜேந்திர மோட்ச விழா சிறப்பாக நடத்தப்படுகிறது.

திருவண்ணாமலையைப் போலவே இங்கும் ஒவ்வொரு பவுர்ணமி தோறும் கிரிவலம் நடைபெறுகிறது.

இத்தலத்தில் சிவபெருமானுக்கு நடக்கிற பிரதோஷம் போல, நரசிம்மருக்கு பிரதோஷ பூஜை நடப்பது மிகவும் சிறப்பானதாகும்.

**அமைவிடம் :**

மதுரையில் இருந்து சென்னை செல்லும் தேசிய நெடுஞ்சாலையில், மதுரை மாட்டுத்தாவணி பஸ் நிலையத்தில் இருந்து சுமார் 8 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது

யானை மலை ஒத்தக்கடை. இங்கிருந்து மினி பஸ்களில் 2 கிலோமீட்டர் மேற்கே சென்றால் கோவிலை அடையலாம்.

## அனைத்து தோஷங்களையும் போக்கும் சோழ நாட்டு திருச்செந்தூர்!

பாலமுருகனின் திருவடி பாதங்கள் பட்ட இடமானது இரண்டு ஸ்தலங்கள். ஒன்று நிச்சயதார்த்த கோலத்தில் தெய்வானை மற்றும் சுப்பிரமணியன் வீற்றிருக்கும் திருவிடைக்கழி, மற்றொன்று வேலூரில் உள்ள வள்ளியை மணந்த வள்ளி மலை. அவ்வப்போது அம்மை அப்பனுடன் கோபித்துக் கொண்டு முருகப் பெருமானுக்கு குன்றேறி அமர்ந்து தரிசனம் அளிப்பார். ஆனால் முருகப்பெருமான் குன்றில்லாத இடமான திருவிடைக்கழியில் ஸ்ரீ சிவ சுப்பிரமணிசுவாமி காட்சி தருகிறார்.

திருவிடைக்கழி கோயில் சோழ நாட்டு திருச்செந்தூர் என்று அழைக்கப்படுகிறது. இக்கோயிலைத் தரிசனம் செய்பவர்கள் திருச்செந்தூரில் உள்ள முருகனைப் பார்த்த பலன் கிட்டும். முக்கியமாக இக்கோயிலுக்கு ஒருமுறை சென்று முருகனை தரிசித்தால், நம்முடைய பாவங்களுக்குச் சிறிது வினை கழிந்துவிடும் என்பதே ஒரு சூட்சும விதி. ஆனால் எல்லோராலும் இந்த கோயிலுக்குச் சுலபமாக சென்றுவிட முடியாது. இங்கு வழிபட நினைக்கும் பொழுதே பல்வேறு இன்னல்கள் நமக்கு ஏற்படும். ஏனென்றால் நாம் செய்த பாவ கர்மாக்களை சுலபத்தில் கழிப்பது கடினமே. இந்த புண்ணிய ஸ்தலத்திருக்கு வருவதே பெரும் பாக்கியம்.

எடுத்துக்காட்டாக நான் கும்பகோணம் மற்றும் மாயவரத்தில் உள்ள பெரும்பாலான பழம்பெரும் கோயிலுக்கு அவ்வப்பொழுது சென்று வருவேன். ஆனால் என்னால் திருவிடைக்கழிக்கு மட்டும் செல்ல முடியாத அளவுக்கு பல்வேறு இடையூறுகள் ஏற்படும். சிறிது காலத்திற்கு முன்பு தான் அந்தக் கோவிலுக்குச் செல்ல எனக்கு மாபெரும் பாக்கியம் கிட்டியது. அனைவரும் இந்த ஸ்தலத்திற்கு ஒருமுறை மட்டும் செல்லாமல், பலமுறை தொடர்ந்து சென்றால் நற்பலன்கள் கிட்டும்.

திருவிடைக்கழி கோயிலை முசுகுந்த சக்கரவர்த்தி என்னும் சோழ மன்னன் கட்டியதாகத் தலவரலாறு கூறுகிறது. இங்குள்ள கல்வெட்டுகளில் திருப்புகழ், வேல் விருத்தம் பதிக்கப்பட்டுள்ளன. சேந்தனார் முக்தி பெற்றது இந்த தலம். அருணகிரிநாதர், வசிட்டர், சேந்தனார், முசுகுந்தன் மற்றும் ராகு பகவான் வழிபட்ட ஸ்தலம். இங்கு சர்வமும் சுப்பிரமணி என்பதால், பிரதோஷ நாயகர்கள் சோமஸ்கந்தரும் சந்திரசேகரர் சண்டிகேஸ்வரர் மற்றும் அனைத்து சிவமூர்த்திகளும் கையில் வஜ்ரவேலுடன் சிவசுப்பிரமணியாக காட்சியளிக்கிறார். இக்கோயிலில் முருகன் மற்றும் சிவனின் தலவிருட்சங்கள் குரா மற்றும் மகிழ மரங்கள் உள்ளன. இங்கு உள்ள தீர்த்தம் : கங்கை கிணறு மற்றும் சரவண தீர்த்தமாகும். கோயிலின் நான்கு திசையிலும் ஐயனார் காவல் தெய்வங்கள் இருக்கின்றனர்.

முருகனுக்கு தோஷ நிவர்த்தி: திருச்செந்தூரில் சூரபத்மனை வதம் செய்த ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி. அடுத்து சூரபத்மன் இரண்டாவது மகன் இரண்யாசுரனை வதம் செய்ய தேடி அலைந்தார். அந்த அசுரன் தரங்கம்பாடியில் உள்ள கீழச்சமுத்திரத்தில் சுறா மீனாக மறைந்து வாழ்ந்தான். வைகாசி மாதம், சதயம் நட்சத்திரமன்று முருகன் இரண்யாசூரனை தேடி கண்டுபிடித்து சம்ஹாரம் செய்தார். அந்த அசுரன் ஒரு தீவிர சிவ பக்தன். அவனை அழித்ததால் முருகனுக்கு தோஷம் ஏற்பட்டது. அதற்கு அன்னை பராசக்தியின் ஆலோசனைபடி திருவிடைக்கழியில் உள்ள சரவண பொய்கையில் நீராடி, திருவிடைக்கழியில் உள்ள குரா மரத்தடியில், சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து, தன் தந்தைக்கு குரா மலர்களால் அர்ச்சனை செய்தார். பின்பு அங்கு உள்ள மரத்தின் அடியிலிருந்து முருகன் சிவனை நோக்கி தவம் செய்தார். இங்கு முருகருக்கு தோஷ நிவர்த்தி கிடைத்தது. சிவபெருமானை சிந்தித்துத் தவம் செய்த இம்மரத்தடியில் பத்ரலிங்கத்திற்கு அபிஷேகம் ஆராதனை நடைபெறும். இங்கு முருகர் மூலவராகவும், யோக சுப்பிரமணியராக குரா மரத்தடியிலும் காட்சியளிக்கிறார். இக்கோயிலில் தெய்வானை முருகனின் அழகில் மயங்கி நாணத்துடன் சற்று வலப்புறம் தலை சாய்த்து அழகிய முருகனை தன் கடைக்கண்ணால் நோக்கும் பாவனையில் தனித்து சன்னதியில் காட்சியளிப்பாள். இங்குதான் தெய்வானைக்கு நிச்சயதார்த்தம் நடந்ததாகக் கூறப்படுகிறது.



தமிழ் கடவுள் முருகருக்கு குரா மரம் என்பது பிடித்த விருட்சம். "திருக்குராவடி நிழல்தனில் உலவியப் பெருமானே" என்று அருணகிரிநாதர் குரா மரத்தடியில் இன்றும் சர்வ சாதாரணமாக உளவிய குமரேசனே என்று திருப்புகழில் பாடப்படுகிறார். 'குரவு மலர்ந்து அற்சிரம் நீங்கிய அரும்பத வேனில்' என்று குரா மலர்களை சங்க கால இலக்கியத்தில் கூறப்படுகிறது. இளவேனிற் காலத்தில் பூக்கும் குராமரத்து பூக்களை முருகருக்கு அர்ச்சனை செய்தால் குறைவில்லாத செல்வமும் வளமும் கிட்டும். இங்கு தினமும் குராமரத்தடியில் உள்ள லிங்கத்திருக்கு அர்த்தஜாம ஆராதனை நடைபெறும். மலைகளில் மட்டுமே தோன்றக்கூடிய இக்குராமரம் இத்தலத்தில் நிலத்தில் தோன்றி, தழைத்து காட்சி தருகிறது. சுப்பிரமணியக் கடவுள் இக்குராமரத்தின் கீழ் தியானம் செய்த அபூர்வ தலவிருட்சம். கல்வெட்டில் முருகனுடைய பெயர் "திருக்குராத்துடையார்" என்று குறிக்கப்பட்டுள்ளது. குரா மரத்தடியில் அமர்ந்து நாம் மனம் ஒன்றி பகவானை நினைந்து தியானம் செய்தால் மன அமைதி, சரியான பாதை மற்றும் செயலில் வெற்றி என்று முருகனின் வேல் வழிகாட்டும்.

முருகப்பெருமான் ஆறடி உயரத்தில் நின்ற கோலத்தில் காட்சி கொடுக்கிறார். முருகனின் திருவுருவ அழகு குமார தந்திரத்தில் கூறப்பட்டுள்ளபடி, திருவிடைக்கழி முருகன் ஒரு முகம், இரண்டு கரங்கள், வலது கரத்தில் அபய முத்திரையுடனும், இடது கரம் தொடையில் இருப்பது போன்ற தோற்றத்துடன் உள்ளார். முருகரின் வாகனம் ஐராவதம். இங்குள்ள கருவறையில் முன்புறம் சுப்பிரமணிய பெருமானும், அவருக்குப் பின்புறம் பாபநாசப் பெருமானும் லிங்க வடிவில் அமைந்துள்ளது. பிரம்மஹத்தி தோஷம் நிவர்த்தி பெற்ற முருகன் பூஜித்த ஸ்படிக லிங்கம் முன்னே உள்ளது. சிவன் தன்னுடைய மூல ஸ்தானத்தை முருகனுக்குக் கொடுத்து, அவர் பின்னே அமர்ந்து கவனிப்பதுபோல இருந்தது. இது ஒரு தந்தை தன் மகனுக்குக் கொடுக்கும் கௌரவமாகும். இங்கு உள்ள கருவறையில் சிவனும் முருகரும் ஒரே இடத்தில் காட்சி கொடுக்கும் அழகு காணக் கிடைக்காத ஒன்று. இரு மூர்த்தங்களுக்கும் தனித்தனி விமானங்கள் உள்ளன. முருகனுடைய விமானம் சற்று உயரமாகவும் உள்ளது. யோக முத்திரையில் முருகன் இங்குக் குரா மரத்தடியில் தவம் செய்து கொண்டிருப்பார். தந்தை மகன் ஒற்றுமை இல்லாதவர்கள் இங்கு வந்து சிவனையும் முருகரையும் தரிசித்தால், குடும்ப ஒற்றுமையைப் பலப்படும்.

நவக்கிரகங்களின் நாயகன்: இக்கோயிலில் நவ நாயகர்கள் உள்ளடங்கிய முருகன் சிவனுடன் சேர்ந்து காட்சி தருவதால், இங்கு நவக்கிரகங்களுக்குத் தனி சன்னதி கிடையாது. முக்கியமாகச் செவ்வாய் தோஷம், மாங்கல்ய தோஷம், பித்ரு தோஷம், பிரம்மஹத்தி தோஷம் மற்றும் அனைத்து நவகிரக தோஷங்களுக்கும் ஒரே அருமருந்து திருவிடைக்கழியில் உள்ள சிவசுப்பிரமணிய சுவாமி. அதிலும் பாவ கிரகங்களில் ஒன்றான ராகு பகவான் இக்கோயிலில் முருகரை வழிபட்டதாக தல வரலாற்றில் கூறப்படுகிறது. குரா என்று வார்த்தையைத் திருப்பி போட்டால் ராகு என்று வரும். முக்கியமாக இக்கோயிலில் ராகுவால் ஏற்படும் தோஷத்தை நிவர்த்தி செய்ய திருவிடைக்கழிக்கு செல்வது நன்று. "அரவு எயிற்று அன்ன அரும்பு முதிர்குரவின்" என்ற அகநானூறு பாடலில் குரவ மலரின் அரும்பு பாம்பின் பல்போன்ற வடிவம் உடையது என்பது ராகுவைக் குறிப்பது போல இருந்தது. இந்த காலகட்டத்தில் தோஷத்தை நிவர்த்தி செய்ய ராகுவின் சூட்சுமம் உள்ளடங்கியுள்ளது.

"கொந்து ஆர் குரா அடியினும் அடியவர் சிந்தை வாரிஜ நடுவினும் நெறி பல கொண்ட வேத நல் முடிவினும் மருவிய குரு நாதா"

கொந்துவார் குரா அடி என்பது திருவிடைக்கழியில் உள்ள குரா மரத்தடி பற்றி அருணகிரியால் திருப்புகழில் கூறப்பட்டுள்ளது.

முருகன் இரணிய சூரனை வதம் செய்த நாள் ஆராய்ந்து பார்த்தால், ஜோதிடத்தில் வைகாசி என்பது சூரியன் (சிவன்) ரிஷபத்தில் இருக்கும் மாதம். அங்கே சந்திரன் (சக்தி) உச்சம் பெறும் இடம். சிவனும் சக்தியும் இங்கு குருவாக இருந்து முருகனுக்குத் துணையாக இருக்கிறார். செல்வம் மற்றும் திருமண வளத்தைத் தரும் சுக்ரன் வீடானா ரிஷபதில் ஆட்சி, சதயம் என்பது ராகுவின் நட்சத்திரம். இங்குள்ள பச்சை மரம் என்பது செழிப்பு (புதன்), சனியால் ஏற்படும் கர்மாவை குறைக்கக்கூடிய பாபநாசா பெருமான் இங்கிருக்கிறான். இவ்வாறாக முருகருக்கு எல்லா நவகிரகங்களும் உள்ளடங்கி உதவியாக இருக்கிறது. மொத்தத்தில் எல்லா கிரகங்களின் தோஷங்களை விலக்கக்கூடிய இடம் திருவிடைக்கழி. இக்கோயில் தரங்கம்பாடி வட்டம், நாகப்பட்டினம் மாவட்டத்தில் மற்றும் திருக்கடையூரில் இருந்து ஆறு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. இங்குத் தெய்வானை சமேத சுப்பிரமணிய சுவாமி தரிசனம் செய்தால் தீராத கர்மா மற்றும் திருமண தோஷங்கள் விலகும். இங்குக் கந்த சஷ்டி விழா, தை பூசம், வைகாசி விசாகம், ஆடிக் கிருத்திகை, பங்குனி உத்திரம், மற்றும் கார்த்திகை திருவிழா காலங்களில் முருகரைத் தரிசிக்க வைத்தீஸ்வரன் கோயில், காரைக்கால், சுவாமி மலை மற்றும் பல்வேறு மாவட்டத்திலிருந்து நடைப்பயணமாகக் காவடி எடுத்து வருகை புரிவார்கள். இது தவிர புரட்டாசி மாதம் முதல் வெள்ளிக்கிழமை சிதம்பரத்திலிருந்து பாதயாத்திரையாக இந்த ஆலயத்திற்குச் சென்று குமரனை வழிபடுவார்கள். இக்கோவிலைப் பற்றி அறிந்த நமக்கும், இந்த சோழ நாட்டுத் திருச்செந்தூர் முருகனைத் தரிசிக்க உகந்த நேரம் வந்துவிட்டது.

## சுடுகாடு எங்கே இருக்கிறது?



ஒரு முறை திருமுருக கிருபானந்த வாரியார் ஆன்மிக சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார் .

அப்போது , மேடைக்கு முன்பு அமர்ந்திருந்த சிறுவர்களை பார்த்து , " நமக்கெல்லாம் சுடுகாடு எங்கே இருக்குன்னு தெரியுமா ? " என்று கேட்டார். அதற்கு அந்த சிறுவர்கள் , " ஊர் கோடியில் இருக்குது! "... என்று ஒட்டுமொத்தமாக பதில் கூறினார்கள்.

உடனே , " ஆடு , மாடு , கோழிகளுக்கு எங்கே இருக்கிறது ?" என்று அடுத்த கேள்வியைக் கேட்டார் வாரியார் . குழந்தைகள் பதில் தெரியாமல் மிரட்சியுடன் அவரை பார்த்தனர்.அப்போது வாரியார் சிரித்துக்கொண்டே , " இதோ இங்கே இருக்குது...! மாமிசம் சாப்பிடும் அனைவருக்கும் அவர், அவர் வயிரே சுடுகாடு " என்று கூறி வயிற்றை தடவிக் காண்பிக்க , கூட்டத்தில் பலத்த சிரிப்பு எழுந்தது.

**மீனாக்ஷி கல்யாணம் சொற்பொழிவு ஆற்றியபோது வாரியார் அவர்கள் சொன்ன உதாரணம்**

உதாரணங்கள் சொல்வதில் வாரியார் சுவாமிக்கு இணை அவரே! அவர் மீனாக்ஷி கல்யாணம் சொற்பொழிவு ஆற்றியபோது சொன்னது:

"சிவபெருமான் மதுரைக்கு 9 மணிக்கு வரவேண்டும். திங்கட்கிழமை 9-10.30 முகூர்த்தம். பிரமன் 6 மணி முதலே அக்னி வளர்த்து மந்திரம் சொல்லிக் கொண்டிருக்கிறார். மணி 8.55 ஆகிவிட்டது. பெண்ணைப் பெற்ற காஞ்சனமாலை பதறுகிறார் மாப்பிள்ளை வரவில்லையே என்று. மணி 9. கைலாயத்தில் இறைவன் நந்திதேவரிடம்,"நந்தி! புறப்படலாமா" என்று கேட்கிறார். இங்கே மதுரை அரண்மனைக்கு ஒரு சேவகன் ஓடியே வந்து மாப்பிள்ளை மாசி வீதியில் வந்துகொண்டிருக்கிறார் என்றான். திரும்பிப்பார்த்தால் மணவறையில் பிரம்மதேவனிடம் பேசிக் கொண்டிருக்கிறார். 9 மணிக்குக் கயிலையில் புறப்பட்டார். அதே 9 மணிக்கு மதுரைக்கு வந்து சேர்ந்தார்.

எப்படி முடியும் என்று கேட்கலாம். உலகத்தில் சூரியன் 6 மணிக்கு உதிக்கும் என்றால் மெட்ராஸ்லயும், கோயமுத்தூர்லயும், மதுரையிலயும் 6 மணிக்குத் தான் உதிக்கும். மெட்ராஸ்ல காலை 6 மணிக்கு உதிக்க ஆரம்பித்து அரக்கோணம் காட்பாடி, ஜோலார்பேட்டை என்றா போகும்?

சூரியனே இப்படி என்றால் முப்பத்துமுக்கோடி தேவர்களுக்கும் தலைவனான எம்பெருமான் சிவபெருமான் 9 மணிக்குக் கிளம்பி அதே 9 மணிக்கு வருவது சாத்தியமான விஷயம்தான் என்றார்.

## அபய கரம் நீட்டும் சக்கரத்தாழ்வார்

மஹா விஷ்ணுவின் திருக்கரங்களில் ஐந்து ஆயுதங்களை காணலாம். இவற்றி ல் முக்கி யமானது சக்கரம் என்று போற்றப் படுகின்ற ஸ்ரீ சுதர்ஸனம் ஆகும். திருமாலின் ஆக்ரோஷ ஸ்வரூபமான ஸ்ரீ சுதர்ஸன மூர்த்தியே திருமா லின் காத்தல் தொழிலு க்கு உறுதுணையாக இருப்பவர்.

ஸ்ரீசக்கரம் என்னும் ஸ்ரீசுதர்ஸனம் எம்பெ ரு மான் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் பிரதான ஆயுதம். அவர் தம் வலத் திருக்கரத்தில் ஏந்தியுள்ள ஸ்ரீ சுதர்ஸனம், பக்தர்களைக் காக்கவும், துஷ்டர்க ளை அழிக்கவும் செய்கிறது.

அனந்தன் என்ற நாகம், கருடன், சுதர்ஸனம் இம்மூவ ரும் பகவானை ஒரு நொடி கூட பிரியாது அவ ரைத் தொழும் 'நித்யசூரிகள்'. ஸ்ரீ வைகுண்டத் தில் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் இருக்கையாகவும், பாற்கடலில் பாம்புப் படுக் கையாகவும், ஆதிசேஷனாகக் குடையாகவும், நடக்கை யில் பாது கையாகவும் இருப்பவர் அனந்தன்.

பகவான் மனதால் நினைத்தவுடன், நினை த்த இடத்திற் கு அவரை தாங்கி செல்லும் வாகனமாகவும், அவரது தாசனாகவும் திகழ்பவர் கருடன். ஸ்ரீ சுதர்ஸனாழ்வார், ஸ்ரீ கருடாழ்வார், ஸ்ரீ அனந் தாழ்வார் என இவர்கள் மூவர்கள் மட்டுமே ஸ்ரீ பகவானை ஆட்கொண்டவர்கள் என்பதால் ஏற்பட்ட சிறப்பாகும்.

சுதர்சனர் என்ற சொல்லுக்கு நல்வழி காட்டுப வர், காண்பதற்கு இனியவர் என்று பொருள். ஆனிமாத சித்திரை நட்சத்திர நாளில் சுதர்ச ன ஜெயந்தி விழா கொண்டாடுவார்கள். பெரு மா ளின் கையில் ஆயு தமாக அலங்கரிக்கும் சக்க ரத்தாழ்வார் திருமாலுக்கு இணையான வர் என்று கூறுவர். சங்கு, சக்கர, கதாபாணியான பெருமாளி ன் கரங்களில் எப்போதும் வலக்கையிலே யே இடம் பெற்று இருப்பவர் சக்கரத்தாழ் வார். ஆனால், சில இடங்களில் மாறுபட்டு ம் அமைந்திருப்பது உண்டு.

இவர் திருவாழியாழ்வான், சக்கரராஜன், நேமி, திகிரி, ரதாங்கம், சுதர்சன ஆழ்வார் என்றெல் லாம் பல பெயர்களால் அழைக்கப் படுபவர். திருமால் கோவில்களில் சக்கரத்தா ழ்வாருக்கு த் தனிச் சன்னதி உண்டு. இவர் பதினாறு, முப்பத்திரண்டு என்ற எண்ணிக்கைகளில் கைகளை உடையவர்.

பெரியாழ்வார் :

"வடிவார் சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு"

என்று வாழ்த்திப் பாடியுள்ளார். திருமாலுக்கு இணையான வர் என்று சுதர்சனாஷ்டகத்தில் சக்கரத்தாழ்வாரைப் போற்றியுள்ளார்.

மகாவிஷ்ணுவின் வாமன அவதாரத்தின் போது, பவித்ர தர்ப்பத்தின் நுனியில் அமர்ந்து சுக்கிரனின் கண்ணைக் கிளறி அழித்தவர் சுதர்சனர்.

இராவணனின் முன்னோர்களான மால்யவா ன், சுமாலி என்ற கொடுமையான அரக்கர்க ளை தண்டிக்க கருடாரூடனாய் இலங்கை சென்ற பகவான், சுதர்சன சக்கரத்தால் அவர்களை அழித்தார்.

சுதர்ஸனர் பல புராணங்களில் பேசப்படு கிறா ர். நரசிம்ம அவதாரத்தில் இரணிய னை வதம் செய்வதற்கு நகங்களாக இருந் தவர் சுதர்ஸனர் தான் என்கிறது புராணம்.

வாமன அவதாரத் தின் போது தானம் கொ டுக்க வந்த மஹாபலி சக்கரவர்த்தியைத் தடுத்தார் சுக்ராச்சாரியார். அவரின் எண்ண த்தைத் திசை திருப்பியவர் சக்கரத்தாழ்வார்.



காசிநகரில் கண்ணனைப் போன்று சங்கு, சக்கரம் தரித்து, "நானே உண்மையான வாசு தேவன்' என்று பௌண்டரக வாசுதே வன் என்ற வலிமைமிக்க மன்னன் கூறி வந்தான். கண்ணனை மிரட்டி போருக்கு அழைத்தான். கருடன் மேல் ஏறிச்சென்ற கண்ணன் ஆழியி னால் அவனை வென்றான்.

தேவர்கோன் முதலான சகல தேவர்களும் பரமசிவனிடமிருந்து சுதர்சன வழிபாட்டை அறிந்து சக்கரத்தாழ்வாரை வழிபட்டு திருவருளைப் பெற்றார்கள்.

கஜேந்திர மோட்ச வைபவத்தில் சக்கரத் தைக் கொண்டே கஜேந்திரனை கவ்வி பிடித்து இழுத்த முதலையை அழித்து, யானை யைக் காப்பாற்றுகிறார்.

சக்கரத்தாழ்வாரின் ஆயுதங்கள் பதினாறு. அதில் வலக்கையில் உள்ள ஆயுதங்கள் சக்கரம், மால், குந்தம், தண்டம், அங்குசம், சதாமுகாக்னி, மிஸ்கிரிசம், வேல் ஆகிய வை இடக்கையில் வைத்திருக்கும் ஆயுத ங்கள் சங்கு, வாள், பாசம், கலப்பை, வஜ்ரா யுதம்,கதை, உலக்கை,திரிசூலம் ஆகியன.

பெருமாள் கோயில்களில் எட்டு கரங்கள் கொ ண்ட சுதர்சனரையும், 16 கரங்கள் கொண்ட மூர்த்தியையும், 32 கரங்கள் கொண்ட மகா சுதர்சனரையும் காணலாம்.

பொதுவாக 8 அல்லது 16 கரங்களுடன் வீறு கொண்டு எழும் தோற்றத்துடன் அறு கோண சக்கரத்தில் சக்கரத்தாழ்வார் காட் சி தருவார். 'ஷட்கோண சக்கரம்' எனும் ஆறு கோணத்தின் மத்தியில் உக்கிர வடிவ சுதர்சனமும், திரிகோண சக்கரம் எனும் முக்கோணத்தில் யோக நரசிம்மரும் அருள்பாலிக்கின்றனர்.

சுதர்சனர் தனது 16 திருக்கரங்களில் சக்கரம், மழு, ஈட்டி, தண்டு, அங்குசம், அக்னி, கத்தி, வேல், சங்கம், வில், பாசம், கலப்பை, வஜ்ரம், கதை, உலக்கை, சூலம் என 16 வகையான ஆயுதங்களுடன் மகா சுதர்சன மூர்த்தியாக காட்சி தருகிறார்.

சுதர்சனர் வழிபாடு மிகவும் சிறப்பானதாக க் கூறப்படுகிறது. வீரத்தினை குறிக்கும் செவ்வாயின் அதிதேவதை ஸ்ரீ சுப்பிரம ணியர் ஆகும். மேலே குறிப்பிட்டுள்ள சுதர் சன அம்ஸத்தை காணும்போது முருகனுக் கும் சக்கரத்தாழ்வாருக்கும் உள்ள ஒற்றுமை புலப்படும்.

ஜோதிடத்தில் செவ்வாய் மேஷம் மற்றும் விருச்சிக ராசிகளின் அதிபதியாகத் திகழும் செவ்வாய் கால புருஷனுக்கு லக்னாதிபதியா கவும் ஆயுள் பாவமான அஷ்டமாதிபதியாக வும் விளங்குகிறார்.

நோய், கடன் தொல்லைகள், எதிரிகள், வழக்கு கள் போன்றவற்றால் மீளமுடியாத பிரச்னைக ளை சந்தித்துவருபவர்கள் ஸ்ரீ சக்கரத்தாழ்வா ரை வழிபடுவது, சுதர்சனா ஷ்டகம் பாராயணம் செய்வது, சுதர்சன ஹோமம் செய்வது போன்றவை சிறந்த பயனளிக்கும்.

மேலும் புற்றுநோய் போன்ற உயிர்க்கொல்லி நோய் உடையவர்கள் சக்கரத்தாழ்வாரை வணங்கி வருவதால் நோய் நீங்கி மரணபயம் போகும்.

மனிதனின் நிம்மதியைப் பாதிப்பவை கடன், வியாதி, எதிரி தரும் துன்பம் அபிசார தோஷ ங்கள் எனப்படும் பில்லி, சூனியம் போன்றவற் றால் ஏற்படும் உபா தைகளை முற்றிலும் நீக்கி சந்தோஷத்தை அளிப்பவர். இவர் கல்வியில் தடையை நீக்கி இடைவிடாது தொடரும் கல்வி யோகத்தைத் தருபவர் என்பது நம்பிக்கை.

## ஸ்ரீ அப்பால ரங்கன் பங்குனி பிரம்மோற்சவம்



திருப்பேர்நகர் ஸ்ரீ அப்பால ரங்கன் பங்குனி பிரம்மோற்சவம் விடையாற்றி முதல் திருநாள் புறப்பாடு.

## அருள்மிகு அண்ணாமலையார் உண்ணாமலை அம்மன் திருக்கல்யாண உற்சவம் சிறப்பு வழிபாடு



திருவண்ணாமலை ஏப்05:

அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலில் அண்ணாமலையார் உண்ணாமலை அம்மன் திருக்கல்யாண உற்சவம் வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து தங்க ஆபரணங்களுடன் திருக்கல்யாண உற்சவம்,நலுங்கு மற்றும் ஊஞ்சல் உற்சவமும் வெகு சிறப்பாக நடைபெற்றது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் அண்ணாமலையார் உண்ணாமலை திருக்கல்யாணம் உற்சவத்தில் கலந்து கொண்டு வேண்டி அருள் பெற்றனர்.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## தோழர் திரு.L.சுந்தர்ராஜன் வேட்பு மனு தாக்கல்



சட்டமன்றதேர்தலையொட்டி திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி வெற்றி வேட்பாளர் தோழர் திரு.L.சுந்தர்ராஜன் நேற்று 04/04/2026 காலை திருவொற்றியூர் தேரடி சன்னதி தெருவில் இருந்து மண்டலம்-1, தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகத்திற்கு ஊர்வலமாக சென்று வேட்பு மனு தாக்கல் செய்தார். இந்நிகழ்வில் வடசென்னை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் திருமதி. மதாரம்மா கனி பாரூக் அவர்கள் உட்பட திருவொற்றியூர் தொகுதிக்கு உட்பட்ட அனைத்து நிலை காங்கிரஸ் பேரியக்க நிர்வாகிகளுடன் கலந்து கொண்டார்.

# பேரணாம்பட்டு மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் குடியாத்தம் தொகுதி அதிமுக வேட்பாளர் பரிதா தீவிர வாக்கு சேகரிப்பு!



**வேலூர், ஏப்.05:**

தமிழக சட்டசபை தேர்தல் தற்போது சூடு பிடிக்க தொடங்கியுள்ளது. ஆங்காங்கே வேட்பாளர்கள் தங்களது வேட்பு மனுக்களை தாக்கல் செய்த வண்ணம் உள்ளனர். இந்நிலையில் வேலூர் மாவட்டம் ,குடியாத்தம் சட்டமன்ற தொகுதி (தனி) அதிமுக வேட்பாளர் பரிதா புருஷோத்தமன் சூறாவளியாக குடியாத்தம் தொகுதியில் வாக்காளர்களை நேரில் சந்தித்து அவர்களது இல்லத்துக்கு சென்று தீவிர வாக்கு சேகரிப்பை நடத்தி வருகிறார்.

அதன்படி 4ம் தேதி சனிக்கிழமை அதிகாலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை குடியாத்தம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பேரணாம்பட்டு ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளான கடாம்பூர் ,உமராபாத் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் நடந்தே சென்று வீதி வீதியாக வாக்காளர்களை சந்தித்து தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார் பரிதா.

பரிதாவுடன் ஒன்றிய செயலாளர் பொகளூர் பிரபாகரன் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள், முக்கிய பிரமுகர்கள் திரளாக புடைசூழச் சென்றனர். ஆங்காங்கே இருந்த தொழிலதிபர்களையும் அவர்களது இல்லத்தில் நேரில் சந்தித்து தனக்கு ஆதரவு தெரிவித்து வெற்றி பெறச் செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

அப்பொழுது அதிமுக வேட்பாளர் பரிதா புருஷோத்தமனை அந்தந்த பகுதிகளில் உள்ள கூட்டணி கட்சி நிர்வாகிகள் சால்வை அணிவித்தும், பெண்கள் ஆர்வமாக ஆரத்தி எடுத்தும், மலர்த்தூவியும் வரவேற்றனர். இதனை பார்த்த அதிமுக வேட்பாளர் பரிதா புருஷோத்தமன்,எனக்கு சால்வை அணிவிப்பதை இத்துடன் நிறுத்திக் கொள்ளுங்கள், தவிர்த்துக் கொள்ளுங்கள் என்று அன்புடன் கூறியதோடு ஏழை, எளிய மக்கள், முதியோர் ஆகியோரை கண்டறிந்து அவர்களுக்கு சால்வை அணிவித்து அதை எனக்கு வாக்காக பெற்றுத் தாருங்கள் என்று கூட்டணி கட்சி நிர்வாகிகளுக்கு அன்புடன் வேண்டுகோள் (அன்பு கட்டளை) விடுத்தார்.

இதைக் கேட்டதும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் இது சரியான கருத்தாக உள்ளது. இதையே இன்று முதல் இக்கணம் முதற்கொண்டு நாங்கள் பின்பற்றி நடந்து கொள்கிறோம் என்று அந்த கூட்டணி கட்சி நிர்வாகிகள் தெரிவித்தது அங்கிருந்த வாக்காளர்களை வெகுவாக கவர்ந்தது குறிப்பிடத்தக்கது. திமுக ஆட்சியில் நடந்த அவலங்களை வாக்காளர்களுக்கு தோலுரித்து தெரிவிக்கும் வகையில் துண்டு பிரசுரங்களை அச்சடித்து அதை வீடு வீடாக விநியோகம் செய்வதிலும் இடைவிடாது ஈடுபட்டார் பரிதா புருஷோத்தமன்.

புரட்சித்தலைவர் தமிழகத்தின் முன்னாள் முதல்வர் மறைந்த எம்ஜிஆரால் ஆரம்பிக்கப்பட்ட இந்த அதிமுக அவரது மறைவுக்குப் பிறகு புரட்சித்தலைவி அம்மா ஜெயலலிதா அவர்களால் தொடர்ந்து வளர்க்கப்பட்டு ஒரு பேரியக்கமாக உருவெடுத்தது. மறைந்த அந்த இரண்டு தலைவர்களின் நினைவாக இம்முறை அதிமுக அரியணை ஏற வேண்டும் என்ற எண்ணத்திலும், அதை மனதில் கொண்டும் எனக்கு இரட்டை இலை சின்னத்தில் வாக்களியுங்கள். வாக்காளர்கள் சிந்தித்து செயல்பட வேண்டும் என்றும் வாக்காளர்களை வேண்டி விரும்பி கேட்டுக் கொண்டார்.

அத்துடன் வயது முதிர்ந்த அவர்களின் கால்களை தொட்டு பாதம் பணிந்து தனது வேண்டுகோளை தெரிவித்து வாக்குகளை சேகரித்த வண்ணம் உள்ளார் பரிதா புருஷோத்தமன்.

பரிதாவின் அன்பு, அரவணைப்பு, அவரது வேண்டுகோள் அனைவரையும் வெகுவாக கவர்ந்துள்ளது. கடந்த முறை சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்திருந்தாலும் இம்முறை அனைத்து தரப்பிலும் தனக்கு அமோக வாய்ப்பு அளித்து வெற்றி பெறச் செய்யுமாறு வாக்காளர்களை சந்தித்து தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார் பரிதா புருஷோத்தமன். பொதுமக்களும் பரிதாவின் நடவடிக்கையால் வெகுவாக ஈர்க்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

# இரட்டை இலை சின்னத்தில் கலசப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் வாக்கு சேகரிப்ப



**திருவண்ணாமலை ,ஏப்05:**

திருவண்ணாமலை மாவட்டம் புதுப்பாளையம் மேற்கு ஒன்றியத்தில் கலசபாக்கம் சட்டமன்றத் தொகுதி திரு.அக்ரி எஸ். எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நந்திமங்கலம், பனை ஓலைப்பாடி, படி அக்ரஹாரம், வாசுதேவன் பட்டு, மேல் புஞ்சை, நரசிங்கநல்லூர்,தொரப்பாடி ஆகிய ஊராட்சிகளில் இரட்டை இலை சின்னத்தில் வாக்குகளை சேகரித்தார்.

உடன் கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

தமிழ்நாடு இ பேப்பர் செய்திகள் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணா மலை

# அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி மகமதுபுரத்தில் திமுக வேட்பாளர் நந்தகுமார் வாக்கு சேகரிப்பு!




**வேலூர், ஏப். 05:**

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி மற்றும் திமுக தலைவர் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின்ன ஆசி பெற்ற அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர், வேலூர் மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர், அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி மேற்கு ஒன்றியம், மகமதுபுரம் ஊராட்சி கிராமத்தில் திராவிட மாடல் நல்லாட்சியின் சாதனையை எடுத்து கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் மேற்கு ஒன்றிய செயலாளர், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, மத்திய ஒன்றிய செயலாளர் பி.வெங்கடேசன், திமுக மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் நிர்வாகிகள், திமுக தோழர்கள் உடனிருந்தனர்.

# காட்பாடி தொகுதி தவெக வேட்பாளர் சுதாகர் வேட்புமனு தாக்கல் !



**வேலூர்,ஏப்.05:**

தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் வேலூர் மாவட்டம், காட்பாடி சட்டமன்ற தொகுதியின் வேட்பாளராக சுதாகர் முறைப்படி அறிவிக்கப்பட்டார். அவர் தனது வேட்பு மனுவை தேர்தல் நடத்தும் அலுவலரிடம் காட்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தில் அதிகாரப்பூர்வமாக 4ம் தேதி தாக்கல் செய்தார். முன்னதாக சுதாகர் காட்பாடி சித்தூர் பேருந்து நிலையம் அருகில் உள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்துவிட்டு தவெக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் புடை சூழ 200க்கும் மேற்பட்டவர்களுடன் ஊர்வலமாக வந்து தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாதை வெளிச்சம்

தர்மதி மீதான பாதை வெளிச்சம்



## விழுப்புரம் மாவட்டம் வேட்பாளர்கள் அறிமுக கூட்டம்




விழுப்புரம் மாவட்டம் வேட்பாளர்கள் விழுப்புரம், செஞ்சி, மயிலம், திண்டிவனம் வானூர்,விக்கரவாண்டி உள்ளிட்ட தொகுதி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சார பயணத்திற்கு கழக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பிரச்சாரம் செய்ய வருகை தந்ததையடுத்து மயிலம் சட்டமன்றத்தொகுதி வல்லம் ஒன்றிய அதிமுக சார்பில் நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

அகரம் ராமதாஸ்
செய்தியாளர்

## ரவுசு மணி

வெற்றி என்பது நீங்கள் விரும்புவதை பெறுவது.......

மகிழ்ச்சி என்பது நீங்கள் பெறுவதை விரும்புவது.....



V. முத்து ராமகிருஷ்ணன்

## ஆதி கேசவப் பெருமாள் பிரும்மோற்சவம்



ஆதி கேசவப் பெருமாள் பிரும்மோற்சவம் தொடக்கம். காலை தர்மாபீடம்

## சோழவந்தான் தொகுதியில் அ.தி.மு.க.,- த.வெ.க. சார்பாக முன்னாள் எம்.எல்.ஏ.,க்கள் வேட்பு மனுதாக்கல் செய்தனர்.

வாடிப்பட்டி, ஏப்.5- மதுரை மாவட்டம் வாடிப்பட்டி தாலு கா அலுவலகத்தில் சோழவந்தான் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் தேர்தலுக்கு வேட்பு மனுக்கள் கடந்த 30ந்தேதி முதல் பெறப்பட்டு வருகிறது. இந்நிலையில் நேற்று 4 ந்தேதி காலை 11 மணிக்கு வாடிப் பட்டி அ.தி.மு.க., பேரூர் அலுவலக த்தில் இருந்து அதன் வேட்பாளர் முன்னாள் எம்.எல்.ஏ., கி மாணிக் கம் ஏராளமான கழக தொண்டர் களுடன் ஊர்வலமாக புறப்பட்டு வந்து பஸ் நிலையத்தில் உள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து விட்டுதாலுகா அலுவலகத்தில் 11.41 மணிக்கு சோழவந்தான் தொகுதி தேர்தல் நடத்தும் அதிகாரி சண்முக வடிவேலிடம் 3 வேட்பு மனுக்களும் அவருக் கு மாற்றாக அவரது மகள் டாக்டர் ஆதிரா தீப்தி 1 வேட்புமனுவும் தாக்கல் செய்தனர். உடன் ஒன்றிய செயலாளர்கள் ரவிச்சந்திரன், காளிதாஸ், கொரியர் கணேசன், அரியூர் ராதாகிருஷ்ணன், பேரூர் செயலாளர் டாக்டர் அசோக்குமார், வழக்கறிஞர் ராஜ்குமார் ஆகியோர் இருந்தனர். அதேபோல் தமிழக வெற்றி கழக வேட்பாளராக முன்னாள் எம்.எல்.ஏ., எம்.வீ. கருப்பையா மற்றும் அவருக்கு மாற்றாக தாமோதரனும் வேட்புமனு தாக்கல் செய்தனர். உடன் மாவட்டச் செயலாளர் விசால் கிருஷ்ணன் ஒன்றிய செயலாளர்கள் வழக்கறிஞர் தியாகராஜன், தாமோதரன் ஆகியோர் வந்திருந்தனர். முன்னதாக ஏராளமான தொண்டர்களுடன் வாடிப்பட்டி பஸ் நிலையத்தில் இருந்து புறப்பட்டு வந்தனர். மேலும் நாம் தமிழர் கட்சி சார்பாக நாகலட்சுமி திருமாறன் மாற்றாக பவித்ராவும்,இந்து திராவிட மக்கள் கட்சி சார்பாக ராமதாஸ், சுயேச்சை வேட்பாளர்கள் கோபால்,சிவாய ஆதித்யா ஆகியோர் வேட்பு மனு தாக்கல் செய்துள்ளனர்.

# சுற்றுலா: குளு குளு குன்னூரில் பார்க்க வேண்டிய அட்டகாசமான இடங்கள்!

### 1. குன்னூர்

உதகை செல்வதற்கு முன்பாக சுமார் 20 கி. மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது குன்னூர். உதகையில் சில நாட்கள் தங்கியிருந்து வர விரும்புவோர், குன்னூரில் தங்க வாய்ப்பும் வசதியும் உள்ளது. செலவும் குறைவு. அழகும் அதிகம். மலைப் பிரதேசமான இங்கும் அழகு மிகுந்த இயற்கைக் காட்சிகள் ஏராளம். சிறுவர்கள் மகிழ்ந்து விளையாட பூங்காக்களும் உண்டு.

### 2. சிம்ஸ் பூங்கா

குன்னூரின் மேல்புறத்தில் உள்ளது சிம்ஸ் பூங்கா. தமிழக அரசின் தோட்டக்கலை பராமரிப்பில் உள்ள இப்பூங்கா, அழகிய புல்வெளிப் பாதை, மரம், செடிகள், மூலிகைச் செடிகள் என்று இயற்கை எழில் ததும்பக் காட்சியளிக்கிறது. மட்டுமல்லாமல் காய்கறித் தோட்டங்களும் உள்ளது கூடுதல் சிறப்பு.

### 3. லாஷ் நீர்வீழ்ச்சி

குன்னூரில் இருந்து 7 கி. மீட்டர் தொலைவில் உள்ளது லாஷ் நீர்வீழ்ச்சி. இந்த நீர்வீழ்ச்சி பாறைகள் நிறைந்து காட்சியளிக்கிறது, உயரிய மலைகளும், அடர்ந்த காடுகளும் இந்த நீர்வீழ்ச்சியின் அழகை மேலும் பன்மடங்கு அதிகரிக்கிறது. இயற்கையை ரசிக்கும் மனம் உள்ளவர்கள், இந்த இடத்தைப் பார்த்தால் 'சட்'டென்று திரும்ப மனமே வராது.




### 4. கோத்தகிரி

நீலகிரி மாவட்டத்தில் உதகைக்கு அடுத்ததாகக் குறிப்பிட்டுச் சொல்லப்படும் மற்றொரு நகர் கோத்தகிரி, நிகி. மீட்டர் தொலைவில் உள்ளது. உதகையில் இருந்து இங்கு தேயிலைத் தோட்டங்கள் எங்குபார்த்தாலும் பரந்து விரிந்து கிடக்கிறது. காணக் கோடிக் கண்கள் வேண்டும். வனப் பிரதேசங்கள் கொள்ளை அழகு.

### 5. கொடநாடு

கோத்தகிரியில் இருந்து 18 கி. மீட்டர் தொலைவில் உள்ளது கொடநாடு. இங்குள்ள காட்சி முனை மிக அற்புதமான இடம். இங்கிருந்து பார்த்தால் நீலகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களை இரண்டாகப் பிரித்துச் செல்லும் நதியின் பேரழகைப் பார்த்து ரசிக்க முடிகிறது. இங்கு தேயிலைத் தொழிற்சாலை ஒன்றுள்ளது.

### 6. ரங்கசாமி பீக் அன்ட் பில்லர்

ரங்கசாமி பீக் அன்ட் பில்லர் என்னும் கூம்பு வடிவில் அமைந்திருக்கும் இதன் உச்சியில் இருந்து பார்த்தால், மலைப் பிரதேசம் அனைத்தும் அற்புத அழகாகக் கண்களைக் குளிர்ச்சிப்படுத்தும். கோத்தகிரியில் இருந்து 20 கி. மீட்டர் தொலைவில் உள்ள இந்தப் பகுதியில்' பழங்குடியினரான இருளர்கள் அதிகளவில் வாழ்கின்றனர்

### 7. முக்குர்தி நேஷனல் பார்க்

உதகையில் இருந்து 40 கி. மீட்டர் தொலைவில் மலையின் உச்சியில் முக்குர்தி நேஷனல் பார்க் அமைந்துள்ளது. இங்கு ஆறுகளும், முக்குர்தி ஏரியும் உள்ளது. இதில் மீன்பிடித்து மகிழ்வது சிறப்புக்குரிய அம்சம். பிப்ரவரி முதல் மே மாதம் வரை இப்பகுதியில் சுற்றுலாச் செல்வதற்கு உகந்த காலமாகும்.

### 8. அருங்காட்சியகம்

1989ஆம் ஆண்டு உதகையில் திறக்கப்பட்டது அருங்காட்சியகம். உதகையில் இருந்து மைசூர் செல்லும் வழியில் உதகை நகரின் கிளப் சாலையில் அமைந்துள்ளது இந்த அருங்காட்சியகம்.

இங்கு வாழ்ந்த தோடர் என்னும் பழங்குடியின மக்கள் பயன்படுத்திய பல்வேறு வகையான பொருட்கள் இங்கு காட்சிப்படுத்தப் பட்டுள்ளன. பன்னிரெண்டு ஆண்டுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சி மலர், கல் சிற்பங்கள், வெண்கல வேலைப்பாடுகள், பழைய நாணயங்கள் போன்றவைகளும் இங்கு உள்ளன.

### 9. தொட்டபெட்டா

உதகையில் இருந்து 8 கி. மீட்டர் தொலைவில் உள்ளது தொட்டபெட்டா. கடல் மட்டத்தில் இருந்து சுமார் 8640 அடி உயரத்தில் அமைந்துள்ள இம்மலையின் உச்சிவரை செல்வதற்கு நல்ல சாலை வசதிகள் உண்டு. இங்குள்ள கண்ணாடி அறையில் இருந்து மலையின் இயற்கைக் காட்சிகளைக் கண்டு ரசிக்கலாம்.

### 10. தவளை மலை

உதகையில் இருந்து 15 கி. மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது தவளை மலை பார்வை முனை என்ற இடம். இங்கிருந்து பார்த்தால் மலையொன்று தெரிகிறது. அந்த மலை தவளை வடிவில் காட்சியளிப்பதால் அந்த முனைக்கு இப்பெயர் வந்தது இங்கிருந்து முதுமலை விலங்குகள் சரணாலயத்தைப் பார்த்து மகிழ முடியும்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### மீன்வளத்துறை அலுவலகத்தில் உதவிப் பேராசிரியர், உதவியாளர் பணி!

நாகப்பட்டினத்தில் உள்ள டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தில் காலியாகவுள்ள உதவிப் பேராசிரியர், உதவியாளர் பணிக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

வேலைவாய்ப்பு அறிவிப்பு எண். 01/2026

பணி: Assistant Professor (Faculty of Fisheries Science) (ST)

சம்பளம் ரூ.35,400 - ரூ.1,12,400

வயது வரம்பு: 30.3.2026 தேதியின்படி 18 முதல் 32-க்குள் இருக்க வேண்டும்.

தகுதி : ஏதாவதொரு பாடப்பிரிவில் இளநிலைப் பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

தேர்வு செய்யப்படும் முறை: நேர்முகத் தேர்வு மூலம் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுவர்.

விண்ணப்பக் கட்டணம்: பொது, ஓபிசி பிரிவினர்களுக்கு ரூ.1000. எஸ்சி, எஸ்டி பிரிவினர்களுக்கு ரூ.500. இதனை "The Finance Officer, TamilNadu Dr.J.Jayalalithaa Fisheries University" பெயருக்கு டி.டி.யாக எடுக்கவும்.

விண்ணப்பிக்கும் முறை: www.tnjfu.ac.in என்ற இணையதளத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து, அதைப் பூர்த்தி செய்து, அதனுடன் தேவையான அனைத்துச் சான்றிதழ்களின் நகல்களையும் இணைத்து, அதனுடன் டிடி இணைத்து The Registrar, Tamil Nadu Dr. J. Jayalalithaa Fisheries University, Vettar River View Campus, Nagapattinam - 611 002, Tamil Nadu, India என்ற அஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். விண்ணப்பத்தை அனுப்பும் தபால் கவரின் மீது விண்ணப்பிக்கும் பணியின் பெயரைக் குறிப்பிட வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர கடைசி நாள்: 13.4.2026

# ஏப்ரல் மாதம் (2026) வார ராசிபலன்

## 05.04.2026 முதல் 11.04.2026 வரை

### மேஷம்

இந்த வாரம் எதிலும் கவனமாக இருக்க வேண்டும். ஏதேனும் மன கஷ்டம் உண்டாகும். வீண் செலவு ஏற்படும். உடல் சோர்வு வரலாம். மனோதைரியம் கூடும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். முயற்சிகள் சாதகமான பலன் தரும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றமடைய பாடுபடுவீர்கள். எதிர்பார்த்த ஆர்டர்கள் வரலாம். சரக்குகளை அனுப்பும் போது கவனம் தேவை.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் பணி நிமித்தமாக அலைய வேண்டி இருக்கும்.

குடும்பத்தில் நிம்மதி குறையும் படியான சூழ்நிலை வரலாம். கணவன், மனைவிக்கு இடையே விட்டுக்கொடுத்து செல்வது நல்லது. வாக்கு வாதங்களை தவிர்ப்பது நல்லது.

பிள்ளைகளிடம் அன்பாக நடந்து கொள்வது அவர்களின் வெற்றிக்கு உதவும்..

பெண்களுக்கு மனோதைரியம் கூடினாலும் பழைய சம்பவங்களின் நினைவால் மனமகிழ்ச்சி குறையும்.

### ரிஷபம்

இந்த வாரம் பண வரத்து இருக்கும். மன கவலை நீங்கும். எடுத்த காரியத்தை திருப்தியுடன் செய்து முடிப்பீர்கள். சாமர்த்தியமான பேச்சு இக்கட்டான நேரங்களில் கைகொடுக்கும். எதிலும் கவனம் தேவை. புதிய நண்பர்களின் சேர்க்கையும் அவர்களால் உதவியும் கிடைக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான பணிகள் தடையின்றி நடக்கும். புதிய ஆர்டர் தொடர்பான காரியங்கள் சாதகமான பலன் தரும். வியாபார போட்டிகள் குறையும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் பணிசுமை குறைந்து மனநிம்மதி அடைவார்கள். குடும்ப உறுப்பினர்களிடம் வாக்குவாதத்தை தவிர்ப்பது நன்மை தரும். கணவன், மனைவிக்கு இடையே ஒற்றுமை உண்டாகும். பிள்ளைகள் வழியில் நிம்மதி கிடைக்கும்.

பெண்களுக்கு காரியங்களில் ஏற்பட்ட தடை நீங்கி திருப்தியாக நடந்து முடியும். சாதுரியமான பேச்சின் மூலம் பிரச்சனைகள் தீரும். பண வரத்து திருப்தி தரும்.

எதிர்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும் .

### மிதுனம்

இந்த வாரம் பண தேவை அதிகரிக்கும். வீண் செலவு மன அமைதி பாதித்தல் ஆகியவை இருக்கும். விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வாய்க்கு ருசியாக உணவு உண்பீர்கள். காரிய தாமதம், உடல் சோர்வு, வீண் பகை போன்றவை ஏற்படலாம் உங்களை கண்டு அடுத்தவர் பொறாமை படக்கூடும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களுக்காக அலைய வேண்டி இருக்கும். வாடிக்கையாளர்களிடம் அனுசரித்து பேசுவது நல்லது.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேல் அதிகாரிகளை அனுசரித்து செல்வதன் மூலம் நன்மை கிடைக்க பெறுவார்கள். குடும்பத்தில் இருப்பவர்களின் செயல்களால் டென்ஷன் உண்டாகலாம். கணவன், மனைவிக்கு இடையே கோபமான பேச்சை விடுத்து அமைதியாக எதையும் எடுத்து சொல்வது நல்லது. பிள்ளைகளின் நலனுக்காக செலவு செய்ய வேண்டி இருக்கும்.

பெண்களுக்கு மன அமைதி பாதிக்கும் படியான சூழ்நிலை இருக்கும்.

### கடகம்

இந்த வாரம் எல்லாவற்றிலும் லாபம் கிடைக்கும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். மற்றவர்களுக்கு உதவிகள் செய்வதன் மூலம் நன் மதிப்பு பெறுவீர்கள். உங்களுடன் கருத்து வேற்றுமை ஏற்பட்டு பிரிந்து சென்றவர்கள் மீண்டும் உங்களை நாடி வருவார்கள். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும். எதிர்பார்த்த லாபம் வரும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக பணிகளை சிரமமின்றி செய்து முடிப்பார்கள். பயணங்கள் செல்ல வேண்டி இருக்கும். குடும்பத்தில் சகஜ நிலை காணப்படும். கணவன், மனைவிக்கு இடையே சுமுக உறவு இருக்கும். பிள்ளைகளுக்கு தேவையான ஆடை அணிகலன்கள் வாங்கி கொடுப்பீர்கள். பெண்களுக்கு கருத்து வேற்றுமையால் பிரிந்து சென்றவர்கள் மனம் மாறி மீண்டும் திரும்பி வருவார்கள். பண வரத்து திருப்தி தரும். காரிய அனுகூலம் உண்டாகும. மாணவர்களுக்கு கல்வி தொடர்பான செலவு கூடும். கல்வியில் முன்னேற வேண்டும் என்பதை குறிக்கோளாக கொண்டு பாடங்களை படிப்பீர்கள் .

### சிம்மம்

இந்த வாரம் காரிய அனுகூலம் உண்டாகும். முக்கிய நபர்களின் உதவி கிடைக்கும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். துணிச்சலுடன் செயல்பட்டு எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். பண வரத்து இருக்கும். இடமாற்றம், வெளியூர் பயணங்கள், அலைச்சல் ஆகியவை இருக்கும். தொழில் வியாபாரம் முன்னேற்ற பாதையில் செல்லும். அரசு தொடர்பான காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு கட்டளை இடுகின்ற பதவி கிடைக்கும். புதிய வேலைக்கு முயற்சி செய்கிறவர்களுக்கு வேலை கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலை காணப்படும். யாரிடமும் எதிர்த்து பேசி விரோதத்தை வளர்த்துக் கொள்ளாமல் இருப்பது நன்மை தரும். கணவன் மனைவிக்கு இடையே இருந்த பிரிவு நீங்கி ஒன்று சேர்வார்கள்.

பிள்ளைகள் எதிர்காலம் பற்றிய எண்ணம் மேலோங்கும். பெண்கள் எந்த செயலையும் தைரியமாக செய்து முடிப்பீர்கள். எதிர்பாராத திடீர் செலவுகள் வீண் அலைச்சல் உண்டாகலாம்.

மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கத்தில் கஷ்டமான பாடங்களையும் மனம் துவளாமல் படிப்பீர்கள்.

### கன்னி

இந்த வாரம் நற்பெயரும் புகழும் உண்டாகும். புண்ணிய காரியங்களில் ஈடுபாடு இருக்கும். வாழ்க்கையில் எதிர்பாராத திருப்பங்களை சந்திக்க நேரலாம். எப்படிப்பட்ட பிரச்சனை வந்தாலும் சமாளித்துவிடும் திறமை இருக்கும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் வியாபார வளர்ச்சிக்காக துணிச்சலுடன் சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு முன்னேற வாய்ப்புகள் வந்து சேரும். சக ஊழியர்கள் மேல் அதிகாரிகளின் ஆதரவுடன் பணிகளை திறமையாக செய்து முடிப்பீர்கள். குடும்பத்தில் கணவன், மனைவிக்கு இடையே நெருக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளின் செயல்பாடுகள் திருப்திகரமாக இருக்கும். மன வருத்தத்துடன் சென்ற உறவினர்கள் வருத்தம் நீங்கி மீண்டும் வந்து சேருவார்கள்.

பெண்கள் பயணங்கள் செல்ல நேரிடும். எந்த பிரச்சனை வந்தாலும் அதை சமாளிக்கும் திறமை உண்டாகும். அடுத்தவர்களின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் காணப்படும். விளையாட்டு போட்டிகளில் வெற்றி வாய்ப்பு உண்டாகும்..

### துலாம்

இந்த வாரம் விருப்பத்திற்கு மாறாக காரியங்கள் நடக்கும். மன குழப்பம் உண்டாகலாம். பொருட்களை கவனமாக பார்த்துக் கொள்வது நல்லது. அடுத்தவருடன் சில்லறை சண்டைகள் ஏற்படலாம். வயிறு தொடர்பான நோய் ஏற்படலாம். பண வரத்து இருக்கும். பயணங்கள் மகிழ்ச்சி தருவதாக இருக்கும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். எதிர்பார்த்தபடி பழைய பாக்கிகள் வசூலாகும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் சக ஊழியர்களுடன் வாக்கு வாதங்களை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களின் செயல்பாடுகள் உங்களது கோபத்தை தூண்டுவதாக இருக்கலாம். அனுசரித்து செல்வது நல்லது. கணவன், மனைவிக்கு இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகள் முன்னேற்றத்திற்காக பாடுபடுவீர்கள். பெண்களுக்கு காரிய தடையால் மன குழப்பம், டென்ஷன் உண்டாகலாம். பண வரத்து இருக்கும். மாணவர்கள் யாரிடமும் வாக்குவாதம் செய்யாமல் அனுசரித்து செல்வது நல்லது. மிகவும் கவனமாக பாடங்களை படிப்பது வெற்றிக்கு உதவும்..

### விருச்சிகம்

இந்த வாரம் பண வரத்து எதிர்பார்த்ததை விட கூடுதலாக வரும். பேச்சின் இனிமை சாதுரியத்தால் எடுத்த காரியத்தை திறம்பட செய்து முடிப்பீர்கள். எதிலும் கவனமாக இருப்பது நல்லது. அக்கம்பக்கத்தினரிடம் சில்லறை சண்டைகள் உண்டாகலாம். எதையும் சமாளிக்கும் மனநிலை ஏற்படும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் சிறு தடங்கல்கள் உண்டாகலாம். பார்ட்னர் மூலம் நன்மை உண்டாகும். நிதி உதவி எதிர்பார்த்தபடி கிடைக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக உழைத்து அலுவலக பணிகளை முடிக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். கணவன் மனைவிக்கு இடையே ஒருவருக்கொருவர் அனுசரித்து செல்வதன் மூலம் நல்ல பலன் கிடைக்கும்.

பிள்ளைகள் உங்களது கருத்துக்களை கேட்டு அதன்படி நடப்பது மனதுக்கு மகிழ்ச்சியை தரும்.

பெண்கள் சாமர்த்தியமான பேச்சின் மூலமும் சூழ்நிலையை புரிந்து கொண்டு நடப்பதன் மூலம் காரிய அனுகூலம் உண்டாகும். மாணவர்கள் கல்வியில் எதிர்பார்த்த முன்னேற்றமடைய கூடுதலாக நேரம் எடுத்துக்கொண்டு கவனத்தை சிதற விடாமல் படிப்பது அவசியம்..

### தனுசு

இந்த வாரம் எதிர்ப்புகள் நீங்கும். நோய்களை நீக்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். பண வரத்து எதிர்பார்த்ததை விட அதிகரிப்பது மன மகிழ்ச்சியை தரும். எதிரிகளால் இருந்து வந்த பிரச்சனை தீரும். நண்பர்கள் மூலம் தேவையான உதவிகள் கிடைக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான பயணங்கள் மேற்கொள்ள வேண்டி இருக்கும். இனிமையான பேச்சின் மூலம் வாடிக்கையாளர்களை தக்கவைத்துக் கொள்வீர்கள்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அலுவலக பணி தொடர்பான அலைச்சல் இருக்கும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். குடும்பத்தில் உங்களது பேச்சுக்கு எதிர்பேச்சு பேசியவர்கள் அடங்கி விடுவார்கள். கணவன், மனைவிக்கு இடையில் மகிழ்ச்சி நீடிக்கும். பிள்ளைகள் தொடர்பான காரியங்களை செய்து முடிக்க அலைய வேண்டி இருக்கும். பெண்களுக்கு உங்களது செயல்களுக்கு இருந்த முட்டு கட்டைகள் விலகும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். பண வரத்து கூடும்.

### மகரம்

இந்த வாரம் மனக் கவலை ஏற்பட்டு நீங்கும். எதிர்பாராத செலவு ஏற்படும். மற்றவர்களுடன் வாக்கு வாதங்களை தவிர்ப்பதால் பகை ஏற்படாமல் இருக்கும். எவ்வளவு திறமையாக செயல்பட்டாலும் பாராட்டு கிடைப்பது அரிது. சிலரது எதிர்பாராத பேச்சு மன வருத்தத்தை தரலாம் கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான முக்கிய முடிவுகள் எடுக்கும் போது தீர ஆலோசித்த பின் முடிவு எடுப்பது நல்லது.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேல் அதிகாரிகள், சக ஊழியர்களின் கருத்துக்கு மாற்று கருத்து சொல்லாமல் இருப்பது நன்மை தரும்.

குடும்பத்தில் இருப்பவர்களுடன் கருத்து மோதல் உண்டாகலாம். கணவன், மனைவிக்கு இடையே இருந்த பூசல்கள் சரியாகும். பிள்ளைகளுக்கு தேவையன பொருட்களை வாங்குவது மற்றும் அவர்களது நலனுக்காக பாடுபட வேண்டியும் இருக்கும்.

பெண்கள் உங்களது கருத்துக்கு சிலர் மாற்று கருத்து கூறலாம். எதிர்த்து பேசாமல் அமைதியாக இருப்பது நல்லது.

மாணவர்கள் எவ்வளவு திறமையாக படித்தாலும் பாடங்கள் கடினமானவை போல தோன்றும். மனதை தளரவிடாமல் படிப்பது வெற்றியை தரும்.

### கும்பம்

இந்த வாரம் அடுத்தவருடன் ஏற்படும் பிரச்சனைகளிலும் வாக்கு வாதத்திலும் வெற்றியே கிடைக்கும். பண வரத்தும் கூடும். ஆனால் எந்த காரியத்தில் ஈடுபட்டாலும் அடுத்தவரை நம்புவதிலும் எச்சரிக்கை தேவை. உங்களுக்கு மிகவும் வேண்டியவர் உங்களை விட்டு விலகி செல்லலாம். மாற்று மதத்தினரின் உதவி கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த பண வரவு இருக்கும். போட்டிகள் குறையும் புதிய முயற்சிகளில் ஈடுபட தோன்றும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் செய்யும் பணிகள் திருப்திகரமாக நடந்து முடியும். எதிர்பார்த்த இடமாற்றம் வரலாம். குடும்பத்தில் இருப்பவர்கள் உங்களை அனுசரித்து செல்வது மனதுக்கு இதமாக இருக்கும். கணவன், மனைவிக்கு இடையே சிறிய வாக்கு வாதம் ஏற்படலாம். பிள்ளைகள் உங்களை புரிந்து கொண்டு நடப்பது மனதுக்கு நிம்மதியை தரும்.

பெண்களுக்கு சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி உண்டாகும். அடுத்தவரை நம்பி பொறுப்புகளை ஒப்படைப்பதில் கவனம் தேவை. மாணவர்களுக்கு கல்வியில் இருந்த போட்டிகள் விலகும். பாடங்களை படிப்பதில் இருந்த இடையூறுகள் நீங்கும்..

### மீனம்

இந்த வாரம் யோசித்து பேச வேண்டும். துன்பம் வருவது போல் இருக்குமே தவிர, ஆனால் வராது. மனதில் ஏதேனும் கவலை, பயம் அவ்வப்போது ஏற்படும். உங்களது பேச்சே உங்களுக்கு எதிர்ப்பை உண்டாக்கலாம். ஆன்மீக எண்ணம் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் மூலம் வர வேண்டிய லாபம் தாமதப்படும். எதிர்பார்த்த நிதியுதவி ஓரளவு கிடைக்கும். ஆர்டர்களுக்காக இருந்த அலைச்சல் குறையும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு விருப்பம் இல்லாத மாற்றம் வரலாம். குடும்பத்தில் வீண் வாக்கு வாதங்கள் ஏற்படும். கணவன், மனைவிக்கு இடையே நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. பிள்ளைகள் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள், நண்பர்களிடம் கவனமாக பழகுவது நல்லது.

பெண்கள் எந்த ஒரு காரியத்தையும் செய்து முடிக்கும் வரை அந்த காரியம் முடியுமோ, முடியாதோ என்ற மனக் கவலை இருக்கும். வீண் அலைச்சல் குறையும். மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெறுவது பற்றிய மனக் கவலை இருக்கும். சக மாணவர்களுடன் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது..

# எரிவாயு விநியோகம் சீராக உள்ளது: இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் அறிவிப்பு

**புதுடெல்லி, ஏப்.5:**

நாடு முழுவதும் சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோகம் சீராக இருப்பதாக நாட்டின் மிகப்பெரிய எண்ணெய் நிறுவனமான இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நேற்று அறிவித்துள்ளது. இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

நாள்தோறும் 28 லட்சம் சிலிண்டர்கள் விநியோகிக்கப்படுகின்றன. வீட்டு உபயோகத்துக்கான சிலிண்டர் விநியோகத்துக்கு முன்னுரிமை அளித்து வருகிறோம். போர் பதற்றம், சர்வதேச சந்தையில் இடர்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகள் இருந்தாலும், இந்தியாவில் விநியோகம் சீராகவே



உள்ளது. 87 சதவீத சிலிண்டர் முன்பதிவு எண்ம முறையில் மேற்கொள்ளப்படுகிறது. நேரில் வந்து முன்பதிவு செய்வதற்கு பதிலாக கைப்பேசி அழைப்பு மூலம் முன்பதிவு செய்யும் ஐவிஆர்எஸ் முறை மற்றும் குறுஞ்செய்தி மூலம் முன்பதிவு செய்ய மக்களை ஊக்குவித்து வருகிறோம்.

சரியான நபர்களுக்கு சிலிண்டர் விநியோகம் நடைபெறுகிறதா என்று தெரிந்துக்கொள்ள ஒருமுறை கடவு எண் மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது. விநியோகம் போதுமான அளவிலும் உள்ளது மற்றும் நிலைமையைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம். சில விநியோகஸ்தர்கள் முறைகேட்டில் ஈடுபடுவது தொடர்பாக பொதுமக்களிடம் இருந்தும் சமூக ஊடகங்கள் மூலம் புகார்கள் பெறப்படுகின்றன.

சிலிண்டர்கள் பதுக்கி வைத்து அதிகவிலைக்கு விற்பனை செய்பவர்கள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதுபோன்ற தவறுகளைத் தடுக்க விநியோக நிறுவனங்களை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். அதே நேரத்தில் தவறாக பரவும் தகவல்களை நம்பி மக்கள் அச்சத்தில் சிலிண்டர்களை முன்பதிவு செய்ய வேண்டாம் என்றும் அந்த நிறுவனம் கூறியுள்ளது.

போர்பதற்றம் ஏற்பட்ட பிறகு நாடு முழுவதும் இதுவரை 68,000 அதிரடி சோதனைகளில் பதுக்கிவைக்கப்பட்ட 48,000-க்கும் மேற்பட்ட சிலிண்டர்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பாக 855 வழக்குகளை காவல் துறையினர் பதிவு செய்துள்ளனர். 141 விநியோகஸ்தர்கள் மீது நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது. இதில் 5 விநியோக நிறுவனங்கள் நீக்கப்பட்டு உள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# க்ரைம் கார்னர்

## ரயில் நிலையத்தில் ரூ.10.67 லட்சம் மதிப்புள்ள தங்கம், பணம் பறிமுதல்

**சென்னை, ஏப்.5:**

சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு சென்னை சென்டிரல் ரெயில் நிலையத்திற்கு வந்து செல்லும் வெளியூர் மற்றும் வெளிமாநில ரெயில்களில் ரெயில்வே பாதுகாப்பு படையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் உரிய ஆவணமின்றி கொண்டுவரப்படும் பணம், பரிசு பொருட்கள், தங்கம் ஆகிய வற்றை பறிமுதல் செய்து வருகின்றனர்.

இந்நிலையில், சென்னை சென்டிரல் ரெயில் நிலையத்தின் நடைமேடை எண்.6ல் ரெயில்வே பாதுகாப்பு படையினர் பயணிகளிடம் திடீர் சோதனை நடத்தினர். அப்போது, சந்தேகத்திற்கிடமாக வந்த இருவரை நிறுத்தி சோதனை செய்தபோது ரூ.6 லட்சத்து 87 ஆயிரம் மதிப்புள்ள 50 கிராம் தங்கம், ரூ.3.80 லட்சம் ரொக்கம் ஆகியவற்றை ரெயில்வே பாதுகாப்பு படையினர் பறிமுதல் செய்து விசாரித்தனர்.

அதில், திருவள்ளூர் மாவட்டத்தை சேர்ந்த அபிலாஷ்(32), வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த பன்னீர் செல்வம் (46) ஆகியோர் உரிய ஆவணமின்றி தங்கம் மற்றும் பணத்தை கொண்டு சென்றது தெரியவந்தது. இதையடுத்து, ரெயில்வே பாதுகாப்பு படையினர் 50 கிராம் தங்கம் மற்றும் ரூ.3.80 லட்சம் ரொக்கம் ஆகிய வற்றை பறிமுதல் செய்து நுங்கம்பாக்கத்தில் உள்ள வருமான வரித்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

## கஞ்சா விற்பனை குற்றவாளிகள் 4 பேர் குண்டர் சட்டத்தில் கைது

**நெல்லை, ஏப்.5:**

திருநெல்வேலியைச் சேர்ந்த சாமிநாதபாண்யடின் மகன் துளசி சாமிநாதபாண்டியன் (வயது 19), சித்திரைபாபு மகன் சின்னத்தம்பி(எ) ராசுக்குட்டி(26), லெட்சுமணன் மகன் ராம்சூர்யா(எ) ரன்(24), லெட்சுமணன் மகன் அபீகுமார்(22) ஆகிய 4 பேர் திருநெல்வேலி மாநகர பகுதியில் கஞ்சா போதை பொருள் விற்பனை செய்து எதிர்மறை கண்காணிப்பிற்கு வந்து, பொது ஒழுங்கு மற்றும் பொது சுகாதார பராமரிப்பிற்கு குந்தகம் விளைவித்து வந்த “மருந்து சரக்கு குற்றவாளிகள்” ஆவர். இதனையடுத்து திருநெல்வேலி மாநகர போலீஸ் கமிஷனரின் உத்தரவுப்படி மேற்சொன்ன 4 பேரும் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் பாளையங்கோட்டை மத்திய சிறையில் தடுப்புக்காவலில் அடைக்கப்பட்டனர்.

## தூங்கிக்கொண்டிருந்த பெண்ணிடம் 2 பவுன் நகை பறிப்பு

**சேலம், ஏப்.5:**

சேலம் மாவட்டம் மேச்சேரி பகுதியை சேர்ந்தவர் பழனிசாமி. இவரது மனைவி அமுதா (வயது 38). இவர் நேற்று முன்தினம் அதிகாலை வீட்டில் தூங்கி கொண்டு இருந்தார். அப்போது மர்ம நபர்கள், அமுதா கழுத்தில் இருந்த 2 பவுன் நகையை பறித்ததுடன், வீட்டில் இருந்த செல்போனையும் திருடி சென்றனர். இந்த சம்பவம் தொடர்பாக போலீசில் புகார் அளிக்கப்பட்டது. இந்த புகாரின் பேரில் மேச்சேரி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்

## சட்ட விரோதமாக 17 கிலோ புகையிலை பொருட்கள் வைத்திருந்தவர் கைது

**திருநெல்வேலி, ஏப்.5**

திருநெல்வேலி மாவட்டம் மேலசெவல் காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட, கீழஓமநல்லூர் பஸ் ஸ்டாப் அருகே சப்-இன்ஸ்பெக்டர் வள்ளிநாயகம் தலைமையிலான காவல்துறையினர் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது மூலக்கரைப்பட்டியைச் சேர்ந்த சீனிகார்த்திக் (வயது 35) என்பவர் வந்த நான்கு சக்கர வாகனத்தை நிறுத்தி போலீசார் சோதனை செய்தனர். அப்போது அவர் அரசால் தடை செய்யப்பட்ட சுமார் 17 கிலோகிராம் புகையிலை பொருட்களை விற்பனை செய்வதற்காக பதுக்கி வைத்திருந்தது தெரியவந்தது. இதனையடுத்து மேற்சொன்ன சப்-இன்ஸ்பெக்டர் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு சீனிகார்த்திக்கை நேற்று கைது செய்தார். மேலும் அவரிடமிருந்து சுமார் 17 கிலோகிராம் புகையிலை பொருட்கள் மற்றும் நான்கு சக்கர வாகனத்தை கைப்பற்றி உரிய சட்ட நடவடிக்கை எடுத்து வருகிறார்.

# விளையாட்டு செய்திகள்

## சேப்பாக்கத்தில் தொடர்ச்சியாக 6 போட்டிகளில் சிஎஸ்கே தோல்வி: புள்ளிப்பட்டியலில் கடைசி இடம்

**சென்னை, ஏப்.5:**

நேற்று பஞ்சாப் கிங்ஸ் அணிக்கு எதிரான தோல்வியுடன் சேர்த்து சென்னை-சேப்பாக்கம் எம்.ஏ.சிதம்பரம் கிரிக்கெட் மைதானத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி தொடர்ச்சியாக 6 போட்டிகளில் தோல்வி அடைந்துள்ளது.

ஐபிஎல் கிரிக்கெட்டில் ஐந்து முறை சாம்பியன் பட்டம் வென்ற அணிகளில் ஒன்று சென்னை சூப்பர் கிங்ஸ் அணி. கடைசியாக கடந்த 2023 சீசனில் சிஎஸ்கே சாம்பியன் பட்டம் வென்றது. அதன் பிறகு கேப்டன் பொறுப்பை அடுத்தவரிடம் ஒப்படைக்க தோனி முடிவு செய்தார். அங்கிருந்துதான் அணிக்கு பல்வேறு பிரச்சினைகள் எழுந்தன. தோனி கடைசியாக கடந்த 2019-ல் சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடி இருந்தார். அதன் பின்னர் ஓய்வை அறிவித்த அவர், ஐபிஎல் கிரிக்கெட்டில் சிஎஸ்கே அணிக்காக இப்போது வரை விளையாடி வருகிறார்.

மறுபக்கம் டி20 கிரிக்கெட்டின் ஆட்ட பாணி மாறி வருகிறது. நடப்பு ஐபிஎல் சீசனிலேயே 7 ஆட்டங்களில் 3-ல் இரண்டு இன்னிங்ஸ்களிலும் 200+ ரன்கள் எடுக்கப்பட்டுள்ளன. அந்த அளவுக்கு டி20 கிரிக்கெட் பேட்ஸ்மேன்கள் ஆட்டம் உள்ளது. அதை கருத்தில் கொண்டே இந்த முறை அணியை முற்றிலுமாக மாற்றி பல இளம் வீரர்களுக்கு சிஎஸ்கே வாய்ப்பு கொடுத்துள்ளது. இருப்பினும் சிஎஸ்கே பெறுகின்ற முடிவில் மாற்றம் இல்லை. இந்த சீசனில் ராஜஸ்தான் ராயல்ஸ், பஞ்சாப் கிங்ஸ் என விளையாடிய இரண்டு ஆட்டங்களிலும் தோல்வி அடைந்துள்ளது. இதில் பஞ்சாப் கிங்ஸ் அணி உடன் சொந்த மைதானமான சென்னை - சேப்பாக்கத்தில் தோல்வி அடைந்தது. இது சேப்பாக்கத்தில் சிஎஸ்கே-வின் 6-வது தொடர் தோல்வியாக அமைந்துள்ளது. இதிலிருந்து விடுபட்டு வெற்றிக்கான சூத்திரத்தை சிஎஸ்கே அணி கண்டறிய வேண்டும் என்பது அந்த அணி ரசிகர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. ‘எங்கள் அணியில் திறமை படைத்த வீரர்கள் உள்ளனர். நிச்சயம் இந்த சீசனில் அவர்கள் சிறப்பாக செயல்படுவார்கள்” என சிஎஸ்கே பயிற்சியாளர் பிளெமிங் நம்பிக்கை தெரிவித்துள்ளார். தற்போது புள்ளிப்பட்டியலில் சிஎஸ்கே கடைசி இடத்தில் உள்ளது.

## இங்கிலாந்தின் நம்பர் 1 செஸ் வீராங்கனை ஆனார் போதனா சீனிவாசன்

**சென்னை, ஏப்.5:**

இந்திய வம்சாவளி சிறுமி போதனா சீனிவாசன் (11) இங்கிலாந்தின் நம்பர் 1 செஸ் வீராங்கனை ஆனார். சிறுமி போதனாவின் பெற்றோர் கடந்த 2007-ஆம் ஆண்டு திருச்சியில் இருந்து இங்கிலாந்துக்கு குடி பெயர்ந்தனர். வடக்கு லண்டனில் உள்ள தொடக்கப் பள்ளியில் பயிலும் போதனா சீனிவாசன் பிடே தரவரிசை 2366 புள்ளிகளை ஈட்டியுள்ளார். இங்கிலாந்தின் நான்கு முறை மகளிர் சாம்பியன் லேன் யோவை முந்தி முதலிடத்தைப் பெற்றார் போதனா. மேலும் உலகின் முதல் 100 இடங்களில் 72-ஆவது இடத்தில் நுழைந்துள்ளார் போதனா. கரோனா காலத்தில் 2020-ஆம் செஸ் ஆடத் தொடங்கிய போதனா குறுகிய காலத்தில் இச்சிறப்பை பெற்றுள்ளார்.

முன்னாள் பிரதமர் ரிஷி சுனக் சிறுமி போதனாவின் சாதனைக்கு பாராட்டு தெரிவித்துள்ளார்.

# மீண்டும் தமிழ்நாடு தலைநிமிர அதிமுக ஆட்சியமைக்க வேண்டும்- எடப்பாடி பழனிசாமி

**திருப்பத்தூர், ஏப்.5:**

தேர்தலில் திமுக கூட்டணி, அதிமுக கூட்டணி, தமிழக வெற்றிக் கழகம், நாம் தமிழர் கட்சி என 4 முனை போட்டி நிலவுகிறது.

தேர்தலை முன்னிட்டு அரசியல் கட்சிகள் தொடர்ந்து தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றன. அதன்படி, அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி இன்று திருப்பத்தூர் மாவட்டம்ஜோலார்பேட்டையில் பிரசாரம் மேற்கொண்டார். அதிமுக மற்றும் அதன் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து வாக்கு சேகரித்தார். அப்போது அவர் பேசியதாவது:-

தமிழ்நாட்டில் திமுக ஆட்சியில் பாட்டிக்கு கூட பாதுகாப்பில்லை. முதல்-அமைச்சர் கூறுகிறார் மீண்டும் அவர்தான் ஆட்சிக்கு வருவார் என்று. திமுக ஆட்சியில் இதுவரை நடந்தது போதும் இதுபோல நடப்பதற்கு மீண்டும் அந்த ஆட்சித் தேவையா? மீண்டும் தமிழ்நாடு தலைநிமிர அதிமுக ஆட்சியமைக்க வேண்டும். சட்ட ஒழுங்கை பாதுகாக்க வேண்டும்.

சிறுபான்மை மக்கள் சிந்திக்க வேண்டும். வாக்குகளுக்காக சிறுபான்மையின மக்களுக்கு ஆசை வார்த்தைக்கூறுகிறார் ஸ்டாலின். அதிமுக மக்களுக்காக ஆட்சி செய்கிறது. 10 ஆண்டுகள்



சிறப்பான ஆட்சியை கொடுத்தோம்.

குடும்ப ஆட்சி, வாரிசு அரசியல் தேவையா? ஸ்டாலினின் மருமகன் சபரீசனும் பொதுவெளியில் வந்துவிட்டார். ஸ்டாலின், உதயநிதி, மருமகன் சபரீசன், துர்க்கா ஸ்டாலின் என நான்கு அதிகார மையம் தமிழ்நாட்டை ஆண்டுக்கொண்டிருக்கிறது.

இன்று தமிழ்நாடு தலைகுனிய இந்த அதிகார மையங்கள்தான் காரணம். கடந்த முறை திமுக வெளியிட்ட அறிவிப்புகளில் நான்கில் ஒரு பங்கு கூட நிறைவேற்றவில்லை. இந்த தேர்தலில் திமுகவிற்கு மூடுவிழாதான். அண்மையில் மத்திய அரசு இந்தியா முழுவதும் சாதிவாரி கணக்கெடுப்பு எடுக்கப்படும் என அறிவித்துள்ளது. அதன்படி அதிமுக ஆட்சி அமைந்தால் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும். பல்வேறு வரிகளை உயர்த்திய திமுக அரசு மக்களுக்கு தேவையா?. அரிசி, எண்ணெய், பருப்பு உள்ளிட்டவற்றின் விலை உயர்ந்துவிட்டது. அதிமுக ஆட்சியில் ரேசனில் தரமான அரிசி வழங்கப்படும். ரேசனில் விலையில்லா பருப்பு, எண்ணெயும் வழங்கப்படும்.

திட்டங்களுக்கு பெயர் வைப்பதற்கு ஸ்டாலினுக்கு நோபல் பரிசு தரலாம். தேர்தல் அறிக்கையில் நிறைய அறிவிப்புகள் வெளியிட்டுள்ளோம். உங்களை மீட்டெடுக்க ஆட்சி அமைந்தால் ரூ.10 ஆயிரம் வங்கிக்கணக்கில் செலுத்தப்படும். அதிமுக ஆட்சி அமைந்தால் விலையில்லாமல் பிரிட்ஜ் வழங்கப்படும். இப்போது வழங்கப்படும் ரூ.1000, ரூ. 2 ஆயிரமாக வழங்கப்படும். கூட்டுறவு வங்கிக் கடன் தள்ளுபடி செய்யப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# பழனிசாமியால் எந்நாளும் ஆட்சிக்கு வரமுடியாது: முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின்

**சென்னை, ஏப்.5:**

முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;

”தோல்வி பயத்தில், நாக்கில் நரம்பில்லாமல் பேசும் பழனிசாமி இனி எந்நாளும் ஆட்சிக்கு வரமுடியாது. தலைவர் கலைஞர் ஒரு சிங்கம். அந்தச் சிங்கத்தின் பிள்ளை நான். தந்தையாக மட்டுமல்ல, தலைவராக அவரை எந்நாளும் போற்றி வணங்குபவன்!



பண்பற்ற பழனிசாமி அவர்களே, தலைவர் கலைஞரும் நானும் மக்களைச் சந்தித்து முதலமைச்சரானவர்கள். உங்களைப் போல, கூவத்தூர் கும்மாளங்களால், கொல்லைப்புறம் வழியாக முதலமைச்சர் பொறுப்பை ஏலத்துக்கு எடுத்தவர்கள் அல்ல!

எங்களைப் பற்றிப் பேசும் தகுதி உங்களுக்கு இல்லை! தமிழ்நாட்டுக்கு மக்கள் என்றுமே அந்தத் தகுதியை உங்களுக்கு வழங்க மாட்டார்கள். மே 4: மக்களின் JUDGEMENT DAY-வில் உங்களுக்கான தண்டனை கிடைக்கும்!”

இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.

# பெரம்பூரில் விஜய் சார்பில் திருத்தப்பட்ட வேட்புமனு தாக்கல்!

**சென்னை, ஏப்.5:**

சென்னை பெரம்பூர் தொகுதியில் தவெக தலைவர் விஜய்யின் திருத்தப்பட்ட வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தவெக தலைவர் விஜய் பெரம்பூரிலும் திருச்சி கிழக்கு தொகுதியிலும் போட்டியிடுகிறார்.



தமிழகத்தில் வேட்புமனு தாக்கல் தொடங்கிய முதல் நாளே (மார்ச் 30) பெரம்பூர் தொகுதியில் விஜய் தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

தொடர்ந்து அப்பகுதியில் அன்றே பிரசாரம் மேற்கொண்டார்.

தொடர்ந்து திருச்சி கிழக்கு தொகுதியில் ஏப். 2 ஆம் தேதி விஜய் வேட்புமனு தாக்கல் செய்து பிரசாரம் செய்தார்.

இரு தொகுதிகளிலும் தாக்கல் செய்த வேட்புமனுக்களில் முரணான தகவல்கள் இருந்ததாகக் கூறப்பட்டது.

அவர், தான் தொடர்புடைய வழக்கு ஒன்றை பெரம்பூர் வேட்புமனு தாக்கலில் குறிப்பிடவில்லை என்ற சர்ச்சை எழுந்தது.

இதையடுத்து வழக்கு விவரத்துடன் புதிய பிரமாணப்பத்திரத்தை விஜய் சார்பில் தவெக மாவட்ட செயலாளர் சிவா, இன்று தேர்தல் அலுவலரிடம் அளித்துள்ளார்.

தவெக தலைவர் விஜய் இன்று புதுச்சேரியில் பிரசாரம் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அவர் கூறினார்.

# வணிகச் செய்திகள்

## தங்கம் விலை பவுனுக்கு ரூ.800 உயர்வு

**சென்னை, ஏப்.5:**



22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை சென்னையில் (ஏப்.4) பவுனுக்கு ரூ.800 என உயர்ந்துள்ளது. வெள்ளி விலையில் மாற்றம் இல்லை.

மேற்காசிய போர் பதற்றம், சர்வதேச பொருளாதார சூழல், கச்சா எண்ணெய் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்பு, அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, தங்கத்தின் மீதான முதலீடு, உலக பங்குச் சந்தை முதலீடுகள் உள்ளிட்டவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. உலக அளவில் தங்கத்தை இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது. இந்நிலையில், சென்னையில் நேற்று காலை வர்த்தகம் தொடங்கியதும் 22 காரட் ஆபரணத் தங்கம் கிராமுக்கு ரூ.100 மற்றும் பவுனுக்கு ரூ.800 என விலை உயர்ந்தது. இதனால் ஒரு கிராம் ரூ.13,950-க்கும், ஒரு பவுன் ரூ.1,11,600-க்கும் விற்பனை ஆகிறது.

24 காரட் தங்கம் நேற்று ஒரு கிராம் ரூ.15,218 மற்றும் ஒரு பவுன் ரூ.1,21,744-க்கும் விற்பனை ஆகிறது. வெள்ளி விலையில் மாற்றமின்றி ஒரு கிராம் ரூ.255, கட்டி வெள்ளி கிலோ ரூ.2,55,000-க்கு விற்பனை ஆகிறது.

# சிபிஐ அதிகாரி போல் நடித்து ரூ. 71.1 லட்சம் மோசடி!



புதுடெல்லி, ஏப்.5:

காவல்துறையின் தகவலின்படி, தாணேவில், டோம்விவிலியைச் சேரந்த 42 வயதுடைய நபருக்கு மார்ச் முதல் வாரத்தில், இந்தியத் தொலைத்தொடர்புஒழுங்குமுறை ஆணையத்தைச் சேர்ந்தவர் என கூறிக்கொண்டு அடையாளம் தெரியாத நபரிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. அவரிடம் அந்த நபர், பெண்களுக்கு ஆபாசமான செய்திகளை அனுப்பியதாகவும், அதுதொடர்பாக காட்கோபர் காவல் நிலையத்தில் அவர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த வழக்கு சிபிஐ விசாரித்து வருவதாகவும் கூறினார்.

அதன் தொடர்ச்சியாக, அவரது வங்கிப் பரிவர்த்தனைகள் மோசடி நடவடிக்கைகளைக் காட்டுவதாகக் குற்றம் சாட்டினார்.

மேலும், இந்த வழக்குத் தொடர்பாக அமலாக்கத்துறை உள்ளிட்ட பல்வேறு முகமைகள் விசாரிக்கும் என போலி நபர்கள் கூறியுள்ளனர். தாங்கள் சொல்வது உண்மை என்று நம்பவைக்க உச்ச நீதிமன்றத்திலிருந்து வந்தவை எனப் போலி ஆவணங்களையும் பாதிக்கப்பட்ட நபருக்கு அனுப்பினர். இந்த வழக்கை முடித்துவைப்பதற்காக, பாதிக்கப்பட்டவரிடம் தவணை முறையில் பணத்தைக் கேட்டு மிரட்டியுள்ளனர். பின்னர், அந்தத் தொகை தவணை முறையில் திரும்ப அளிக்கப்படும் என உறுதியளித்ததாகவும் அவர்கள் கூறினர்.

பாதிக்கப்பட்ட நபரிடமிருந்து இணையவழிப் பரிவர்த்தனைகள் மூலம் மொத்தம் ரூ. 71.1 லட்சத்தை அந்த மோசடியாளார்களுக்கு அனுப்பியுள்ளார். இந்த தகவலைப் பாதிக்கப்பட்ட நபர் வங்கிப் பரிவர்த்தனை விவரங்களைத் தனது மனைவியிடம் பகிர்ந்துகொண்ட பின்னரே, அவரது மனைவி அந்த மோசடியாவார்களிடம் கேள்விகள் எழுப்பியதுடன், அவர்கள் அனுப்பிய ஆவணங்களையும் சரிபார்த்தார். ஆவணங்களில் முரண்பாடுகள் இருப்பதைக் கண்டறிந்ததும், தாங்கள் ஏமாற்றப்பட்டிருப்பதை அந்தக் குடும்பத்தினர் உணர்ந்தனர்.

இதையடுத்து, திலக் நகர் காவல் நிலையத்தில் தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் தொடர்புடைய பிரிவுகளின் கீழ் மோசடி வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பான விசாரணை நடைபெற்று வருவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

## டெல்லியில் திடீர் வானிலை மாற்றம்: புழுதிப்புயலால் மக்கள் அவதி





புதுடெல்லி, ஏப்.5:

தலைநகர் டெல்லியில் அவ்வப்போது வானிலை திடீரென மாறி மக்களை சிரமத்திற்குள்ளாக்கிவிடும். அந்த வகையில் நேற்று திடீரென புழுதிப்புயல் வீசி டெல்லியையே கலங்கடித்து விட்டது. டெல்லியில் குளிர் ஓய்ந்து கடந்த சில வாரங்களாக வெயில் அடித்து வந்தது. காற்றும் சிறிது இதமாக வீசி வந்ததால் வெயில் அவ்வளவாக தெரியவில்லை.

இந்த நிலையில் நேற்று மாலையில் திடீரென காற்று சூறாவளி போல சுழன்று வீசியது. இந்த காற்றால் புழுதி மேலே எழும்பி, எங்கும் ஒரே புழுதி மண்டலமாக காட்சி அளித்தது. இந்த புழுதிப்புயலால் சாலையில் நடந்து சென்றவர்கள் மற்றும் இருசக்கர வாகனங்களில் சென்றவர்கள் நிலை தடுமாறினார் கள். நான்கு சக்கர வாகனங்களின் கண்ணாடியில் புழுதி பட்டு பார்வைத்திறனை மறைத்தது. இந்த புழுதிப்புயலுக்கு பிறகு சில இடங்களில் மழையும் பெய்தது. அப்போதும் காற்று வேகமாக வீசி மக்களை இன்னலுக்கு உள்ளாக்கியது. இந்த திடீர் வானிலை மாற்றத்தால் மக்கள் அவதியடைந்தனர்.

ஒட்டுமொத்தத்தில் இந்த புழுதிப்புயலால் டெல்லி சிறிது நேரம் ஸ்தம்பித்தே போனது.

## ‘சைபர் கிரிமினல்களை தனிமைச் சிறையில் அடைக்க வேண்டும்’ - தலைமை நீதிபதி ஆவேசம்



புதுடெல்லி, ஏப்.5:


உத்தர பிரதேசத்தில் பகுதி நேர வேலைவாய்ப்பு தருவதாக கூறி சுமார் 6 லட்சத்து 55 ஆயிரம் ரூபாய் மோசடி செய்த வழக்கில் சூரஜ் ஸ்ரீவஸ்தவ், தனக்கு ஜாமீன் வழங்கக் கோரி தாக்கல் செய்த மனு சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது, வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி சூர்யகாந்த், “கொலை குற்றவாளிகளைக் கூட சீர்திருத்தி விடுவிக்க வாய்ப்புள்ளது.

ஆனால் இதுபோன்ற சைபர் கிரிமினல்களை செல்போன் உள்ளிட்ட உபகரணங்களை பயன்படுத்த முடியாதபடி தனிமைச் சிறையில் அடைப்பதே சரியான தீர்வாக இருக்கும்” என்று தெரிவித்தார்.

அதோடு, ஜாமீன் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை நீதிபதிகள் தள்ளுபடி செய்தனர்.

## சத்தீஸ்கரில் மாவோயிஸ்ட்களின் மறைவிடத்தில் ரூ.11 கோடி மதிப்பிலான சுவிஸ் தங்க கட்டிகள் பறிமுதல்



பிஜப்பூர், ஏப்.5:

சத்தீஸ்கர் மாநில பஸ்தார் சரக ஐ.ஜி. சுந்தர்ராஜ் பட்டிலிங்கம் கூறியதாவது: மாவோயிஸ்ட் முக்கியத் தலைவர் ரூபேஷ் சரணடைந்ததைத் தொடர்ந்து, கிளர்ச்சியாளர்களின் தளபதி பாப்பாராவ் என்பவருக்காகப் பெருமளவு ரொக்கம், தங்கம் பிஜாப்பூர் வனப் பகுதிக்கு மாற்றப்பட்டதாகத் தகவல் கிடைத்தது.

இதனடிப்படையில், கடந்த 10 நாட்களாக நடத்தப்பட்ட தீவிர விசாரணையைத் தொடர்ந்து, அடர்ந்த வனப்பகுதியில் உள்ள மாவோயிஸ்ட்களின் மறைவிடம் கண்டறியப்பட்டது.

அங்கிருந்து சுவிஸ் முத்திரையுடன் கூடிய தங்க கட்டிகள் பறிமுதல் செய்யப்பட்டன. சுமார் 7.2 கிலோ எடை கொண்ட இந்த தங்க கட்டிகளின் மதிப்பு ரூ.11.16 கோடி.

தங்கக் கட்டிகளில் சுவிஸ் முத்திரை இருப்பதுதான் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

தடயவியல் சோதனைகளுக்குப் பின்னரே இதன் தரம் மற்றும் உண்மைத்தன்மை குறித்துத் தெரியவரும். இது தொடர்பாகத் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறோம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## கேரளாவில் அனைத்து குடும்பங்களுக்கும் ரூ.25 லட்சத்துக்கு மருத்துவ காப்பீடு; காங்கிரஸ் கட்சி வாக்குறுதி



திருவனந்தபுரம், ஏப்.5:

கேரள மாநிலத்தில் சட்டமன்ற தேர்தல் வருகிற 9-ஆம் தேதி நடைபெறுகிறது. இதையொட்டி காங்கிரஸ் தலைமையிலான ஜனநாயக முன்னணி கூட்டணியின் தேர்தல் வாக்குறுதிகள் அடங்கிய தேர்தல் அறிக்கையை தெலுங்கானா முதல்-மந்திரி ரேவந்த் ரெட்டி நேற்று எர்ணாகுளம் மாவட்டம் கொச்சியில் வெளியிட்டார்.

அதில் இடம்பெற்ற வாக்குறுதிகள் விவரம் வருமாறு:-

இந்திரா உத்தரவாதம் அடிப்படையில், கேரள அரசு பஸ்களில் பெண்களுக்கு இலவச பயணம் வழங்கப்படும்.

கல்லூரி மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000 நிதியுதவி வழங்கப்படும். ஓய்வூதியத் தொகை ரூ.3 ஆயிரமாக உயர்த்தப்படும்.

உம்மன் சாண்டி சுகாதார காப்பீடு திட்டத்தின் கீழ் அனைத்து குடும்பங்களுக்கும் ரூ.25 லட்சம் வரை மருத்துவ காப்பீடு வழங்கப்படும்

படித்த இளைஞர்கள் தொழில் தொடங்க ரூ.5 லட்சம் வட்டியில்லா கடன் வழங்கப்படும்.

பெண்களுக்கு ‘குடும்பஸ்ரீ’ என்ற மகளிர் சுய உதவிக்குழு போல, ஆண்களுக்கு சுய உதவிக்குழுவாக ‘யுவஸ்ரீ’ என்ற திட்டம் செயல்படுத்தப்படும்.

ஆன்லைன் டாக்சி திட்டத்தில் ஏற்படும் குறைபாடுகளை பரிசீலித்து, அவற்றை உரிய முறையில் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். ஆன்லைன் டாக்சி வாடிக்கையாளர்களுக்காக 24 மணி நேரமும் இயங்கும் உதவி மையம் அமைக்கப்படும்.

அரசு மருத்துவமனைகளில் நோயாளிகள் தரையில் கிடக்கும் நிலையை மாற்றி, சிகிச்சைக்காக அனுமதிக்கும்போது கட்டாயமாக படுக்கை வசதி செய்து தரப்படும்”

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒரே நேரத்தில் அரசு வேலை பெற்று இரட்டை சகோதரிகள் அசத்தல்

மலப்புரம், ஏப்.5:

கேரளம் மாநிலம் மலப்புரம் மாவட்டம் எடக்கரா அடுத்த சுங்கத்தாரா அருகே மணாலி பகுதியை சேர்ந்தவர் பாபு. இவரது மனைவி சிந்து. இவர்களது மகள்கள் அஞ்சனா (30 வயது), அர்ச்சனா (30 வயது). இரட்டை சகோதரிகள் ஆவர். இருவருக்கும் திருமணமாகி விட்டது. பிறப்பு முதல் இருவரும் சேர்ந்து பயணித்த நிலையில் அரசு தேர்வுக்கும் ஒன்றாக தயாராகி, எழுதி தேர்ச்சியடைந்து தற்போது வேலையையும் பெற்று அசத்தியுள்ளனர்.

அஞ்சனா கல்லூரியில் அறிவியல் பாடம் எடுத்து எம்.எஸ்சி., எம்.எல்.டி. படித்துள்ளார். அர்ச்சனா, பொறியியல் படித்துள்ளார். தொடர்ந்து இருவரும் அரசு வேலையில் சேரும் கனவுடன் கேரளம் பொதுசேவை ஆணைய தேர்வுக்கு (PSC) கஷ்டப்பட்டு படித்து தயாராகி வந்தனர். அதன்படி சமீபத்தில் நடந்த தேர்வை எழுதினர். இதைத் தொடர்ந்து வெளியான தேர்வு முடிவில் அவர்கள் தேர்ச்சி பெற்று தரவரிசை பட்டியலில் இடம்பிடித்தனர்.

இந்த நிலையில் அவர்கள் அரசு வேலையில் நியமிக்கப்பட்டுபணி ஆணையை பெற்றுள்ளனர். அதன்படி அஞ்சனா கோழிக்கோடு அரசு மருத்துவ கல்லூரியில் ஆய்வக தொழில்நுட்ப வல்லுனராக நியமிக்கப்பட்டுள்ளார். அர்ச்சனா, திரூரில் உள்ள சப்ளை -கோ கிடங்கில் உதவி விற்பனையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இதனால் இரட்டை சகோதரிகள் மற்றும் அவரது பெற்றோர் மகிழ்ச்சியடைந்துள்ளனர். அவர்களுக்கு உறவினர்கள், நண்பர்கள் என பல்வேறு தரப்பினரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

## எதிர்க்கட்சிகளின் நோக்கம் வீக் புதுச்சேரி: எமது நோக்கம் பெஸ்ட் புதுச்சேரி - பிரதமர் மோடி

புது டெல்லி, ஏப்.5:

பிரதமர் மோடி தனது எக்ஸ் தள பதிவில் கூறியிருப்பதாவது:- புதுச்சேரியில் நடைபெற்ற சாலை பேரணி மிகச்சிறப்பாக அமைந்தது. புதுச்சேரி மக்கள் தேசிய ஜனநாயக கூட்டணி அரசை மீண்டும் தேர்ந்தெடுக்க முடிவு செய்துவிட்டனர், இதன்மூலம் பெஸ்ட் புதுச்சேரியை உருவாக்கும் எங்கள் தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப நாங்கள் தொடர்ந்து பணியாற்றுவோம். சாலை பேரணியில் பெண்களும், இளைஞர்களும் அதிக எண்ணிக்கையில் பங்கேற்றதாக பிரதமர் கூறினார். கடந்த முறை நான் புதுச்சேரிக்கு வந்திருந்தபோது பல்வேறு முக்கிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. ஊரக பகுதிகளில் 41 சாலைகளின் கட்டுமானம், புதுச்சேரியில் ஒரு பாரம்பரிய நகரத்தின் உருவாக்கம், சதுப்புநில காடுகளை மீட்டெடுத்தல் மற்றும் குடிநீர் விநியோக மேம்பாடு உள்ளிட்டவை இதில் அடங்கும். இந்த பணிகள் அனைத்தும் உரிய காலத்தில் நிறைவடைவதை இந்த இரட்டை எஞ்சின் அரசு உறுதி செய்யும் என தெரிவித்தார்.

தேசிய ஜனநாயக கூட்டணி பெஸ்ட் புதுச்சேரியை உருவாக்க பாடுபடும் வேளையில், எதிர்க்கட்சிக்கு புதுச்சேரியின் முன்னேற்றம் குறித்து எந்தத் தொலைநோக்கு பார்வையும் இல்லை. அவர்கள் மக்களின் விருப்பத்திற்கு செவிசாய்ப்பதற்கு பதிலாக, புதுச்சேரியை ஒரு ஏடிஎம் போல பயன்படுத்தி, தில்லியில் உள்ள உயர் தலைமை ஆட்சியின் கீழ் அது இருப்பதை உறுதி செய்ய விரும்புகிறார்கள்.

சில நாட்களுக்கு முன், நான் புதுச்சேரி பிஜேபி வாக்குச்சாவடி முகவர்களுடன் உரையாடி கொண்டிருந்தேன். அப்போது எமது கட்சியின் செயல்வீரர் ஒருவர், எதிர்க்கட்சியின் நோக்கம் ஒரு WEAK புதுச்சேரியை உருவாக்குவதே என்று மிக சரியாகவே கூறினார் என்று மோடி தெரிவித்தார். அவர் WEAK என்று கூறியதன் பொருள் இதுதான்:

W- மோசமாக நிர்வாகம் செய்தல்

E- வளர்ச்சிக்கு முடிவு கட்டுதல்

A - மக்களுக்கு எதிராக இருத்தல்

K- பொருளாதாரத்தை அழித்தல்

இவ்வாறு அதில் தெரிவித்தார்.

## மதுவிலக்கு அமலில் இருந்த போதிலும் பீகாரில் பயங்கரம்: கள்ளச்சாராயத்திற்கு 4 பேர் பலி

பாட்னா, ஏப்.5:

பீகார் மாநிலம், கிழக்கு சம்பாரன் மாவட்டத்தின் மோதிஹாரி உள்ள துர்கௌலியா மற்றும் ரகுநாத்பூர் பகுதிகளில் கடந்த வியாழக்கிழமை இரவு அங்கு உள்ள மக்கள் கள்ளச்சாராயம் குடித்துள்ளனர். இதில் கலக்கப்பட்டிருந்த மெத்தனால் அல்லது தொழிற்சாலை ஸ்பிரிட் காரணமாக விஷத்தன்மை ஏற்பட்டு இருக்கலாம் என தெரிகிறது. இந்த நிலையில் கள்ளச்சாராயம் குடித்த சில மணி நேரத்திலேயே பாதிக்கப்பட்டவர்களுக்கு கடுமையான வாந்தி, மயக்கம், தலைவலி மற்றும் பார்வை இழப்பு ஏற்பட்டுள்ளது.

உடல்நலம் பாதிக்கப்பட்ட பலர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இதில் ஏழு பேர் சிகிச்சைக்கு பிறகு டிஸ்சார்ஜ் செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவித்தனர். ஆனால் இதுவரை இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தற்போது நான்காக உயர்ந்துள்ளதாக கிழக்கு சம்பாரன் மாவட்ட ஆட்சியர் சௌரப் ஜோர்வால் தெரிவித்தார். இந்த சம்பவம் அறிந்த போலீசார் உடனடியாக தீவிர விசாரணையை தொடங்கினர். முதற்கட்டமாக கடமையில் கவனக்குறைவாக இருந்ததாக கூறி, துர்கௌலியா காவல் நிலைய பொறுப்பு அதிகாரி மற்றும் கிராம காவலர் ஆகியோர் உடனடியாகப் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.மேலும் இந்த சம்பவம் தொடர்பாக கிராம காவலர் உட்பட 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஆட்சியர் சௌரப் ஜோர்வால் தெரிவித்தனர். கள்ளச்சாராயம் விநியோகம் செய்ததாக கருதப்படும் முக்கிய குற்றவாளி மீது கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டதாகவும்.மேலும் மாவட்ட காவல்துறை மற்றும் மதுவிலக்கு அதிரடிப்படை குழுவினர் அந்த பகுதிகளில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர். பீகாரில் 2016 முதல் மதுவிலக்கு அமலில் இருந்தாலும், கள்ளச்சாராய விற்பனை மற்றும் அதனால் ஏற்படும் உயிரிழப்புகள் தொடர்ந்து நிகழ்ந்து வருவதாகவும். மேலும் இந்த சம்பவம் மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# சிசிடிவி, ஆன்லைன் செயலிகள் மூலம் ஒவ்வொரு இந்தியரின் பாதுகாப்புக்கும் ஆபத்து: மத்திய அரசை சாடிய ராகுல் காந்தி

புதுடெல்லி, ஏப்.5:

அரசு அலுவலகங்கள் உட்பட முக்கிய இடங்களில் நிறுவப்பட்டுள்ள சீனக் கேமராக்கள் வாயிலாக நடைபெறும் வெளிநாட்டு கண்காணிப்பு மற்றும் ஆன்லைன் செயலிகள் மூலம் ஒவ்வொரு இந்தியரின் பாதுகாப்பும் ஆபத்திற்குள்ளாக்குவதாக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

இந்தியாவை இருளில் வைத்திருப்பதற்கான ஒரு திட்டமிட்ட சதி என்று குற்றம்சாட்டி பேஸ்புக்கில் ராகுல்காந்தி வெளியிட்ட பதிவில், “பொதுமக்கள் பயன்பாட்டிற்கான சீன சிசிடிவி கேமராக்களை அரசு சமீபத்தில் தடை செய்தது. இருப்பினும், அரசு கட்டிடங்களுக்குள் சீனக் கேமராக்கள் தொடர்ந்து நிறுவப்பட்டுள்ளன. தடை செய்யப்பட்ட சீனச் செயலிகள் பெயர்கள் மாற்றப்பட்டு மீண்டும் பயன்பாட்டிற்கு வருகின்றன. வெளிநாட்டு செயற்கை நுண்ணறிவுத் தளங்கள் நம் நாட்டின் முக்கியமான தரவுகளை சேமித்து வருகின்றன. ஆனால் இது குறித்துச் சொல்வதற்கு அரசிடம் எதுவுமே இல்லை.



நாடாளுமன்றத்தில் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்திடம் இந்தக் கேள்விகளை எழுப்பினேன். அதற்கு அளிக்கப்பட்ட பதிலில் ஏராளமான வார்த்தை ஜாலங்கள் இருந்தனவே தவிர, கேட்கப்பட்ட குறிப்பிட்ட கேள்விகளுக்கு எவ்விதப் பதிலும் அளிக்கப்படவில்லை.

நமது நாட்டில் பயன்பாட்டில் உள்ள கேமராக்கள் எந்தெந்த நாடுகளிலிருந்து பெறப்பட்டன? பாதுகாப்பு கண்ணோட்டத்தில் அவற்றில் எத்தனை கேமராக்கள் சான்றளிக்கப்பட்டவை?.எந்தெந்த வெளிநாட்டு ஏஐ தளங்கள் அரசுத் தரவுகளைச் செயலாக்கி வருகின்றன? தடை செய்யப்பட்ட எந்தெந்த செயலிகள் மாற்றப்பட்ட பெயர்களில் தொடர்ந்து இயங்கி வருகின்றன? என்று நான் கேள்வி எழுப்பினேன். ஆனால், அமைச்சகத்தின் பதிலில் எவ்வித புள்ளிவிவரங்களோ, பதில்களோ இல்லை; ஏன், ஒரே ஒரு தளத்தின் பெயர்கூட குறிப்பிடப்படவில்லை. அரசாங்கம் பயன்படுத்தும் பத்து லட்சம் சீனத் தயாரிப்பு கேமராக்கள் தரவுப் பரிமாற்றம் தொடர்பாகப் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை ஏற்படுத்துவதாக ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே ஒப்புக்கொண்ட பிறகும், இன்று நம்மை கண்காணித்து வரும் கேமராக்கள் பாதுகாப்பானவையா இல்லையா என்பதை வெளியிட அரசாங்கம் இப்போதும் தவறிவிட்டது. தனது சொந்தத் தோல்விகளை மறைக்கவும், வெளிநாட்டு கண்காணிப்பின் எதார்த்தத்தை மறைக்கவும் முயற்சிப்பதன் மூலம், மோடி அரசாங்கம் ஒவ்வொரு குடிமகனின் பாதுகாப்பையும் ஆபத்தில் ஆழ்த்தி வருகிறது” என்று ராகுல் காந்தி குற்றம்சாட்டினார்.

மார்ச் 25 அன்று மக்களவையில் ராகுல் காந்தி ஒரு கேள்வியை எழுப்பியிருந்தார். அதற்கு மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் ஜிதின் பிரசாதா பதிலளிக்கையில், டிஜிட்டல் தொழில்நுட்பங்களால் ஏற்படும் இணையப் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் குறித்து இந்திய அரசாங்கம் முழுமையாக விழிப்புணர்வுடன் இருப்பதாகத் தெரிவித்தார். கடந்த 12 ஆண்டுகளில், இந்தியாவின் டிஜிட்டல் சூழலமைப்பை வலுப்படுத்துவதற்காகப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அவர் கூறினார்.

# ஈரான் அணு மின் நிலையம் அருகே தாக்குதல்!



**தெஹ்ரான், ஏப்.5:**

ஈரானில் உள்ள புஷேர் அணு மின் நிலையத்தின் அருகே இன்று காலை நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் அங்குள்ள கட்டிடம் சேதமாகி காவலாளில் ஒருவர் பலியானதாக ஈரான் அணுசக்தி மையம் தனது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளது.

மேலும், முக்கிய கட்டிடங்களுக்கு பாதிப்பில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

இந்த போர்ச்சூழலில் அணு மின் நிலையத்தைக் குறிவைத்து இதுவரை 4 முறை தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

புஷேர் அணுமின் நிலையம் ரஷியாவிடம் இருந்து பெறும் குறைந்த செறிவூட்டப்பட்ட யுரேனியத்தைப் பயன்படுத்தி ஈரானுக்குத் தேவையான 1,000 மெகாவாட் மின்சாரத்தை வழங்குகிறது. இதில், ரஷிய தொழில்நுட்ப வல்லுநர்களும் பணியாற்றுகின்றனர். இது ஈரானின் மின் தேவையில் 1% முதல் 2% வரை பங்களிக்கிறது.

ஈரான் இந்த அணு மின் நிலையத்தை விரிவுபடுத்த முயற்சிகள் எடுத்து வந்தது. இங்கு, கூடுதலாக 2,000 மெகாவாட் தயாரிக்க மேலும் இரு அணு உலைகளை நிறுவ கடந்த 2019-ல் ஈராப் முடிவெடுத்திருந்தது.

இதுமட்டுமின்றி, ஈரான் தென்மேற்கில் உள்ள பெட்ரோகெமிக்கல் மையத்தின் மீது அமெரிக்க-இஸ்ரேல் படைகள் இணைந்து நடத்திய தாக்குதலில் 5 பேர் படுகாயமடைந்த நிலையில் பலியானவர்கள் பற்றிய விவரங்கள் தெரியவில்லை என்று ஈரான் தெரிவித்துள்ளது. மேலும், இதில் சேதத்தின் அளவு இன்னும் கணக்கெடுக்கப்படவில்லை என்றும் அரசு தெரிவித்துள்ளது.

## அமெரிக்க போர் விமானத்தில் இருந்து குதித்த விமானியை பிடித்தால் பரிசு - ஈரான் அறிவிப்பு




**தெஹ்ரான், ஏப்.5:**

ஈரான் மீது அமெரிக்க படை, வான்வழி தாக்குதலில் ஈடுபட்டுள்ளது. இந்நிலையில், தாக்குதல் நடத்த வந்த ஒரு அமெரிக்க போர் விமானத்தில் இருந்து விமானி ஒருவர் ஈரானில் குதித்துவிட்டதாக ஈரான் அரசு தொலைக்காட்சியுடன் இணைந்த ஒரு உள்ளூர் டி.வி. சேனல் அறிவித்துள்ளது. அதுமட்டுமின்றி, அந்த விமானியை உயிருடன் பிடித்து போலீசில் ஒப்படைப்பவருக்கு விலைஉயர்ந்த பரிசு வழங்கப்படும் என்று அந்த சேனலில் தொகுப்பாளர் அறிவித்தார்.

இந்த தகவல் பற்றி கேட்டதற்கு அமெரிக்க வெள்ளை மாளிகையோ, ராணுவ தலைமையகமான பென்டகனோ உடனடியாக எந்த பதிலும் அளிக்கவில்லை. இந்த நிலையில், அமெரிக்க ராணுவம் மீட்பு நடவடிக்கையை தொடங்கியுள்ளது. இதுகுறித்து தகவல் அறிந்த இஸ்ரேல் ராணுவ அதிகாரி ஒருவர், அமெரிக்கா வின் அதிகாரப்பூர்வ அறிவிப்புக்கு முன்பாகவே மீட்பு பணிகள் நடைபெற்று வருவதாக தெரிவித்தார். ஒரு விமானியை அமெரிக்கா மீட்டுள்ளதாகவும் மற்றவரை தேடும் பணி நடப்பதாகவும் சொல்லப்படுகிறது.

## பூமியின் அழகை பாருங்க! விண்வெளியில் இருந்து படம் பிடித்த நாசா குழுவினர்



**வாஷிங்டன், ஏப்.5:**

நிலவுக்கு மீண்டும் மனிதர்களை அனுப்பும் லட்சிய திட்டத்தை அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா மீண்டும் முன்னெடுத்துள்ளது. பல கட்ட சோதனைகளுக்கு பிறகு ஆர்டெமிஸ்-2 திட்டத்தை நாசா வெற்றிகரமாக செயல்ப டுத்தியது. கனடா நாட்டின் விண்வெளி வீரர் உள்பட 4 வீரர்கள் அடங்கிய இந்த குழுவினர் ஒரு நாள் முழுவதும் பூமியைச் சுற்றி வந்து விண்கலத்தின் உயிர் காக்கும் வசதிகளைச் சோதித்தனர்.

பின்னர், 'டிரான்ஸ்லூனார் இன்ஜெக்ஷன்' என்ற என்ஜின் எரிப்பு மூலம் நிலவை நோக்கிச் செலுத்தப்பட்டனர். இவர்கள் நிலவின் மறுபக்கத்தை மிக நெருக்கமாகவும், நேரடியாகவும் காணும் முதல் மனிதர்கள் என்ற சாதனையைப் படைக்க உள்ளனர். இந்த ஒட்டுமொத்த திட்டத்தின் மதிப்பு ரூ.8.64 லட்சம் கோடி ஆகும். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பயணம் 2028-ல் திட்டமிடப்பட்டுள்ள மனிதர்களின் நிலவுத் தரையிறக்கத்துக்கு (ஆர்டெ மிஸ் 4) ஒரு முன்னோட்டமாக அமையும். பின்னர், 'டிரான்ஸ்லூனார் இன்ஜெக்ஷன்' என்ற என்ஜின் எரிப்பு மூலம் நிலவை நோக்கிச் செலுத்தப்பட்டனர். இவர்கள் நிலவின் மறுபக்கத்தை மிக நெருக்கமாகவும், நேரடியாகவும் காணும் முதல் மனிதர்கள் என்ற சாதனையைப் படைக்க உள்ளனர். இந்த ஒட்டுமொத்த திட்டத்தின் மதிப்பு ரூ.8.64 லட்சம் கோடி ஆகும். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பயணம் 2028-ல் திட்டமிடப்பட்டுள்ள மனிதர்களின் நிலவுத் தரையிறக்கத்துக்கு (ஆர்டெ மிஸ் 4) ஒரு முன்னோட்டமாக அமையும். இதனிடையே, நிலவுக்குச் செல்லும் விண்வெளி வீரர்கள், பூமியைப் பிரிந்து செல்லும் வேளையில் அதன் பிரகாசமான நீல அழகைப் படம்பிடித்துள்ளனர். இந்த புகைப்படத்தை நாசா வெளியிட்டுள்ளது. சமூக வலைத்தளங்களில் இந்த புகைப்படம் வைரலாகி வருகிறது.

## தேனி டூ வாஷிங்டன்! அமெரிக்க தலைநகரின் மேயர் போட்டியில் தமிழ்ப் பெண்

**வாஷிங்டன், ஏப்.5:**

அமெரிக்க தலைநகர் வாஷிங்டன் டிசியில் மேயர் தேர்தலில் தேனி மாவட்டத்தைச் சேர்ந்த ரினி சம்பத் போட்டியிடுகிறார்.

அமெரிக்காவின் தலைநகரான வாஷிங்டன் டிசியில் விரைவில் மேயர் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்த நிலையில், வாஷிங்டன் டிசி மேயர் தேர்தலில் போட்டியிடும் முதல் தெற்காசிய பெண் என்ற பெருமையை தேனி மாவட்டத்தைச் சேர்ந்த ரினி சம்பத் பெற்றுள்ளார்.


தமிழகத்தின் தேனி மாவட்டத்தைச் சேர்ந்த ரினி சம்பத் (31), தனது 7-ஆவது வயதில் அமெரிக்காவில் குடிபெயர்ந்தார். மேலும், கடந்த 10 ஆண்டுகளாக தலைநகர் வாஷிங்டன் டிசி-யில்தான் ரினி சம்பத் வசித்து வருகிறார். இவர், வாஷிங்டன் டிசி-யில் மேயர் தேர்தலில் போட்டியிடுவதற்காக 4,500 வாக்காளர்களின் கையெழுத்துகளைப் பெற்று, தேர்தலில் போட்டியிடுவதற்கான தகுதியைப் பெற்றுள்ளார். அதுமட்டுமின்றி, இவர் பெற்றுள்ள கையெழுத்துகளின் எண்ணிக்கை, தேவைப்படும் எண்ணிக்கையைவிட இருமடங்குக்கும் அதிகமாகும்.

இதுகுறித்து, ரினி சம்பத் பேசுகையில், அமெரிக்காவில் கனவைத் தேடிவந்த நான், இப்போது வாஷிங்டன் டிசி மக்களின் தேவைகளுக்காகப் போட்டியிடுவது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. மேலும், அமெரிக்காவின் பொருளாதாரத்தில் தெற்காசிய சமூகம் முக்கிய பங்களித்தாலும், அமெரிக்க அரசாங்கத்தில் தெற்காசிய சமூகத்தின் பிரதிநிதித்துவம் குறைவாகவே உள்ளது. இப்போது, மேயர் தேர்தலில் நான் போட்டியிடுவது, மற்றவர்களுக்கும் ஓர் உந்துதலாக இருக்கும் என்று தெரிவித்தார்.

மேயர் தேர்தலில் போட்டியிடும் ரினி சம்பத், நகரின் அடிப்படைச் சேவைகளுக்கே முன்னுரிமை அளிக்கிறார். சீரான சாலைகள், கழிவுநீர்க் கசிவைத் தடுத்தல், குடிநீர்க் குழாய்கள்,வாழ்க்கைச்செலவைக் குறைத்தல் உள்ளிட்டவையே இவரின் முக்கிய வாக்குறுதிகளாக உள்ளன. வாஷிங்டன் டிசி-யில் வருகிற ஜூன் 16 ஆம் தேதியில் முதன்மைத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றால், நவம்பர் மாதத்தில் நடைபெறும் மேயர் தேர்தலில் வெற்றி பெறும் வாய்ப்பு அதிகம்.

## அமெரிக்க ராணுவத் தலைமைத் தளபதி ராண்டி ஜார்ஜ் பதவி நீக்கம்!

**வாஷிங்டன், ஏப்.5:**



அமெரிக்க ராணுவத்தின் தலைமைத் தளபதி ராண்டி ஜார்ஜ் தனது பதவியை ராஜினாமா செய்யுமாறு அந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

அமெரிக்க ராணுவத்தின் தலைமைத் தளபதியாக, கடந்த 2023 ஆம் ஆண்டு முன்னாள் அதிபர் ஜோ பைடனால் ராண்டி ஜார்ஜ் நியமிக்கப்பட்டார். இதன்மூலம், அந்நாட்டு சட்டங்களின்படி 4 ஆண்டுகளுக்கு அவர் ராணுவ தலைமைத் தளபதியாகப் பதவி வகிப்பார் எனக் கூறப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, ஈரான் மீதான அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் போரால், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பின் நிர்வாகத்தின் மீது பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன. மேலும், அமெரிக்க அரசுக்கு எதிராக மக்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் பீட்டர் ஹெக்சத் கடந்த வியாழக்கிழமை (ஏப். 2) ராணுவத் தளபதி ராண்டி ஜார்ஜை பதவி விலக உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மூத்த இராணுவ அதிகாரிகளின் பதவி உயர்வு குறித்து இருவருக்கும் இடையிலான கருத்து வேறுபாடுகளால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதனால், தலைமைத் துணைத்தளபதி கிறிஸ்டோபர் சி. லானீவ் தற்காலிகமாக ராணுவத் தலைமைத் தளபதியாகப் பதவி வகிப்பார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னதாக, அதிபர் டிரம்ப் நிர்வாகத்தில் அரசு தலைமை வழக்குரைஞராக (அட்டர்னி ஜெனரல்) இருந்த பாம் போண்டி அப்பதவியில் இருந்து விலகுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## குவைத்தில் உள்ள கடல் நீரை குடிநீராக்கும் ஆலை மீது ஈரான் தாக்குதல்

**தெஹ்ரான், ஏப்.5:**

ஈரான் - அமெரிக்க போர் தொடங்கி 5 வாரங்கள் முடிவடைந்துள்ளன. போர் விரைவில் முடிவுக்கு வரும் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறிய போதிலும், நேற்றும் இருதரப்பும் மாறிமாறி தாக்குதலில் ஈடுபட்டன. அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் ஈரான் தலைநகர் டெஹ்ரான் மீதும், அதன் அருகே உள்ள பகுதிகள் மீதும் வான்வழி தாக்குதல் நடத்தின. ஈரான் கராஜ் நகரில் உள்ள பி1 என்ற பாலம் தகர்க்கப்பட்டது.

பாலத்தின் நடுப்பகுதி பிளவுபட்டதால், அதை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. அதேசமயம், வளைகுடா நாடுகள் மீது ஈரான் தொடர்ந்து தாக்குதல் நடத்தியது. குறிப்பாக, குவைத்தில் உள்ள மினா அல்-அஹமதி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை மீது ஈரான் டிரோன் தாக்குதல் நடத்தியது. அதில், அந்த ஆலை தீப்பற்றி எரிந்தது. நல்லவேளையாக யாரும் காயம் அடையவில்லை. தீயணைப்பு வீரர்கள் தீயணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

குவைத்தில் உள்ள கடல்நீரை குடிநீராக்கும் ஆலை மீது ஈரான் டிரோன் தாக்குதல் நடத்தியது. அதில், ஆலையின் சில பாகங்களுக்கு சேதம் ஏற்பட்ட தாக குவைத் உறுதி செய்துள்ளது.குவைத்தின் 90 சதவீத குடிநீர், கடல்நீரை குடிநீராக்குவதன் மூலம்தான் கிடைக்கிறது. அதனால், மக்களின் வாழ்வாதாரத்தை முடக்கும் வகையில், அந்த ஆலைகள் குறிவைத்து தாக்கப்படுகின்றன.

இதுபோல், பஹ்ரைனிலும் ஈரான் தாக்குதல் நடத்தியதால், அதுபற்றி எச்சரிக்க 'சைரன்' ஒலி ஒலித்தபடி இருந்தது. சவுதி அரேபியா மீதும் ஈரான் டிரோன் தாக்குதல் நடத்தியது. ஆனால் அந்த டிரோன்களை அழித்து விட்டதாக சவுதி அரேபியா தெரிவித்தது. இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தியது.

## அமெரிக்கா முன்மொழிந்த 48 மணி நேர போர் நிறுத்தம் - ஈரான் நிராகரிப்பு!



**தெஹ்ரான், ஏப்.5:**

அமெரிக்கா முன்மொழிந்த 48 மணி நேர போர் நிறுத்தத் திட்டத்தை ஈரான் நிராகரித்துவிட்டதாக அந்நாட்டின் 'ஃபார்ஸ்' செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

பிப்ரவரி 28ல் தொடங்கிய அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான போர் பல வாரங்களாக நீடித்து வருகிறது. இந்தப் போரால் மத்திய கிழக்கில் பெரும் பதற்றம் நிலவி வருகிறது. ஹார்முஸ் ஜலசந்தியும் முடக்கப்பட்டதால், உலகம் முழுவதும் எரிபொருள் விலைகள் உயர்வதுடன், தட்டுப்பாடும் அதிகரித்துள்ளது.

இந்த சூழலில், 48 மணி நேர போர் நிறுத்தத்துக்கு ஒரு நட்பு நாட்டின் வாயிலாக, அமெரிக்கா கோரிக்கை வைத்ததாக தகவல் வெளியானது. ஆனால், இது குறித்து அமெரிக்காவிடமிருந்து எந்தக் கருத்தோ அல்லது உறுதிப்படுத்தலோ வெளியாகவில்லை. இந்த சூழலில், அமெரிக்கா முன்மொழிந்த 48 மணி நேர போர் நிறுத்தத் திட்டத்தை ஈரான் நிராகரித்துவிட்டதாக, ஈரானின் 'ஃபார்ஸ்' செய்தி நிறுவனம் தெரிவித்தது.

மத்திய கிழக்கின் தற்போதைய பதற்றமான சூழலுக்கு மத்தியில், ஈரானின் இந்த நிலைப்பாடு, போர் தொடர்ந்து கடுமையடைந்து வருவதை காட்டுகிறது. போரை நிறுத்துவதற்கான ராஜதந்திர முயற்சிகள் தோல்வியடைந்த அதே வேளையில், ராணுவ மோதல்களும் கடுமையாகத் தீவிரமடைந்துள்ளன.

இந்த நிலையில், நேற்று இரண்டு அமெரிக்க விமானங்களை சுட்டு வீழ்த்தியதாக ஈரான் அறிவித்தது. ஈரான் வான் பரப்பில் பறந்த அமெரிக்க விமானப் படை யின் எப் -35 மற்றும் எப்- 15 இ ரக போர் விமானங்களை நேற்று சுட்டு வீழ்த்தியதாக ஈரான் ராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒரு போர் விமானத்தில் இருந்து மீட்கப்பட்ட விமானி உயிருடன் இருப்பதாகவும், அவர் அமெரிக்கப் பாதுகாப்பில் வைக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை பெற்று வருவதாகவும் தகவல்கள் உறுதிப்படுத்தின. எனினும், இரண்டாவது விமானியின் நிலை என்ன என்பது குறித்த தெளிவு இன்னும் ஏற்படவில்லை.

# 20 ஆண்டுகளில் முதல்முறை! அமெரிக்காவின் 2 அதிநவீன போர் விமானங்களைச் சுட்டு வீழ்த்திய ஈரான்!



**தெஹ்ரான், ஏப்.5:**

ஈரான் மீதான தாக்குதலில் ஈடுபட்டிருந்த அமெரிக்காவின் அதிநவீன எஃப்-15 இ மற்றும் ஏ 10 ரகபோர் விமானங்களை, ஈரானிய படைகள் சுட்டு வீழ்த்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பிப். 28 முதல் நடைபெற்று வரும் போரில் ஈரானின் பல்வேறு முக்கிய நகரங்களின் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் படைகள் 12,300-க்கும் அதிகமான வான்வழித் தாக்குதல்கள் நடத்தியுள்ளன.

இந்த நிலையில், அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் கூட்டுத் தாக்குதல்களுக்குப் பதிலடியாக வளைகுடா நாடுகளில் அமைந்துள்ள முக்கிய கட்டமைப்புகள் மீது ஈரானின் படைகளும் தாக்குதல் நடத்தி வருகின்றன.

இதனிடையே, ஈரானின் தென்மேற்கு மாகாணங்களின் மீது தாக்குதல் நடத்த முயன்ற அமெரிக்காவின் அதிநவீன எஃப்-15 இ ஸ்டிரைக் ஈகிள் ரக போர் விமானத்தை கடந்த வெள்ளிக்கிழமை (ஏப். 3) அன்று ஈரானிய படைகள் சுட்டு வீழ்த்தியதாக, அறிவிக்கப்பட்டுள்ளது. இதேபோல், மற்றொரு தாக்குதலில் அமெரிக்காவின் ஏ 10 ரக போர் விமானம் ஒன்றும் சுட்டு வீழ்த்தப்பட்டதாக, ஈரானின் அரசு ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. இதையடுத்து, அந்த போர் விமானங்களில் இருந்து அவசரமாக வெளியேறிய விமானிகளில் ஒருவரை அமெரிக்க மீட்புப் படைகள் மீட்டுள்ளன. மேலும், மற்றொரு விமானத்தின் விமானியைத் தேடும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகிறது.

இத்துடன், தேடுதல் பணிகளில் ஈடுபட்டு வரும் அமெரிக்க ஹெலிகாப்டர்கள் மீது ஈரானின் படைகள் தாக்குதல் நடத்த முயன்றதாகவும், உயிர் பிழைத்த விமானியைக் கண்டுபிடித்து ஒப்படைக்க அந்நாட்டு அரசு மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் கூறப்படுகிறது. முன்னதாக, அமெரிக்காவின் அதிநவீன போர் விமானங்கள் அதிக தூரம் வேகமாகப் பயணித்து தாக்குதல் நடத்தும் திறன் வாய்ந்தவை. இறுதியாக, கடந்த 2003 ஆம் ஆண்டு இராக் மீதான படையெடுப்பின்போது அமெரிக்காவின் அதிநவீன போர் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.



# இந்தித் திணிப்பை ஏற்கிறதா அதிமுக, என்டிஏ கூட்டணிக் கட்சிகள்?



# “எல்டிஎஃப் அரசை அகற்ற கவுன்டவுன் தொடங்கிவிட்டது” கேரளாவில் பிரதமர் மோடி

## சாத்தான்குளம் வழக்கில் 9 போலீஸாருக்கும் அதிகபட்ச தண்டனை: மத்திய அரசு மனுவில் தகவல்

## வேட்பாளர் பட்டியலில் ஏன் பெயர் இல்லை..? பா.ஜ.க. முன்னாள் தலைவர் அண்ணாமலை விளக்கம்

## பெரம்பூரில் விஜய் சார்பில் திருத்தப்பட்ட வேட்புமனு தாக்கல்!


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 05.04.2026 ஞாயிற்றுக்கிழமை இலவச இ–பேப்பர்